# அரசிறை முகாமைத்துவ அறிக்கை 2020-21

## கௌரவ மஹிந்த ராஜபக்ஷ, பா.உ.

## நிதி அமைச்சர்

## 2020 நவம்பர் 17 ஆம் திகதி

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்தின் கீழ், அரசிறை உபாயக் கூற்று - 2021 (4,5 மற்றும் 6 ஆம் பிரிவுகளுக்கிணங்க) வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2021 7,8 மற்றும் 9 ஆம் பிரிவுகளுக்கமைவாக கௌரவ நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுகிறது.

ISBN 978-955-0814-33-6

கொழும்பு 08, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தையில், இல 118 இல் அமைந்துள்ள அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு இலங்கை, கொழும்பு 01, லோட்டஸ் வீதியில் அமைந்துள்ள நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டது.

# உள்ளடக்கம்

பக்கம்

**முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள்** **vii**

**2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள்** **viii**

**இணக்கப்பாடு – 2020** **ix**

## பகுதி I

**அரசிறை மூலோபாய கூற்று - 2021** **xii**

**01. நடுத்தரக் கால அரசிறை மூலோபாயம்** **01**

1.1 மேன்நோக்கு 03

1.2 நடுத்தரகால அரசிறை உபாயங்கள் 04

1.3 மறுசீரமைப்பு முன்னெடுப்புக்கள 07

1.4 உலக பொருளாதார நிலைமைகளும் இலங்கையில் அதன் தாக்கமும் 21

## பகுதி II

**வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2021** **18**

**01. அரசிறை அபிவிருத்திகள், திறைசேரி செயற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்பு** **19**

1.1 மேன்நோக்கு 21

1.2 அரசாங்க வருமானம் 24

1.3 அரசாங்க செலவினம் 42

1.4 திறைசேரி செயற்பாடுகள் 45

1.5 வெளிநாட்டு நிதியளிப்பு 46

**02. உலக சூழலில் பொருளாதாரம்** **53**

2.1 மேன்நோக்கு 55

2.2 பொருளாதார வளர்ச்சி 55

2.3 நாணயத் துறை அபிவிருத்திகள் 66

2.4 பங்குச் சந்தை 68

2.5 வெளியகத் துறை அபிவிருத்திகள் 69

2.6 உலக பொருளாதார நோக்கு 73

**03. அரச உடமை வியாபார தொழில் முயற்சிகளின் செயலாற்றுகை** **75**

3.1 மேன்நோக்கு 77

3.2 முக்கிய 10 அரச உடமை வியாபார தொழில் முயற்சிகளின் சுருக்க மீளாய்வு 77

**04. 2020 - 21 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட அடிப்படைகள்** 85

## அட்டவணைகள்

பக்கம்

### பகுதி I

**அட்டவணை 1.1** நடுத்தரக்கால பேரண்ட அரசிறைச் சட்டகம் - 2020 இலிருந்து 2025 வரை 05

### பகுதி II

**அட்டவணை 1.1** ஆரசிறை செயற்பாடுகளின் சுருக்கம் 22

**அட்டவணை 1.2** மதிப்பிடப்பட்ட, உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - 2020 23

**அட்டவணை 1.3** அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம் 25

**அட்டவணை 1.4** வருமான வரியின் செயலாற்றுகை 26

**அட்டவணை 1.5** பெறுமதி சேர் வரியின் செயலாற்றுகை 26

**அட்டவணை 1.6** உற்பத்தி வரியின் செயலாற்றுகை 27

**அட்டவணை 1.7** மோட்டார் வாகன இறக்குமதி, மற்றும் புதிய வாகனப் பதிவு 28

**அட்டவணை 1.8** சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி / இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பெறுமதி 28

**அட்டவணை 1.9** தேச கட்டுமான வரி, முத்திரை வரி மற்றும் மோட்டார் வாகன பதிவுக் கட்டணம் ஆகியவற்றின் செயலாற்றுகை 29

**அட்டவணை 1.10** சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம் 30

**அட்டவணை 1.11** அரசாங்க வருமான வேறுபாட்டிற்கான பகுப்பாய்வு (2020 ஜனவரி – ஆகஸ்ட் வரையில்) 30

**அட்டவணை 1.12** அரசாங்க செலவின செயலாற்றுகை 42

**அட்டவணை 1.13** அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2019 – 2020 43

**அட்டவணை 1.14** நலனோம்பல் செலவினம் 44

**அட்டவணை 1.15** அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று 45

**அட்டவணை 1.16** தேறிய உள்நாட்டு பெறுகைகள் (மூலங்கள் அடிப்படையில்) 46

**அட்டவணை 1.17** நியதிகளுடனான வெளிநாட்டு நிதியளிப்பு உறுதியளிப்புக்கள் - 2020 ஜனவரி - ஆகஸ்ட் வரையில் 47

**அட்டவணை 1.18** வெளிநாட்டு கடன்கள் மற்றும் நிதி உதவிகளின் நிதிப்பகிர்வுகள் - 2020 ஜனவரி – ஆகஸ்ட் வரையில் 51

**அட்டவணை 2.1** மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2010 நிலையான விலைகள்) 56

**அட்டவணை 2.2** சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள் 62

**அட்டவணை 2.3** சுற்றுலாத் துறையின் செயலாற்றுகை 64

**அட்டவணை 2.4** மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான பகிர்வு (%) 64

**அட்டவணை 2.5** தலைக்குரிய பணவீக்கம், மைய பணவீக்கம், உணவுப்பணவீக்கம் (அடிப்படை: 2013 = 100) 67

**அட்டவணை 2.6** மூலதனச் சந்தை அசைவுகள் 68

**அட்டவணை 2.7** வெளிநாட்டு வர்த்தகம் 69

**அட்டவணை 2.8** உலக பொருளாதாரத்தின் பிரதான குறிகாட்டிகள் – 2019 74

**அட்டவணை 3.1** மின்னுற்பத்தி கொள்ளளவு வகுதி 79

**அட்டவணை 3.2** அரச உடமை வியாபார தொழில் முயற்சிகளின் இலாபத்தன்மை 81

**அட்டவணை 3.3** அரச உடமை தொழில் முயற்சிகளின் அறவீடு/ பங்கிலாப வருமானம் 83

## வரைபுகள்

பக்கம்

### பகுதி II

**வரைபு 1.1** மொத்த வருமானத்தின் வகுதி (2020 ஜனவரி – ஆகஸ்ட் வரையில்) 24

**வரைபு 1.2** வருமான மூலங்கள் அடிப்படையில் மொத்த வருமானம் (2020 ஜனவரி - ஆகஸ்ட்) 24

**வரைபு 1.3** உற்பத்தி வரியின் செயலாற்றுகை (2020 ஜனவரி - ஆகஸ்ட் வரையில்) 27

**வரைபு 1.4** சாதன அடிப்படையில் மொத்த தேறிய உள்நாட்டு பெறுகைகள் (2020 ஜனவரி - ஆகஸ்ட் வரையில்) 46

**வரைபு 1.5** அபிவிருத்தி பங்காளர்களினால் உறுதியளிக்கப்பட்ட துறைரீதியான பகிர்வுகள் (2020 ஜனவரி - ஆகஸ்ட் வரையில்) 52

**வரைபு 1.6** 2020 ஆகஸ்ட் அன்று உள்ளவாறு கடன் வழங்கியோர் ரீதியாக கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு பயன்படுத்தப்படாத மீதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) 52

**வரைபு 1.7** 2020 ஆகஸ்ட் அன்று உள்ளவாறு அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் துறை ரீதியாக பகிரப்பட்டு பயன்படுத்தப்படாத மீதி 52

**வரைபு 2.1** மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 56

**வரைபு 2.2** மொத்த உள்நாட்டு உற்பத்தி வகுதி - முதல் காலாண்டு 2020 56

**வரைபு 2.3** விவசாயத்துறை வகுதி - முதல் காலாண்டு 2020 59

**வரைபு 2.4** கைத்தொழில் துறை வகுதி - முதல் காலாண்டு 2020 60

**வரைபு 2.5** தயாரிப்புத் துறை வகுதி - முதல் காலாண்டு 2020 60

**வரைபு 2.6** சேவைத் துறை வகுதி - முதல் காலாண்டு 2020 61

**வரைபு 2.7** வேலையின்மை 65

**வரைபு 2.8** நாணய சராசரி, தனியார் துறை கடன் வளர்ச்சி, விளைவு விகிதங்கள் 66

**வரைபு 2.9** தலைக்குரிய பணவீக்கம், மைய பணவீக்கம், உணவுப் பணவீக்க அசைவுகள் (அடிப்படை: 2006/07 = 100) 68

**வரைபு 2.10** வர்த்தக மீதி, நாணயமாற்று வீத சராசரி அசைவுகள் 70

**வரைபு 2.11** ஏற்றுமதிகளின் வகுதி 71

**வரைபு 2.12** இறக்குமதிகளின் வகுதி 71

## கட்டங்கள்

**கட்டம் 1** வருமான வரி கட்டமைப்பு (2020 ஒற்றோபர் இறுதி வரையில் உள்ளவாறு) 08

**கட்டம் 2** கொவிட்-19 இனால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தாக்கத்திற்கான கொள்கை ரீதியிலான எதிர்வினைகள் 13

**கட்டம் 3** பிரதான அரசிறை செயற்பாடுகள் (2020 ஜனவரி – செப்தெம்பர் வரையில்) 33

## பின்னிணைப்புகள்

**பின்னிணைப்பு I** திறைசேரியினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் விபரம் - 2020 செப்தெம்பர் 91

**பின்னிணைப்பு II** பேரண்டப் பொருளாதார குறிகாட்டிகள் 93

**பின்னிணைப்பு III** வருமான மதிப்பீடுகளுக்கான ஊகங்கள் - 2021 103

## முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள்

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | 2019 | 2020 |
| **மெய்த் துறை** | | | | |
| பொருளாதார வளர்ச்சி | முதல் காலாண்டு | % | 3.7 | -1.6 |
| விவசாயம் | முதல் காலாண்டு | % | 5.0 | -5.6 |
| கைத்தொழில் | முதல் காலாண்டு | % | 3.9 | -7.8 |
| சேவைகள் | முதல் காலாண்டு | % | 3.7 | 3.1 |
| பணவீக்கம் (புள்ளிக்குப் புள்ளி) | செப் இறுதி | % | 5.0 | 4.0 |
| பணவீக்கம் (சராசரி) | செப் இறுதி | % | 3.9 | 4.7 |
| வேலையின்மை வீதம் | முதல் காலாண்டு | % | 4.7 | 5.7 |
| தொழிற்படைப் பங்கேற்பு வீதம் | முதல் காலாண்டு | % | 52.6 | 51.0 |
| **அரசிறைத் துறை** | | | | |
| வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை | சன - ஆகஸ் | ரூபா. பில். | -721.00 | -975.00 |
| மொத்த வருமானம் | சன - ஆகஸ் | ரூபா. பில். | 1,205.00 | 906.00 |
| வரி வருமானம் | சன - ஆகஸ் | ரூபா. பில். | 1,105.00 | 801.00 |
| வரியல்லாத வருமானம் | சன - ஆகஸ் | ரூபா. பில். | 100.00 | 105.00 |
| மொத்த செலவினம் | சன - ஆகஸ் | ரூபா. பில். | 1,927.00 | 1,884.00 |
| மீண்டெழும் செலவினம் | சன - ஆகஸ் | ரூபா. பில். | 1,500.00 | 1,670.00 |
| அரசாங்க முதலீடு | சன - ஆகஸ் | ரூபா. பில். | 435.00 | 228.00 |
| அரசாங்க படுகடன் | ஜூலை இறுதி | ரூபா. பில். | 12,646.00 | 14,261.00 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | |
| ஏற்றுமதிகள் | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில் | 8,030.00 | 6,445.00 |
| விவசாய ஏற்றுமதிகள் | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில் | 1,667.00 | 1,516.00 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில் | 6,330.00 | 4,906.00 |
| புடவை மற்றும் ஆடைகள் | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில் | 3,737.00 | 2,853.00 |
| ஏனையவை | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில் | 2,594.00 | 2,053.00 |
| இறக்குமதிகள் | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில் | 12,886.00 | 10,257.00 |
| நுகர்வுப் பொருட்கள் | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில் | 2,499.00 | 2,300.00 |
| இடைநிலைப் பொருட்கள் | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில் | 7,380.00 | 5,692.00 |
| அதில் பெற்றோலிய உற்பத்திகள் | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில் | 2,577.00 | 1,691.00 |
| முதலீட்டுப் பொருட்கள் | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில் | 3,002.00 | 2,253.00 |
| வர்த்தக மீதி | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில் | -4,855.00 | -3,812.00 |
| சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை | சன - செப் | எண். | 1,376,312 | 507,311 |
| சுற்றுலாத்துறை சம்பாத்தியங்கள் | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 2,594.00 | 956.00 |
| தொழிலாளர்களின் பண அனுப்புகை | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 4,930.00 | 5,049.00 |
| முதலீட்டுப் பங்குகள் (தேறிய) | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில் | 15.00 | த.இ. |
| மொத்த சென்மதி நிலுவை | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 789.00 | த.இ. |
| மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் | செப் இறுதி | ஐ.அ.டொ.மில் | 7,635.00 | 6,653.00 |
| நாணய மாற்று விகிதம் (இறுதி மாதம்) | செப் இறுதி | டொலர்/ரூபா | 181.92 | 185.52 |
| நாணய மாற்று விகிதம் (மாதாந்த சராசரி) | சன - செப் | டொலர்/ரூபா | 180.77 | 185.03 |
| **நாணயத்துறை** | | | | |
| நிலையான வைப்பு வசதி விகிதம் (SDFR) | செப் இறுதி | % | 7.00 | 4.50 |
| நிலையான கடன் வசதி விகிதம் (SLFR) | செப் இறுதி | % | 8.00 | 5.50 |
| நியதிச்சட்ட ஒதுக்க தேவைப்பாடு (SRR) | செப் இறுதி | % | 5.00 | 2.00 |
| அடிப்படை கடன் விகிதமிடப்பட்ட வர்த்தக வங்கிச் சராசரி (AWPR) | செப் இறுதி | % | 10.49 | 6.19 |
| இலங்கையின் வங்கிகளுக்கிடையில் வழங்கல் விகதம் (SLIBOR) (ஒரு மாதம்) | ஜூன் இறுதி | % | 8.52 | 6.05 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகதம் (91 நாட்கள்) | செப் இறுதி | % | 7.62 | 4.51 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகதம் (364 நாட்கள்) | செப் இறுதி | % | 8.41 | 4.88 |
| நாணய வழங்கல் வளர்ச்சி (M2b) | ஆகஸ் 2019/ஆகஸ் 2020 | % | 7.7 | 17.5 |
| தனியார் துறை கடன் வளர்ச்சி | ஆகஸ் 2019/ஆகஸ் 2021 | % | 7.0 | 5.2 |

## 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள்

| பிரிவு | தேவைப்பாடு | உள்ளடக்கங்கள் | இணக்கப்பாடுகள் |
|---|---|---|---|
| பிரிவு 4, 5 மற்றும் 6 | அரசிறை உபாயக் கூற்று சமர்ப்பிப்பு* | அரசின் அரசிறைக் கொள்கைகளின் பால் மக்கள் விழிப்பூட்டலை அதிகரிப்பதற்கு அரசிறை உபாயக் கூற்று மற்றும் அரசாங்கத்தின் அரசிறை உபாய மதிப்பீட்டுச் செயற்பாட்டு நியமங்களின் ஸ்தாபிப்பு | பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. |
| பிரிவு 7, 8 மற்றும் 9 | அரசிறை உபாயக் கூற்று மற்றும் வரவு செலவுத்திட்ட பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையினை மதிப்பிடுவதற்கான அடிப்படையினை உருவாக்குவதற்கான அரசிறை உபாயக் கூற்று மற்றும் வரவு செலவுத்திட்ட பொருளியல் மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை. | பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. |
| பிரிவு 10, 11 மற்றும் 12 | நடுத்தரக்கால அரசிறை நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அதேபோல் ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்ளும்வகையில் உரிய வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான நடுத்தரக்கால அரசிறை நிலைமை அறிக்கை | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் நிறைவேற்றுகையின் திகதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் அல்லது யூன் மாதம் இறுதித் தினம் வருடாந்தம் வெளியிடப்பட வேண்டியுள்ளதுடன் இத்திகதிகளில் எத்திகதி பிந்தியதாக இருந்தபோதும் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பிரிவு 13, 14 மற்றும் 15 | இறுதி வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அதேபோல் ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்ளக் கூடிய வகையில் உரிய வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் அரசிறைச் செயலாற்றுகையின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) | நிதி ஆண்டு முடிவடைந்ததிலிருந்து ஐந்து மாதங்களுக்குள் பொது மக்களின் பார்வைக்காக வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பிரிவு 16,17,18 மற்றும் 19 | தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு ** | தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை நாட்டின் அரசிறை நிலைமை பற்றிய தகவல்களைத் தருகின்றது. | பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்துவதாக அறிவித்த திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்விலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. |

* நிதி அமைச்சரினால்

** நிதி அமைச்சின் செயலாளரினால்

| **இணக்கப்பாடுகள் - 2020** |
| --- |
| • **தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை - 2020** ஆனது 2020 மார்ச் மாதம் 23ஆம் திகதி பொதுமக்களுக்காக வெளியிடப்பட்டு உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. |
| • **இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை - நிதி அமைச்சின் ஆண்டறிக்கை - 2019**<br>இவ்வறிக்கையானது 2019 ஆம் ஆண்டின் அரசிறை மற்றும் பொருளாதார நிலைமையினைக் குறிப்பிடுவதுடன், 2020 மே மாத இறுதியில் பொது மக்களுக்காக வெளியிடப்பட்டு உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. |
| • **அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை - 2020,** இவ்வறிக்கையானது 2020 ஆம் ஆண்டு யூன் மாதத்தின் இறுதியில் பொது மக்களுக்காக வெளியிடப்பட்டதுடன், அதன் பின்னர் உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. |
| **இந்த அரசிறை முகாமைத்துவ அறிக்கை - 2020-21 இல் அடங்கியுள்ள விடயம் :**<br><br>• **நிதி அமைச்சின் அரசிறை உபாயக்கூற்று - 2021,** முழுமையாக அரசிறைக் கொள்கையினை அமுல்படுத்துவதற்கு முக்கியமாகக் கருதப்படும் பிரதான அரசிறை அளவீடுகள் மற்றும் பரந்த உபாய முன்னுரிமைகள் குறிப்பிடப்பட்டு அரசாங்கத்தின் நடுத்தர கால அரசிறை உபாயம் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிதி அமைச்சின் அரசிறை உபாயக் கூற்றானது, ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| • **நிதி அமைச்சின் வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2021** அரசாங்கத்தின் வருமானம், செலவினம் மற்றும் அரச படுகடன்கள் முதலியவற்றுடன் தொடர்புடைய மதிப்பீடுகளுடன் அரசிறை உபாயத்திற்கேற்ப அரசாங்க அரசிறை செயலாற்றுகைகளை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படைகள் உருவாக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையானது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

# பகுதி I

## அரசிறை மூலோபாயக் கூற்று – 2021

### 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் கீழ் கௌரவ நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்டது.

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4,5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் கீழ் அரசாங்கத்தின் அரசிறை உபாய அறிக்கையினை பொதுமக்களுக்கு சமர்ப்பிப்பதுடன் பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் நிதி அமைச்சர் வேண்டப்பட்டதற்கிணங்க இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையானது, வரவு செலவுத்திட்டத்தை அடிப்படையாகக் கொள்ளப்பட்டதும் அரசாங்கம் உபாயமாக கடைபிடிக்க வேண்டிய முக்கிய விடயங்களையும், செயற்படுத்த வேண்டியுள்ள முழு மொத்த அரசிறை கொள்கையினையும் கவனத்திற் கொண்டும் குறிப்பீடு செய்யப்பட்ட பிரதான அரசிறை நடவடிக்கைகள் தொடர்பில் விரிந்த உபாய முன்னுரிமைகளையும் தெளிவுபடுத்துகின்றது.

# நடுத்தரகால அரசிறை மூலோபாயம் 01

### 1.1 மேன் நோக்கு

முதலில் 2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தோன்றிய கொவிட்-19 தொற்று நோயின் இரண்டாவது அலை, இந்த அறிக்கையைத் தொகுக்கும் நேரத்தில் இந்நாட்டை தாக்கியுள்ளது. இவ் உலகளாவிய தொற்றுநோயின் இத்தகைய அசாதாரண தன்மை, 'முடக்குதல்', 'வெகுஜன தனிமைப்படுத்தல்' மற்றும் 'சமூக இடைவெளி' போன்ற ஒரு நடத்தை ரீதியான மாற்றத்திற்கு உலகைத் தூண்டியுள்ளது. 2020 அக்டோபர் மாத முடிவில், 189 நாடுகள் / பிராந்தியங்கள் 51.4 மில்லியனுக்கும் அதிகமான தொற்றுநோயாளர்களைக் கொண்டிருந்ததோடு 1.2 மில்லியன் இறப்புகளை[1] சந்தித்து இருந்தன. கொவிட்-19 நோயின் தாக்கத்தை இலங்கையினால் தவிர்க்க முடியாமல் போனாலும் நாடு அதனைக் கட்டுப்படுத்துவதில் செயலூக்கமாக உள்ளது, அந்த வகையில், மருத்துவ மற்றும் சுகாதார நோக்கு மட்டுமன்றி வாழ்வாதாரங்கள் மற்றும் வியாபாரங்களுக்கு உதவுதல் மற்றும் பராமரித்தல் மற்றும் பண்டக சேவை வலையமைப்புக்களின் தடங்கலற்ற தொழிற்பாட்டினை உறுதி செய்தல் போன்றவற்றை உள்ளடக்கிய பல துறை அணுகுமுறையை எடுத்துள்ளது.

மார்ச் மாத இறுதியில் இலங்கை முழு பூட்டுதல் நடவடிக்கைகளை அமுல்படுத்தியது. இது படிப்படியாக மே மாதத்தில் அகற்றப்பட்டதோடு நாடு ஒரு "புதிய இயல்பு" நிலைமையின் கீழ் இயங்கத் தொடங்கியது. ஒரு புதிய அரசாங்கத்தை உருவாக்கிய பொதுத் தேர்தல்கள் 2020 ஆகஸ்ட் மாதம் சுகாதார வழிகாட்டுதல்களின் கீழ் நடைபெற்றது. இருந்தபோதிலும் 2020 அக்டோபரில் இறுதிப் பகுதியில் மினுவாங்கொட மற்றும் பேலியகொட ஆகிய முக்கிய இரண்டு கொத்தணிகளது. இனங்காணலின் பின்னர் இயல்பு மாற்றத்துடன் கட்டுப்பாடுகள் மீள நடைமுறைப்படுத்தப்பட்டன.

முழுமையான முடக்கல் நிலை, வெகுஜன தனிமைப்படுத்தல் நடைமுறைகள், விநியோகச் சங்கிலிகளை கடுமையாக சீர்குலைத்துள்ளன. இதன் விளைவாக உலகின் கிட்டத்தட்ட அனைத்து பொருளாதாரங்களிலும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டது, இவ் வீழ்ச்சி இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகப் பொருளாதாரத்தினை 2008-09 நிதி நெருக்கடியை விட மிக மோசமான மந்தநிலைக்கு இட்டுச் செல்லும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. வழங்கல் மற்றும் கேள்வி இரண்டினதும் அழுத்தங்களைப் பிரதிபலிக்கும் வகையில், சர்வதேச நாணய நிதியத்தின் உலக பொருளாதார நோக்கு (2020 அக்டோபர்) அறிக்கையானது, 2020 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரம் சுமார் 4.4 சதவீதத்தால் சரிவடையும் என எதிர்வு கூறியுள்ளதுடன், அமெரிக்கா தனது பொருளாதாரத்தில் 4.3 சதவீத சுருக்கத்தினையும், ஐரோப்பிய பொருளாதாரம், அதன் மிகப்பெரிய பொருளாதாரமான ஜேர்மனியின் 6.0 சதவீத பொருளாதார வீழ்ச்சியுடன் சராசரியாக 8.3 சதவீத வீழ்ச்சியையும், இந்தியா 10.3 சதவீத சரிவையும் ஜப்பான் 5.3 சதவீத சுருக்கத்தினையும் சந்திக்க நேரிடும் அதே சமயம் சீனா 1.9 சதவீத நேர்மறையான வளர்ச்சியைக் கொண்டிருக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், பொருளாதாரம் 4.5 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியைப் பதிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் கொவிட்-19 தொற்று நோயின் தாக்கம் மற்றும் 2015 முதல் 2019 வரையான மந்தமான வளர்ச்சி காரணமாக, 2021 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி திருத்தப்பட்டு மீளவும் 2020 ஆம் ஆண்டில் 5.0 சதவீதமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கிடையில், பொருளாதார குறிகாட்டிகள் 2020 ஜூலை முதல் செப்டம்பர் 2020 வரை "V வடிவ" மீட்சியை சுட்டிக்காட்டுகின்றன.

2019 ஆம் ஆண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.8 சதவீதமாக அறிக்கையிடப்பட்ட அரசிறைப் பற்றாக்குறையில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 2.8 சதவீதமாக இருந்த நிலுவைத் தொகையை காட்டப்படவில்லை. ஆகவே பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.6 சதவீதமாக இருந்திருக்கும். வாக்குப் பணக் கணக்கில் வரம்புகள் இருந்தபோதிலும், 2019 ஆம் ஆண்டின் முடிவில் நிலுவைத் தொகைகள் தீர்க்கப்பட்டுள்ளன. மத்திய அரசாங்கத்தின் கடன் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 86.7 சதவீதமாக உயர்ந்துள்ளதோடு அதில் பாதியளவு வெளிநாட்டு நாணயத்தில் படிநிலையாக்கப்பட்ட கடனாகும்.

ஒட்டுமொத்த கேள்வியை அதிகரிப்பதற்கு இலங்கை அரசிறை மற்றும் நாணயக் கொள்கை ஊக்குவிப்பினைப் பின்பற்றியது. எவ்வாறாயினும், 2019 நவம்பரில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம், பதவிக்கு வந்த ஒரு மாதத்திற்குள், வளர்ச்சியைத் தூண்டும் முயற்சியில் குறைந்த வரி விகிதங்களுடன் நாட்டிற்குள் கொவிட்-19 பரவலுக்கு முன்னரே எளிய வரி முறையுடன் குறைவான வரிகளை அறிமுகப்படுத்தி வரிக் கொள்கையில் பெரும் மாற்றங்களை முன்னெடுத்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 1.5 சதவீதத்தினைக் கொண்ட இத்தகைய ஆரம்பகால அரசிறை நடவடிக்கைகள், கொவிட்-19 இலங்கையை

1 ஜோன் கோப்கின்ஸ் வள நிலையம், 2020 ஒக்டோபர் 25 இல் http://coronovirus.jhc.edu/map.htm இணையத்தளமூடாக தகவல் பெறப்பட்டது.

பாதித்த போது சுகாதார மற்றும் வாழ்வாதார உதவி நடவடிக்கைகள் தவிர ஒரு பாரிய அரசிறை ஊக்குவிப்புப் பொதியின் தேவையைத் தவிர்க்கச் செய்தன.

2020 மார்ச் முதல், கொள்கை விகிதங்கள் 250 அடிப்படை புள்ளிகளால் குறைப்பு , நியதிச் சட்ட ஒதுக்கு தேவைகள் தொகை 2.00 சதவீதமாகக் குறைப்பு மற்றும் வியாபாரங்களுக்கு குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன் மீள்கொடுப்பு காலத்தை பிற்போடல் என்பன போன்ற நாணயக் கொள்கையும் திரவத்தன்மையை அதிகரிக்கும் முகமாக மீளமைக்கப்பட்டது. பணவீக்கமானது 2020 ஆம் ஆண்டில் 4-6 சதவிகித வீச்சில் இருக்குமாறு இலக்கிடப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொண்ட ஒரு அரசாங்கத்துடனான அரசியல் ஸ்திரத்தன்மையுடன் வியாபார நம்பிக்கை மேம்பட்டுள்ளதோடு அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் மூலம், நாட்டில் முடிவெடுக்கும் பணியில் ஜனாதிபதிக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

உலகளாவிய மற்றும் உள்நாட்டு சந்தைகளில் தற்போதைய இயக்கவியல்களானது, அரசாங்கத்தின் வருவாய் மற்றும் செலவினங்களையும் மற்றும் ஒட்டுமொத்த அரசிறை மற்றும் நாணய ஒருங்கிணைப்பினையும் சமநிலைப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க சவால்களை உருவாக்கியுள்ளது. ஒரு யதார்த்தமான அரசிறை ஒன்றுதிரட்டல் செயல்முறைக்கு உதவுவதில் எளிமையான மற்றும் செயல்படுத்த இலகுவான ஒரு வரி முறையை உருவாக்கும் அதே நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் உறுப்பினர்களுக்கு புதிய வாகனங்கள் மற்றும் அலுவலக கட்டடங்கள் வழங்கப்படாமை போன்ற அணுகுமுறையுடன் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட செலவிடல் செயற்பாடானது ஒரு கொள்கை அடித்தளமாக விளங்கியுள்ளது. இது சம்பந்தமாக, நாட்டில் வியாபாரத்தை மேற்கொள்ளல் மற்றும் பெறுமதி உருவாக்கல் ஆகியவற்றின் செயல்திறனை மேம்படுத்தும் முகமாக தற்போதுள்ள நிதி ஒழுங்குவிதிகள், காணிக் கொள்கைகள் அனைத்தையும் மறுபரிசீலனை செய்கின்ற அதே நேரத்தில் அரசாங்க கொள்முதல் நடவடிக்கையில் உள்நாட்டு விருப்பத்தேர்வுகள் முதல் இலத்திரனியல் மூலமான கொள்முதல் போன்ற சீர்திருத்தங்களை அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ளது. மறுசீரமைப்புக்களின் அரசிறைத் தாக்கங்கள் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் எதிர்பார்த்தபடி பொருளாதாரத்தை புதுப்பிக்க முக்கியமான கருவிகளாக இருப்பதோடு 2021 முதல் அதிகரித்த விளைவையும் ஏற்படுத்தும்.

சமீபத்திய முன்னேற்றங்களுடன், அரசாங்கம் 2021-2025 நடுத்தர கால பேரண்ட அரசிறைச் சட்டகத்தினை மீளமைத்துள்ளது. இது 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் நிலுவைக் கொடுப்பனவுகளைத் தவிர்த்து அரசிறைப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.9 சதவீதத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.2 சதவீதத்திலிருந்து 2021 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 சதவீதமாக பொது முதலீடுகளை அதிகரிக்க போதுமான அரசிறை இடைவெளியை வழங்குவதினால் 2021 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசிறைப் பற்றாக்குறை 8.8 சதவீதமாக அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.0 சதவீதமாக அரசிறைப் பற்றாக்குறை குறைப்பதற்கு சிக்கன செலவின ஒழுங்கமைப்புடன் இணைந்த மேம்படுத்தப்பட்ட வருமான செயற்பாடுகள் உதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பின்னணியில், "செழுமையின் சிறப்பு" கொள்கை ஆவணத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள கொள்கைகளுக்கு ஏற்ப உயர்ந்த மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு, பொருளாதார மறுமலர்ச்சியை அடைவதை நோக்கமாகக் கொண்ட ஒரு நடுத்தர கால பேரண்ட-அரசிறை மூலோபாயத்தை அரசாங்கம் வடிவமைத்துள்ளது. இந்தக் கொள்கை தேசிய பாதுகாப்பை மையமாகக் கொண்டுள்ளது மட்டுமன்றி உள்ளூர் தொழில்முனைவோரை வலுப்படுத்தும் அதே வேளையில் தேசிய வளங்களில் மக்களின் உரிமையையும் உறுதி செய்கிறது. சிறந்த பெறுமதி சேர்க்கைக்கான சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளின் உற்பத்தி மேம்பாடுகளும் இதில் அடங்கும்.

### 1.2 நடுத்தரகால அரசிறை மூலோபாயம்

அரசாங்கத்தின் அரசிறை நடவடிக்கைகள், 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் நியதிகளுக்கு அமைவாக அமைக்கப்பெற்றுள்ளது. இது நடுத்தர கால பேரண்ட அரசிறை சட்டகத்தில் பரந்த அடிப்படையிலான வளர்ச்சி நோக்கங்களுக்கு ஒத்துழைப்பதற்காக அரசிறைப் பற்றாக்குறைகள் மற்றும் தொடர்புடைய படுகடன்களை அகற்றுவதற்கான சட்டரீதியான சட்டகத்தினை வழங்குகிறது. அரசாங்கத்தின் ஏனைய பிரதான நடுத்தர கால அரசிறை நோக்கங்களுடனான, 2025 ஆம் ஆண்டில் நிதி பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.0 சதவிகிதமாகவும் படுகடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அண்ணளவாக 75.1 சதவீதமாகவும் கட்டுப்படுத்துவதாக இருக்கும்.

**அட்டவணை 1.1 :** நடுத்தரக்கால பேரண்ட அரசிறைச் சட்டகம் - 2020 இலிருந்து 2025 வரை

ரூ.மில்லியன்

| குறிகாட்டி | தற்காலிக | மதிப். | மதிப். | | எதிர்வு கூறல்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
| **வருமானம் மற்றும் மானியம்** | **12.6** | **9.5** | **10.7** | **12.1** | **12.5** | **13.3** | **14.2** |
| **மொத்த வருமானம்** | **12.6** | **9.5** | **10.6** | **12.0** | **12.5** | **13.3** | **14.2** |
| **வரி வருமானம்** | **11.6** | **8.5** | **9.4** | **10.5** | **10.9** | **11.6** | **12.5** |
| வருமான வரி | 2.8 | 1.9 | 2.1 | 2.2 | 2.4 | 2.6 | 3.0 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் | 6.5 | 4.0 | 4.5 | 5.3 | 5.5 | 5.9 | 6.3 |
| வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள் | **2.2** | **2.5** | **2.8** | **2.9** | **3.0** | **3.1** | **3.2** |
| **வரியல்லா வருமானம்** | **1.0** | **1.0** | **1.3** | **1.5** | **1.6** | **1.7** | **1.7** |
| **மானியங்கள்** | **0.1** | **0.0** | **0.1** | **0.1** | **0.05** | **0.04** | **0.04** |
| **மொத்த செலவினம்** | **22.2** | **17.5** | **19.5** | **18.4** | **18.0** | **17.9** | **18.3** |
| **மீண்டெழும் செலவினம்** | **16.1** | **14.9** | **14.2** | **13.5** | **12.9** | **12.5** | **12.3** |
| சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 4.6 | 5.0 | 4.9 | 4.7 | 4.4 | 4.3 | 4.1 |
| பொருட்கள் சேவைகள் | 1.2 | 1.0 | 1.1 | 0.8 | 0.7 | 0.7 | 0.8 |
| வட்டி | **6.0** | **5.4** | **4.9** | **4.9** | **4.7** | **4.7** | **4.7** |
| உதவு தொகைகள் மற்றும் மாற்றல்கள் | **4.4** | **3.5** | **3.3** | **3.2** | **3.0** | **2.8** | **2.8** |
| **மூலதன செலவினம் மற்றும் தேறிய பெறுகைகள்** | **6.1** | **2.6** | **5.3** | **4.9** | **5.1** | **5.4** | **5.9** |
| பொது முதலீடுகள் | 6.2 | 2.6 | 5.4 | 5.0 | 5.2 | 5.5 | 6.0 |
| **நடைமுறைகணக்கு மீதி** | **-3.6** | **-5.4** | **-3.6** | **-1.5** | **-0.4** | **0.8** | **1.9** |
| **ஆரம்ப மீதி** | **-3.6** | **-2.5** | **-3.9** | **-1.4** | **-0.7** | **0.0** | **0.6** |
| **வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை** | **-9.6** | **-7.9** | **-8.8** | **-6.4** | **-5.4** | **-4.6** | **-4.0** |
| **பற்றாக்குறை நிதியளிப்பு** | **9.6** | **7.9** | **8.8** | **6.4** | **5.4** | **4.6** | **4.0** |
| வெளிநாட்டு நிதியளிப்ப (தேறிய) | 3.6 | -1.4 | 0.5 | -0.2 | 0.1 | -0.1 | -0.1 |
| உள்நாட்டு தேறிய நிதியளிப்பு (தேறிய) | 6.0 | 9.3 | 8.3 | 6.5 | 5.4 | 4.8 | 4.1 |
| **மத்திய அரசாங்கத்தின் படுகடன் (மொ.உ.உ %)** | **86.8** | **95.1** | **96.3** | **92.4** | **88.1** | **82.3** | **75.5** |

மூலம் : அரசிறை கொள்கைத் திணைக்களம், தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களம்

*2020 செப்தெம்பர் இறுதியில் காணப்படுகின்ற தகவல்களை அடிப்படையாக கொண்ட கணிப்பீடுகள்

நடுத்தர கால பேரண்ட அரசிறை சட்டகத்திற்கு அமைவாக, 2021-2025 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் முன்னுரிமைகளாவன:

- பொருளாதார வளர்ச்சியை 6.0 சதவீதம் அல்லது அதற்கு உயர்வான மட்டத்தில் அடைதல்.
- வேலைவாய்ப்பின்மையை 4 சதவீதத்திற்கு குறைவான மட்டத்தில் பராமரித்தல்.
- பணவீக்கத்தினை 5 சதவீதத்திற்கு மிகையாகாது பேணுதல்.
- 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் 14 சதவீதத்திற்கு மேல் வருமானத்தினை மேம்படுத்துதல்.
- உற்பத்தித்திறனற்ற செலவினங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் வரவுசெலவு திட்டத்தினை நிலையான வழியில் செலுத்துதல்.
- வரவுசெலவு திட்ட பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதத்திற்கு குறைவான மட்டத்தில் வைத்திருத்தல்.
- 2025 ஆம் ஆண்டளவில் மற்றும் அதற்கு அப்பால் முதன்மை மிகையை அடைதல்.
- 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசாங்கப் படுகடனை 75.1 வீதாசாரத்திற்குக் குறைத்தல்.
- தனி இலக்க வட்டி விகிதத்தினை உறுதிப்படுத்தல்.
- ரூபாயின் நிலையான பரிமாற்று பெறுமதியை பராமரித்தல்.

ஒரு பொருளாதாரத்தில் வளர்ச்சிக்கு மிக அவசியமான தேவையை நிவர்த்தி செய்வதற்காக அரசிறை மூலோபாயம் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, தனியார் துறை முதலீடுகளை பூர்த்தி செய்ய உள்கட்டமைப்பு தொடர்பான முதலீடுகள் நீண்டகாலமாக தேவைப்படுவதன் பின்னணியில், அரசாங்க முதலீடானது 2021 - 2025 காலகட்டத்தில் ஆண்டுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 5.0-6.0 சதவீதத்தில் பராமரிக்கப்படல் வேண்டும்.

கிராமப்புற மற்றும் நகர்ப்புற சாலைகள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகளை உள்ளடக்கிய 100,000 கி.மீ சாலை திட்டங்களுடன் இணைப்பை உறுதி செய்வதிலும், குழாய் மூலம் நீர் கிடைப்பதை 75 சதவீதமாக இரட்டிப்பாக்குவதிலும், வேளாண்மை மற்றும் கைத்தொழில்களில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் நேரடி தாக்கம் செலுத்தக்கூடிய விவசாயத்திற்கான நீர் விநியோகத்தை உறுதி செய்வதிலும், தொழில்களுக்கான உள்கட்டமைப்பை வழங்குவதிலும் அரசாங்க முதலீடு கவனம் செலுத்துகின்ற அதே நேரத்தில் பிரதான முதலீட்டாளரின் பங்கை அரசாங்கம் எடுத்துக் கொண்டு வாழ்க்கைத் தர மேம்பாட்டுடன் பிரதான முதலீட்டாளர் என்ற வகிபாகத்தையும் அரசாங்கம் முதன்மையாக எடுத்துக் கொண்டுள்ளது. அரசாங்கத்தின் பொது முதலீட்டில் அண்ணளவாக 75 சதவீதம் உள்நாட்டு மூலங்களில் இருந்து நிதியளிக்கப்படும்.

மீண்டெழும் செலவினங்களை ஒழுங்குபடுத்தற்கான அரசாங்க மூலோபாயம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.2 சதவிகிதத்திலிருந்து 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 12.3 சதவிகிதம் வரை நடுத்தர காலத்திற்குள் தொடர்கிறது. இத்தகைய மூலோபாயத்தில் வாகனங்கள் மற்றும் கட்டடங்கள் மற்றும் பிற சொத்துக்களை வாங்குவதற்கான செலவினங்களை முடக்குவது, முக்கிய அமைப்புகளின் எண்ணியல் (டிஜிட்டல்) மயமாக்கல் மற்றும் இலத்திரனியல் கொள்முதல் மற்றும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட செயல்முறைகள் ஆகியவை செலவு ஒழுங்குமுறைப்படுத்தற்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பின்னணியில், 2021 ஆம் ஆண்டில் வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 9.5 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், வரி இயலளவின் சாத்தியமான வளர்ச்சியின் விளைவாக 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இது 14.2 சதவீதமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய மூலோபாயத்தை பூர்த்தி செய்ய, வருமான திரட்டலில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க ஏற்கனவே பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வருமான மேம்பாடு என்பது வரி கொள்கை மறுசீரமைப்புக்கள் மற்றும் பல ஆண்டுகளாக கவனிக்கப்படாதிருந்த வருவாய் நிர்வாக மறுசீரமைப்புக்களை ஒன்றிணைக்கும் ஒரு விரிவான மூலோபாயத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, பல்வேறு வரிக் கருவிகளின் இணைப்பு (உதாரணமாக: துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டு விகிதத்தை அதிகரித்தல் மற்றும் தேச கட்டுமான வரியை நீக்குதல்) தேச கட்டுமான வரி, உழைக்கும் போது செலுத்தும் வரி மற்றும் பிடித்து வைத்தல் வரி போன்ற செலுத்த வேண்டிய வரிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வரிவிதிப்பு முறைமை எளிமைப்படுத்தல் ஆகியவை இதில் உள்ளடங்குகின்றன. மேலும், உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்தில் பாரியளவில் வரி செலுத்துவோர் பிரிவை நிறுவுதல், இடர்வு அடிப்படையிலான கணக்காய்வு, முகாமை, ஆளுகை மற்றும் மனிதவள அபிவிருத்தி மற்றும் உள்நாட்டு அரசிறை திணைக்களத்தில் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை உள்ளடங்கலாக வருமான நிர்வாகத்தின் இயலளவினை அதிகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை சுங்கம் ஏற்கனவே “ஒற்றை சாளர அமைப்பு” முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளதோடு தேசிய ஒற்றை சாளர முறைமையில் செயல்பட்டு வருகிறது. திறைசேரியில் உள்ள ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் அமைப்பு 45 நிறுவனங்களில் ஆரம்பித்துள்ளதுடன் மேலும் இது சுமார் 200 நிறுவனங்களுக்கு விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வரி மிதப்பு நடுத்தர காலத்தில் மேம்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுடைமை தொழில்முயற்சி நிறுவனங்களில் மறுசீரமைப்புக்கள் அரசிறை மூலோபாயத்தின் முக்கிய அம்சமாகும். இந் நிறுவனங்களின் முகாமை சபைகளுக்கு தகுதியான தொழில்வான்மை உள்ளோரை நியமிப்பதற்கான அரசாங்கத்தின் கொள்கை ஏற்கனவே பலன்களைத் தந்துள்ளது. உற்பத்தித்திறன் மேம்பாடுகள், மூலோபாயமற்ற வர்த்தக ரீதியான அரசுடைமை தொழில்முயற்சிகளின் உரிமையின் பரந்த அடிப்படையானது செலவினங்களைக் குறைப்பதில் அரசிறை இடைவெளிக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படும் அதே நேரத்தில் வரி அல்லாத வருவாய் மற்றும் படுகடன் அல்லாத நிதியளிப்புக்கள் போன்றன அரசாங்க செலவினத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும். இருப்பினும், பலவீனமாக உள்ள உலகளாவிய பொருளாதாரத்தின் போக்கு மற்றும் நடுத்தர கால பேரண்ட அரசிறை வேலைச்சட்டகத்தின் இலக்குகள் மற்றும் எதிர்பார்ப்புகள், இலங்கை பொருளாதாரத்தின் மீதான நிச்சயமற்ற தன்மை என்பவற்றிற்கிடையில் அரசிறை மூலோபாயத்தை செயற்படுத்துவதில் கொவிட்-19 தொற்று நோய் தொடர்ந்து பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

## 1.3 மறுசீரமைப்பு முன்னெடுப்புக்கள்

இன்றைய தேவைகளுக்கு ஏற்ப நிறுவன, நிர்வாக, சட்டவாக்க மற்றும் இயலளவு மேம்பாடு உள்ளிட்ட மற்றும் சர்வதேச தரங்களை பூர்த்தி செய்வதற்காக வரிவிதிப்பு, செலவின முகாமைத்துவம், பொது நிறுவனங்கள், பெறுகை மற்றும் கொள்கை மேம்பாடுகள் போன்ற துறைகளை உள்ளடக்கிய பலவிதமான மறுசீரமைப்புக்களை செயல்படுத்த அரசாங்கம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

### வரி மறுசீரமைப்புக்கள்

இலங்கையின் தொலைநோக்கு வரிச் சீர்திருத்தம் 2019 ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு சாத்தியமாகியது. இது புதிய அரசாங்கத்திற்கு பொருளாதாரத்தை புதுப்பிக்கவும், வரி இணக்கத்தினை அதிகரிக்கும் அதேவேளை எவ்வித விட்டுக்கொடுப்பும் இன்றி ஊழலுக்கு எதிராக போராடவும் ஆணையை வழங்கியது. எளிமைப்படுத்தப்பட்ட வரி முறைமை, குறைக்கப்பட்ட விகிதங்கள் மற்றும் சொற்ப வருமானத்தை ஈட்டித் தந்த சில வரிகள் நீக்கப்பட்டமை போன்றவை மறுசீரமைப்பின் மூலக்கல்லாக அமைந்தன. இது வரி நிர்வாகத்தை குறைந்த சவாலுடன் செயற்படுத்த உதவியாக இருக்கும்.
வரி செலுத்தலை எளிதாக்கும் பொருட்டு இலத்திரனியல் வரி கோப்பு முறைமையை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. வரி முறைமைக்கு தொழில்நுட்ப பாவனை மேம்பட்ட வினைத்திறனை வழங்குவதோடு ஊழலுக்கான வாய்ப்புகளை குறைக்கிறது.

வரி கட்டமைப்பை எளிமையாக்க பல வரிகள் அகற்றப்பட்டன: பொருளாதார சேவை கட்டணம் படுகடன் கொடுப்பனவு அறவீடு மற்றும் தேச கட்டுமான வரி ஆகியவை நீக்கப்பட்டன. தனிநபர் வருமான வரி இல்லாத கொடுப்பனவு ஆண்டுக்கு ரூ. 500,000 இலிருந்து ஆண்டுக்கு ரூ. 3 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டது. முன்னேற்ற வரி விகிதத்தை 6 சதவீதமாக, 12 சதவீதமாக அதிகபட்சமாக 18 சதவீதமாகவும் மாற்றியமைக்கும் அதேநேரம் வரி அடுக்கு ஆண்டுக்கு ரூ. 600,000 இலிருந்து ஆண்டுக்கு ரூ.3 மில்லியன் வரையில் திருத்தியமைக்கப்பட்டது.
நியமமான தாபன வருமான வரி விகித கட்டமைப்பு 28 சதவீதத்திலிருந்து 24 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. பொருட்களின் ஏற்றுமதி, சுற்றுலா, கல்வி, சுகாதாரம், கட்டுமானம் மற்றும் வேளாண்மை செயலாக்கம் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்திற்கு 14 சதவீதமும் தயாரிப்புத் துறையிலிருந்து கிடைக்கும் வருமானத்திற்கு 18 சதவீதமும் சலுகை விகிதம் ஏற்புடையதாகும். மதுபானம், புகையிலை மற்றும் பந்தயம் மற்றும் சூதாட்டம் ஆகியவற்றின் மீது 40 சதவீத உயர் வரி விகிதம் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிப்பதற்காக முக்கிய துறைகளாகிய வேளாண்மை, தகவல் தொழில்நுட்பம், வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானம் ஆகியவற்றிற்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டன.

அனைத்து வகை மதுபானம் மற்றும் சிகரெட்டுகளுக்கான பெறுமதி சேர் வரி குறைப்பு மற்றும் அத்தகைய பொருட்களுக்கு பொருந்தக்கூடிய தேச கட்டுமான வரி நீக்கப்பட்டமை காரணமாக ஏற்பட்ட வருமான இழப்பினை ஈடுசெய்வதற்காக சில்லறை விலைகளை அதே மட்டத்தில் பராமரிக்கும் வேளையில் உற்பத்தி வரியில் அதிகரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இறக்குமதி நடவடிக்கைகளில் இருந்து தேச கட்டுமான வரியை அகற்றுவதன் தாக்கம் நியமமான துறைமுக மற்றும் விமான நிலைய அறவீட்டு விகிதத்தினை 7.5 சதவீதத்திலிருந்து 10.0 சதவீதமாக மாற்றியமைப்பதன் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும், மூலப்பொருட்கள், சுத்திகரிக்கப்படாத பெட்ரோலிய எண்ணெய் மற்றும் எரிபொருள்கள், இடைநிலை பொருட்கள் மற்றும் முதலீட்டு பொருட்களின் இறக்குமதிகளுக்கு நிவாரணமளிக்க 2.5, 5.0 மற்றும் 7.5 சதவீதங்களைக் கொண்ட மூன்று அடுக்கு சலுகை விகிதங்கள் வழங்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து வழங்கப்பட்ட அரசிறைத் தூண்டுதலுக்கு மேலதிகமாக, அனைவருக்கும் நிவாரணம் வழங்கும் அதே நேரத்தில் கொவிட்-19 பரவலை எதிர்த்து போராடுவதற்காக விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அரசிறை நடவடிக்கைகளாக, கொவிட்-19 பரவலுக்கு எதிரான போராட்டத்திற்கு ஒத்துழைப்பதற்காக 2020 ஏப்ரல் 16 ஆம் திகதி முதல் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சிற்கு நன்கொடையாக வழங்கப்படும் பாதுகாப்பு கவசங்களின் இறக்குமதிக்கு துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், முதலீட்டு சபை நிறுவனங்களால் தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ஒத்த தயாரிப்புகளை சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு, சுகாதார சேவைகள் திணைக்களம், முத்தரப்பு படைகள் போன்றவற்றுக்கு வழங்குவது சுங்கத் தீர்வை, பெறுமதிசேர் வரி, துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு மற்றும் செஸ் உள்ளிட்ட அனைத்து வரிகளிலும் ஏப்ரல் முதல் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. குறித்த உபகரணங்கள் மற்றும் ஒத்த தயாரிப்புகளின் கிடைப்பனவை உறுதி செய்யும் வகையில் 2020 ஏப்பிரல் 29ஆம் திகதி முதல் இது பயன்வலுப் பெற்றுள்ளது. சர்வதேச எரிபொருள் விலைகளின் வீழ்ச்சியைக் கருத்தில் கொண்டு, பெட்ரோலிய பொருட்களின் இறக்குமதி

தொடர்பான சுங்க இறக்குமதி தீர்வை திருத்தப்பட்டு, பெட்ரோலிய பொருட்களின் இறக்குமதி மீதான சுங்க மேலதிக கட்டணம் அதிகரிக்கப்பட்டது. மேலதிக கட்டணம் மூலம் கிடைக்கும் வருமானம் சர்வதேச எண்ணெய் விலைகள் சரிவினால் ஏற்படும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டது.

**கட்டம் 1 :** வருமான வரி கட்டமைப்பு (2020 ஒற்றோபர் இறுதி வரையில் உள்ளவாறு)

| விபரம் | வரி விகிதம் (%) |
|---|---|
| **தனியாட்கள்** | |
| இலங்கையின் வதிவோர் மற்றும் வதியாதோர் பிரஜைகளுக்கான வரி அற்ற கொடுப்பனவு | ரூபா. 3,000,000 |
| வரி விதிக்கத்தக்க வருமானம் மீதான வரி | |
| முதல் ரூபா 3,000,000 | 6 |
| அடுத்து வரும் ரூபா 3,000,000 | |
| மிகுதிக்கு | |
| **2020.04.01 முதல் செயல்வலுப் பெறுமாறு முன்கூட்டிய தனியாள் வருமானத்தின் அறிமுகம் (ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலை தொழில்)** | |
| ஒரு மாதத்திற்கான தனிநபர் நிவாரணம் (வதிவாளரல்லாத பிரஜையல்லாதவர் தவிர) | ரூபா. 250,000 |
| வரி விதிக்கத்தகு வருமானம் மீதான வரி | |
| முதல் ரூபா 250,000 | 6 |
| அடுத்து வரும் ரூபா 250,000 | 12 |
| மிகுதிக்கு | 18 |
| **வேலையிலிருந்து முடிவுறுத்தல் நன்மைகள் (மாற்றப்பட்ட ஓய்வூதியம்இ ஓய்வு பெறலுக்கான பணிக்கொடைஇ ஊழியர் நம்பிக்கை நிதியம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட இழப்பீடு)** | |
| **சலுகை விகிதங்கள்** | |
| முதல் ரூபா 10 மில். | 0 |
| அடுத்து வரும் ரூபா 10 மில். | 6 |
| மிகுதிக்கு | 12 |
| **அலுவலக இழப்புக்கான இழப்பீடு, ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து செலுத்துதல் (ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி அல்ல) அல்லது பிற கொடுப்பனவுகள் அல்லது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படாத பிற கொடுப்பனவுகள் அல்லது ஓய்வூதிய பணமல்லாத நன்மை ஆகியவற்றுடன் தனிநபர்களுக்கு பொருந்தும் நிலையான விகிதங்கள்.** | |
| **பந்தயம் மற்றும் சூதாட்டம் அடங்கிய வணிகம், ஏதேனும் மதுபானம் அல்லது புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பும் விற்பனையும் அல்லது இறக்குமதியும் விற்பனையும்** | 40 |
| **தாபன வருமான வரி** | |
| **நியம விகிதம்** | |
| அனைத்து கம்பனிகளும் (விசேட விகிதங்களில் வரி விதிக்கப்படும் கம்பனிகள் தவிர) | 24 |
| சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி நிறுவனங்கள், பொருட்கள் மற்றும் பொறுப்பேற்புக்கள் ஏற்றுமதி சுற்றுலா மேம்பாடு, கட்டுமான சேவைகள், வேளாண்மை செயலாக்கம், சுகாதார நலன் மற்றும் கல்விச் சேவைகள் | 14 |
| தயாரிப்புக் கைத்தொழில் | 18 |
| விவசாயம், கடற்றொழில், கால்நடைவளர்ப்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் இயக்கப்பட்ட சேவைகள் | விலக்களிப்பு |
| வியாபாரம், வங்கித்தொழில், நிதி, காப்புறுதி (நியம விகிதம்) | 24 |
| பந்தயம் மற்றும் சூதாட்டம் | 40 |

**கட்டம் 1 :** வருமான வரி கட்டமைப்பு (2020 ஒற்றோபர் இறுதி வரையில் உள்ளவாறு)

| விபரம் | வரி விகிதம் (%) |
|---|---|
| ஏதேனும் மதுபானம் அல்லது புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பும் விற்பனையும் அல்லது இறக்குமதியும் விற்பனையும் | 40 |
| **பங்காண்மைகள்** | |
| மீதி வரி விதிக்கத்தக்க வருமானம் (ரூபா 1,000,000 இற்கு மேற்படாத) | 0 |
| ரூபா 1,000,000 இற்கு மேற்பட்ட (ரூபா 1,000,000 இன் மிகை மீது) | 6 |
| **நம்பிக்கை அலகுகள் அல்லது பரஸ்பர நிதியங்கள்** | |
| மூலதன ஈட்டு வரிகள் அல்லாத வருமானம் | 24 |
| **அறக்கொடை நிறுவனங்கள்** | |
| மூலதன ஈட்டு வரிகள் அல்லாத வருமானம் | 14 |
| **அரச சார்பற்ற நிறுவனங்கள்** | |
| மூலதன ஈட்டு வரிகள் அல்லாத வருமானம் | 24 |
| மானியங்கள், கொடைகள் அல்லது பங்களிப்புக்களில் 3% | 24 |
| **ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம், ஓய்வூதிய நிதிகள் அல்லது முடிவுறுத்தல் நிதியங்கள்** | 14 |
| **மூலதன ஈட்டு வரிகள் மீதான வருமானம்** | 10 |

## வரி நிருவாகத்தில் மறுசீரமைப்புக்கள்

அதிக வரி வருவாய் திரட்டல், மேம்படுத்தப்பட்ட வரி செலுத்துவோர் இணக்கம் மற்றும் வினைத்திறனான சேவை வழங்கல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான நிறுவன மறுசீரமைப்புக்களை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. வரி நிர்வாகத்தை நவீனமயமாக்குவது வரி முறையின் செயல்திறனை அதிகரிப்பதற்கான கொள்கை நடவடிக்கையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. வரி நிர்வாகத்திற்கு தொழில்நுட்பத்தை உட்செலுத்துதல் ”வரி இடைவெளியை” அல்லது வரி செலுத்துவோர் இணக்கமின்மையைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வரி விகிதங்களைக் குறைத்தல் மற்றும் வரி முறையின் சிக்கலான தன்மையைக் குறைத்தல் ஆகியவற்றுடன் தன்னார்வ இணக்கத்தை ஊக்குவித்தல், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பாரியளவில் வரி செலுதுதுவோர் பிரிவு போன்ற வரி செலுத்துவோரின் வருவாய் திறனை அடிப்படையாகக் கொண்ட வரி விதிப்பு போன்றவை ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வரி செலுத்துவோர் பதிவு, வரி வருமானம் மற்றும் கட்டண செயல்முறை, தாமதித்த வரிகள், வரி கணக்காய்வுகள் மற்றும் அபராதங்களை வசூல் செய்தல், வரி செலுத்துவோர் சேவைகள் மற்றும் மனித வள அபிவிருத்தி ஆகியவை முன்னேற்றத்திற்கான பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. பதிவுசெய்தல், தாக்கல் செய்தல் மற்றும் வரி செலுத்துதல் மற்றும் இடர்வு அடிப்படையிலான கணக்காய்வு ஆகியவற்றிற்கான தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான முறைமைகள், மேம்பட்ட சேவை வழங்கல் ஊடாக தன்னார்வ வரி செலுத்துவோர் இணக்கம் எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதான மறுசீரமைப்புக்களின் ஒரு பகுதியாக பாரிய வரி நிர்வாக பிரிவு, மேல்நிலை தாபன அலகு, நடுத்தர தாபன அலகு மற்றும் பிராந்திய தாபன அலகு போன்ற வரி செலுத்துவோர் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கிடையில், உள்நாட்டு இறைவரி திணைக்களமானது வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையின் இரண்டாம் கட்டத்தினை விரைவாக தொடங்க உள்ளது. இலங்கை மதுவரி திணைக்களமானது, சாத்தியமான வருவாயைப் பாதுகாத்துக்கொள்ள வருமான இடர்வு முகாமைத்துவ முறைமை மற்றும் மதுவரி வருமான முகாமைத்துவ முறைமை ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இலங்கை சுங்கம், இலங்கை முதலீட்டு சபை நிறுவனங்களுக்கு தங்கள் சரக்குகளின் கப்பலேற்றத்தை விரைவுபடுத்துவதற்காக காகிதமற்ற பொருட்கள் விடுவிப்பு முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளது. ஊடுருவல் பரீட்சிப்புக்களின் அளவினைக் குறைக்கும் அதே வேளையில், சட்டரீதியான வர்த்தகத்தை எளிதாக்குவதற்காக அனைத்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கலன்களையும் ஸ்கேன பரீட்சிப்பு செய்வது 2020 செப்டம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டுள்ளது. கெரவலப்பிட்டியில் ஒரு நிலத்தை முழுமையாக சுங்கப் பரீட்சிப்புக்கு அரசு ஒதுக்கியுள்ளதுடன், சரக்குகளின் விடுவிப்பினை விரைவுபடுத்துவதற்காக தானியங்கி கொள்கலன் பரீட்சிப்பு முறைமை தொடங்கப்பட உள்ளது.. உலக வர்த்தக ஸ்தாபனத்தின் இலகு வியாபார உடன்படிக்கையின் நடவடிக்கைகளின் அமுல்படுத்தலுக்கு இணங்க, இலங்கை சுங்கமானது “ஒற்றை சாளரம்” முறைமையை இயக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதற்கிடையில், பொதுத் திறைசேரி அதன் தொழில்பாட்டு முறைமையான ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ

தகவல் முறைமையை 2020 ஜனவரி மாதத்தில் ஆரம்பித்துள்ளது.

### அரசாங்க செலவின முகாமைத்துவம்

பொது செலவினங்களையும் வருவாயையும் மூலோபாய முன்னுரிமைகளுடன் சமநிலைப்படுத்த அரசாங்கம் உறுதியளித்துள்ளது. செலவு அலகுகளில் செலவு ஒழுங்குபடுத்தல் செயல்முறையை உன்னிப்பாகக் கண்காணிக்கும் அதே சமயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் உறுப்பினர்களுக்கு அதிகாரிகளுக்கு புதிய வாகனங்கள் வாங்குவதற்கான செலவினங்களைக் குறைத்தல் மற்றும் கட்டிடங்கள், உபகரணங்கள் போன்றவற்றை வாடகைக்கு அல்லது கொள்முதல் செய்தல் போன்றவற்றிற்கான செலவுகளைக் குறைத்தல் உட்பட செலவினக் கட்டுப்பாடு, சீர்திருத்தங்களின் முக்கிய அம்சமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக, அரசாங்கம் ஏற்கனவே தனது படுகடன் நிதியளிப்பு செய்த கிட்டத்தட்ட ஐ.அ.டொ. 9 பில்லியனைக் கொண்ட பொது முதலீட்டு தொடர் திட்டங்களை மறுபரிசீலனை செய்ய முடிவு செய்துள்ளதுடன் அவசரத் திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் அதை மீண்டும் வடிவமைக்கவும், நிதி அல்லது பொருளாதார ரீதியாக போதுமான வருமானத்தை ஈட்டாதவற்றை இரத்துசெய்வதுடன் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய சில திட்டங்களைப் பிற்போடவும் முடிவுசெய்துள்ளது. இந்த சூழலில், அரசு நிறுவனங்களுக்கான புதிய கட்டடங்களை 2 ஆண்டுகளுக்குத் தொடங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

செலவின முகவர்களுக்கான வரவு செலவு ஒதுக்கத்தை குறைப்பதுடன் காசுப்பாய்ச்சலை மேம்படுத்தும் முகமாக குறிப்பாக அரச தொழில் முயற்சி நிறுவனங்களில், வரி குறைப்பை மேற்கொள்வதனால் ஏற்படும் சேமிப்பு என்பது ஒழுங்குபடுத்தல் செயற்பாட்டின் மேலதிக பயன்களாகும்.

### அரசாங்க நிதி முகாமைத்துவம்

மிகவும் வினைத்திறனானதும் சிக்கனமானதுமான அரச சேவையை அடைவதற்கு இயலக்கூடியவாறு எளிமையான மற்றும் நெறிப்படுத்தப்பட்ட முறைமையின் ஊடாக சேவைகளை முன்னுரிமைப்படுத்துவதற்கும் வழங்குவதற்கும் உதவும் அதே நேரத்தில் அரசாங்க பெறுகை, அரச சொத்து முகாமை மற்றும் பிற பொது வளங்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காக அரச நிதி முகாமைத்துவத்தை மறுசீரமைப்பதன் முக்கியத்துவத்தை அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வளங்களிலிருந்து வளங்களை திறம்பட முகாமை செய்வதில் ஒரு பகுதியாக உள்ள அரச பெறுகை நடைமுறைகளை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது சம்பந்தமாக, தற்போதைய அரச பெறுகை தேவைகள், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றிற்கு ஏற்றவாறு திறன்கள் மற்றும் செயல்முறைகள் நெறிப்படுத்தப்படும்.

நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் பெறுகை வழிகாட்டுதல்கள் பற்றிய சுற்றறிக்கைகள் மூலம் தற்போதுள்ள விதிமுறைகளை ஆய்வு செய்ததில் பெரும்பாலான விதிமுறைகள் பழமையானவை என இனங்காணப்பட்டமையால் இன்றைய தேவைகளுக்கு ஏற்றவாறு எளிமைப்படுத்துவதும் புதுப்பிக்கப்படுவதும் அவசியமாகும். கொவிட்-19 தொற்றுநோய் வீட்டில்-பணி எண்ணக் கருவிற்கு உதவும் வகையில் தொழில்நுட்பத்தை உட்செலுத்துவதற்கு மட்டுமே கட்டாயப்படுத்தியுள்ளதுடன் உயர்தர உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் கணக்காய்வு செயல்முறைகளுடன் ஒழுங்குமுறை சட்டகம் உட்பொதிக்கப்படல் வேண்டும் என்பது தேவையானது. கொவிட்-19 தொற்றுநோயின் தேவைகளை சமாளிப்பதில் இலத்திரனியல் - அரச பெறுகை முறைமை ஒரு வினையூக்கியாக உள்ளது. இது கேள்வி கோரல்கள், வழங்குனர் பதிவு மற்றும் விலை மனுக்களை சமர்ப்பித்தல் போன்ற துறைகளில் செலவு குறைந்த நடவடிக்கையாக உள்ளது. அவசர பொருட்கள் மற்றும் சேவைகளை வெளிப்படையான மற்றும் வினைத்திறனான முறையில் கொள்முதல் செய்வதற்காக கொவிட்-19 தொற்றுநோயின் முதல் அலைகளின் போது இது அறிமுகப்படுத்தப்பட்டது.

### அரச உடைமை வியாபார தொழில்முயற்சிகள்

பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில் அரச உடைமை தொழில்முயற்சிகள் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளமையால், அவற்றின் பகுதியளவு மட்டத்திலான செயலாற்றுகைக்கு மத்தியில் அவற்றை மறுசீரமைப்பது அரசாங்கத்தின் பொருளாதார கொள்கை கட்டமைப்பில் ஒருங்கிணைந்த ஒரு செயற்பாடாக உள்ளது, ஒத்திசைவான விலைக் கொள்கையின் பற்றாக்குறை அல்லது இல்லாமை, போட்டித்திறன் இன்மை, குறைந்த மட்டத்திலான மூலதன உட்செலுத்தல், குறிப்பாக, சமநிலை மற்றும் திறமையற்ற அல்லது குறைந்த அதிகாரம் பெற்ற சபைகள் போன்றவை பகுதியளவு செயலாற்றுகைக்கு பங்களிப்பதில் மிக முக்கியமான காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆகையினால், அரசுடைமை தொழில்முயற்சிகளின் சபைகளுக்கு தகுதியின் அடிப்படையில் தொழில்வான்மை உள்ளவர்களை பணியமர்த்துவதை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது, இது அரச உடைமை தொழில்முயற்சிகளின் அரசிறை ஒழுக்கநெறி மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தக் கூடியதாக இருக்கும்.

அரச உடைமை தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்புக்கள் உற்பத்தித்திறன் மேம்பாடு மற்றும் சிறந்த பங்குதாரர் பெறுமதியினை உருவாக்கலினை அறிமுகப்படுத்தியுள்ளன. இந்த நோக்கத்திற்காக, ஒரு வலுவான கண்காணிப்பு முறைமையை நிறுவுவதற்கு இணையாக, முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகள் நிறுவப்படுகின்ற மூலோபாய வியாபாரத் திட்டங்களைச் சமர்ப்பிப்பதற்கு அரச உடைமை தொழில்முயற்சிகள் தேவைப்படுத்தப்படும். நிறுவப்பட்டவாறு முக்கிய குறிகாட்டிகளை அடைவதில் அவற்றின் பொருந்தக்கூடிய தன்மையைக் கண்டறிய அரச உடைமை தொழில்முயற்சிகளின் ஆட்சேர்ப்புத் திட்டங்களை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். நிதி வெளிப்படைத்தன்மை, போட்டி சந்தை கட்டமைப்புகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பானது அடுத்த மாற்றத்திற்கான நடுத்தர காலத்திற்கான முக்கிய மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலாக இருத்தல் வேண்டும்.

### அரசாங்க முதலீடு

கொவிட்-19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிலையில், கொவிட்-19 க்குப் பிந்தைய பொருளாதார வளர்ச்சிக்கு நாட்டை தயார்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது. மந்தநிலையிலிருந்து பொருளாதார செயல்பாடு மற்றும் வேலைவாய்ப்பிற்கு புத்துயிர் பெற உதவுகின்றமையால் இது சம்பந்தமாக, அரச முதலீடு ஒரு வினையூக்கப் பாத்திரத்தை வகிக்கிறது. இந்த காலகட்டத்தில் பொது முதலீட்டிற்கான தேவை சுகாதார, கல்வி, நீர், போக்குவரத்து மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியவற்றில் மிகவும் முக்கியமானது. குறைந்த வட்டியானது தனியார் துறை முதலீட்டை அதிகரிக்கும் அதே வேளையில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக அரசாங்க முதலீட்டை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றமையால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்காக நடுத்தர காலத்தில் பொது முதலீட்டை அரசாங்கம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.

### படுகடன் முகாமை

நடுத்தர காலத்தில் வளர்ச்சிக்கான அரசிறை ஒருங்கிணைப்பு முயற்சிகள் ஊடாக இடர்வு அற்றதும் முகாமை செய்யக்கக்கூடிய அளவிலும் தனது படுகடனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உறுதியளித்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதத்திற்கான படுகடன் சமீபத்திய காலங்களில் குறைந்து 2014 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 71.3 சதவீதத்தினை அடைந்தாலும் இலங்கையின் பலவீனமான அரசிறை நிலைமையில் கடனின் உயர் மட்டமானது அதன் கடன் அளவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 86.8 சதவீதமாக அல்லது ரூ. 13,031 பில்லியன் வரையில் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் அதிகரிக்கச் செய்துள்ளது. முக்கியமாக கொவிட்-19 தாக்கத்துடன் 2015-2019 காலப் பகுதியின் பின்தங்கிய பொருளாதார வளர்ச்சியிலிருந்து எழும் பேரண்டப் பொருளாதார நிலைமைகள் காரணமாக 2020 ஆம் ஆண்டின் இறுதியில் படுகடன் இருப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 94.3 சதவீதமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், இலங்கை தனது படுகடனைச் செலுத்துவதனை ஒருபோதும் தவறவிடவில்லை. 2020 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 47 சதவீதமாகக் காணப்பட்ட வெளிநாட்டு நாணயத்திற்கான வெளிப்பாடு மொத்த கடன் பங்குகளில் பாதியைக் கொண்டுள்ளது, இது அந்நிய செலாவணி மற்றும் மாற்றம் செய்வதற்கான இடரினை அதிகரிக்கிறது. அ.டொ 35.3 பில்லியன் மொத்த வெளிநாட்டு நாணய படுகடன் இருப்புக்களில் சர்வதேச இறையாண்மை முறிகள் ஏறத்தாழ 42.6 சதவீதம் அல்லது ஐ.அ.டொ. 15.0 பில்லியன் ஆதிக்கம் செலுத்துகின்றன. இருப்பினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதத்தில் படுகடனானது 2025 ஆம் ஆண்டில் 75.1 சதவீதம் கீழிறங்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதோடு, குறைந்த அரசிறை பற்றாக்குறையுடன் உயர் பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. அரசிறை பேண்தகு நிலையைப் பாதுகாக்க அரசாங்கம் உறுதிகொண்டுள்ளதுடன் முதன்மை அரசிறை மீதி நடுத்தர காலத்தில் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இதன் மூலம் அரசாங்கமானது அதன் படுகடன் இருப்புக்களைக் குறைத்து பொதுக் கடனைக் கட்டுப்படுத்துவதில் மிகவும் நெறிப்படுத்திய போக்கை நோக்கி நகரும்.

### நிதித் துறை

நிதித்துறையின் ஸ்திரத்தன்மை மற்றும் வினைத்திறன் ஆகியவை நடுத்தர கால பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கொவிட்-19 இன் தாக்கத்தால் செயல்படாத கடன்களின் விகிதம் வீழ்ச்சியடைந்த போதிலும், இலாப மட்டங்களை பராமரிப்பதன் மூலமும் குறைந்தபட்ச மட்டத்திற்கு மேற்பட்ட முன்னேற்றமடைந்த மூலதன பெறுகை விகிதங்களுடன் வங்கித் துறையின் செயலாற்றுகை மேம்பட்டுள்ளது. தனியார் உரிமப்பங்கு மற்றும் துணிகர மூலதனத் தொழிலுக்கு பயனளிக்கின்ற அதேவேளை, இலங்கையில் செயல்பட உள்நாட்டு மற்றும் சர்வதேச வங்கிகளை ஈர்க்கும் வகையில் பிற முன்னுரிமை திட்டங்களில் "கொழும்பு துறைமுக நகர திட்டம்" நிறுவப்படுவதன் மூலம் நிதித் துறை மேலும் பலப்படுத்தப்படும்.

## வெளித் துறை

உற்பத்திகளை பல்வகைப்படுத்துதல், பெறுமதி கூட்டலை அதிகரித்தல், ஏற்றுமதி சார்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் புதிய முன்னேற்றங்களுடன் போட்டித்தன்மையான உள்கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் ஏற்றுமதி துறையை விருத்தி செய்வதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளது. வரி மற்றும் கட்டணக் கொள்கை ஏற்றுமதி துறைக்கு ஒரு ஊக்கத்தை அளிப்பதற்கும், பெறுமதி கூட்டலை அதிகரிப்பதற்கும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

ஆதலால், கொவிட்-19 காரணமாக அதிகரித்து வரும் உலகளாவிய நிச்சயமற்ற நிலைமைகளுக்கு மத்தியில் வெளித் துறை ஒரு பின்னடைவைக் காட்டியது. ஏற்றுமதிகளிலிருந்து வருவாய் முன்னேற்றம், அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் மசகு எண்ணெய் விலை சரிவு ஆகியவற்றால் 2020 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வர்த்தக பற்றாக்குறை ஒடுங்கியது. சுற்றுலாத் துறையின் வருவாயில் சுருக்கம் இருந்தபோதிலும், கணினி மற்றும் பண்டக சேவைகளில் சாத்தியமான வளர்ச்சியுடன் சேவை ஏற்றுமதி அதிகரித்தது. தொழிலாளர்களின் பண அனுப்பல்கள் எதிர்பார்த்ததை விட அதிகரித்துள்ளது. இதற்கிடையில், இலங்கையின் படுகடன் சேவையை ஒருபோதும் திருப்பிச் செலுத்தாமலிருந்ததில்லை என்ற வரலாற்று சாதனையை தக்க வைக்கும் வகையில் 2020 அக்டோபரில் அமெரிக்க டொலர் 1 பில்லியன் சர்வதேச இறையாண்மை முறி தீர்க்கப்பட்டது. பரிமாற்ற வீதம் நிலையானதாக இருந்ததோடு மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 2020 செப்டம்பர் இறுதியில் அமெரிக்க டொலர் 6.7 பில்லியனாக மதிப்பிடப்பட்டது.

## 1.4 உலக பொருளாதார நிலைமைகளும் இலங்கையில் அதன் தாக்கமும்

உலகளாவிய பொருளாதாரம் 2019 ஆம் ஆண்டு முதல் ஒரு பெரும் வீழ்ச்சியை காட்டுகிறது: பிற காரணிகளுக்கு மத்தியில் அமெரிக்க-சீனா வர்த்தகப் போர் மற்றும் பிரெக்சிட் ஆகியவற்றின் விளைவாக உலக பொருளாதாரத்தில் ஒரு நிச்சயமற்ற தன்மை எழுந்துள்ளது. ஆதலால் சர்வதேச நாணய நிதியம் 3.4 சதவீதமாக உலகளாவிய வளர்ச்சி இருக்கும் என கணித்திருந்தது. இருப்பினும், கொவிட்-19 நோய் பரவலானது எதிர்பாராத விதமாக இவ்வளர்ச்சி போக்கை மாற்றியது. கொவிட்-19 தொற்றுநோய் எல்லைகளை ஊடறுத்து பரவுகின்றமையால் சர்வதேச நாணய நிதியம், வளர்ச்சி மதிப்பீட்டினை -4.4 சதவீதத்திற்கு குறைத்துவிட்டது. சுற்றுலாத் துறை பாதிக்கப்பட்டது மட்டுமன்றி உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் மூலம் பொருட்களின் நகர்வு வெகுவாகக் குறைந்துள்ளது. பல்வேறு நாடுகளால் வழங்கப்பட்ட "வீட்டிலேயே இருங்கள்" என்ற அறிவுறுத்தல் வளர்ந்த நாடுகளின் பொருளாதார மந்தநிலைக்கு வழிவகுத்தது. கொவிட் -19 பரவலினால் பல துறைகளிலும் ஏற்பட்ட அதிகரித்த அழுத்தத்தினால் இலங்கை பாதிப்படைந்துள்ளது. கட்டமைப்பு மறுசீரமைப்புக்களை முழுமையாக செயல்படுத்துவதினூடான ஒரு ஒருங்கிணைந்த முயற்சி அவசியமாக உள்ளது.

**கட்டம் 2 :** கொவிட்-19 இனால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தாக்கத்திற்கான கொள்கை ரீதியான எதிர்வினைகள்

**அரசிறை கொள்கை**

- ஜனாதிபதி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 100 மில்லியனை கொண்டு கொவிட்-19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம் உருவாக்கப்பட்டது.
- கொவிட்-19 தொற்று நோயிலிருந்து பாதுகாப்பு பெறும் பொருட்டு சுகாதார சேவைகளின் தேவைகளுக்காக மருத்துவ, சத்திரசிகிச்சை மற்றும் பல்வைத்திய உபகரணங்கள், கருவிகள், சாதனங்கள் அதன் பகுதிகள், வைத்திய. மருத்துவ தளபாடங்கள், மருந்துகள், இரசாயனம் அது போன்ற பொருட்கள் போன்றவற்றிற்கான இறக்குமதிகளிற்கு அல்லது இறக்குமதி செய்து விநியோகித்தல் அல்லது இறக்குமதி செய்து நன்கொடையாக வழங்குதல் என்பவற்றிற்கான வரிகள் விலக்களிக்கப்பட்டுள்ளன.
- கொவிட் நிலையம், இலங்கை காவல்துறை, முப்படைகள், சுகாதார சேவைகள் திணைக்களம், சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு என்பனவற்றிற்காக இலங்கை முதலீட்டு சபையின் ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்படும் சுகாதார பாதுகாப்பு கருவிகள் மற்றும் அது சார்ந்த பொருட்களுக்கான விநியோகம் அல்லது நன்கொடைகளிற்கு வரிகள் விலக்களிக்கப்பட்டுள்ளன.
- மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக மருந்து பொருட்கள் உற்பத்தியாளரினால் இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்கள் மற்றும் உறையிடுவதற்கான பொருட்கள் என்பவற்றிற்கான வரிகள் விலக்களிக்கப்பட்டுள்ளன.
- மருத்துவ உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட உதிரிப்பாகங்கள், சாதனங்கள் என்பனவற்றிற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- கொவிட்-19 இனை தடுப்பதற்காக சுகாதார சேவைக்கு தேவையான நோய் பரசோதனை கருவிகள் உட்பட மருத்துவ உபகரணங்கள், சாதனங்கள் என்பனவற்றிற்கான இறக்குமதிகளின் மீதான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்களிற்கான தொலைக்கட்சி நாடக தீர்வை வரி நீக்கப்பட்டது.
- பெற்றோலிய இறக்குமதி பொருட்களின் மீது விதிக்கப்படும் சுங்க மேலதிக அறவீடானது ஆரம்ப முதலீடான ரூபா 50 பில்லியனுடன் ஆராம்பிக்கப்பட்ட எரிபொருள் சீராக்கும் நிதியத்திற்கு (FPSF) வைப்பிலிடப்படும்.
- ஏப்ரல் மற்றும் மே மாதங்களிற்கு முதியோர், மாற்று திறனாளிகள், சிறுநீரக நோயாளிகள், விவசாயிகள் மற்றும் இடம் மாறியிருக்கும் நாளாந்த தொழிலாளர்கள் போன்றவர்களுக்காக ரூபா 5,000 காசு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது.
- ரூபா 65 பில்லியன் நோய்தடுப்பு நடவடிக்கைகளிற்காக வழங்கப்பட்டது.
- சமுர்த்தி வங்கிகள் ஊடாக சமுர்த்தி பயனாளிகளிற்கு ரூபா 10,000 வட்டியற்ற முற்பணமாக வழங்கப்பட்டது.
- இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் அடிப்படையில் வங்கிகளினூ டாகவழங்கப்பட்ட கடன்களின் மீள்கொடுப்பனவு பிற்போடுவதற்கு வசதியளிக்கப்பட்டது.
- ஒரு மாதத்தில் ரூபா 50,000 இற்கு குறைவான பெறுமதியுடைய கடனட்டை கொடுப்பனவு மற்றும் பொதுப் பயன்பாடுகள் கட்டணத்தை செலுத்துவதற்கு ஒரு மாதம் சலுகை காலம் வழங்கப்பட்டது.
- கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் சுகாதார பணியாளர்கள், காவல்துறை, முப்படையினர் மற்றும் அரச பணியாளர்களிற்கு "அக்ரஹார" காப்புறுதி இரட்டிப்பாக்கப்பட்டது.
- வெளிநாட்டு படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களின் இறக்குமதிகளிற்காக விதிக்கப்பட்ட தொலைக்காட்சி நாடக வரி விதிப்பு நிறுத்தப்பட்டது.
- மருத்துவ பொருட்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுகளிற்கான (தகரத்திலடைத்த மீன், பருப்பு) விலைகள் குறைக்கப்பட்டன.
- முற்பண கணக்குகளிலிருந்து பெறப்பட்ட அரச பணியாளர்களிற்கான சம்பளத்திலிருந்தான கடன் மீள் செலுத்துகை மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளது.
- பெறுமதி சேர் வரி மற்றும் பிடித்து வைத்தல் வரி என்பனவற்றிற்கான இறுதி செலுத்துகை காலம் நீடிக்கப்பட்டது.
- முகக்கவசத்திற்கு அதியுச்ச சில்லறை விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டது.

## வெளிநாட்டு கொள்கை

- மூன்று மாத காலத்திற்கு குடிபெயர்ந்தவர்களினால் வெளிநாட்டிற்கு அனுப்பப்படும் மற்றும் திருப்பி அனுப்பப்படும் வெளிநாட்டு நாணயங்கள், ஏதாவது முதலீடு சம்பந்தமாக உள்ளூர் வாசிகளினால் வெளிநாடுகளிற்கு அனுப்பப்படும் வெளிநாட்டு நாணயங்கள் என்பன தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.
- முற்பண கொடுப்பனவு, ஏற்றுக் கொள்வதற்காக வழங்கப்படும் பத்திரங்கள், அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிகளிற்கும், மற்றும் தெரிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகளிற்கும் வசதியளிக்கப்பட்ட கடன்களிற்கான கடிதங்களை தற்காலிகமாக மூன்று மாத காலத்திற்கு நிறுத்தி வைத்தல்.
- அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் எல்லாவற்றிற்கும் குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் தடைகளை ஏற்படுத்துதல்.

## நாணயக் கொள்கை

- சுயதொழிலில் ஈடுபடும் மோட்டார் வாகன உரிமையாளர்கள் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள், பாரவூர்தி உரிமையாளர்கள், பாடசாலை பேருந்துகள் மற்றும் சிற்றூர்தி உரிமையாளர்கள் உட்பட 1.5 மில்லியன் சுய தொழில் முனைவோர்களிற்கு ஆறு மாத காலத்திற்கு குத்தகை தவணையை மீள செலுத்தும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.
- பொருளாதார செயற்பாடுகளிற்கு உதவும் பொருட்டு ரூபா 65 பில்லியனை திரவத்தன்மையை பேணும் முகமாக சந்தைக்கு செலுத்தப்பட்டுள்ளது.
- வியாபாரத்திற்கும் பொருளாதாரத்திற்கும் உதவும் பொருட்டு ரூபா 50 பில்லியன் மீள் நிதி வசதியளித்தலிற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- கொவிட்-19 காரணமாக ஏற்பட்ட சவால்களுக்கு முகம் கொடுப்பதற்காக தேசிய ரீதியிலான செயற்பாடுகளிற்கு உதவும் வகையில் "விசேட வைப்பு கணக்கு" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது..
- சந்தை கடன்களுக்கான வீதங்களை குறைக்கும் முகமாக 2020 ஜனவரி இலிருந்து யூலை வரையான காலத்தில் நியம வைப்பு வசதி விகிதம் (SDFR) மற்றும் நியம கடன் பெறுகை விகிதம் (SLFR) என்பன 250 அடிப்படை புள்ளிகளினால் குறைத்து முறையே 4.50 மற்றும் 5.50 புள்ளிகளாக காணப்பட்டன.
- மாதாந்த கட்டணத்தில் 50மூ இனாலும், ரூபா 50,000 வரையான கொடுப்பனவுகளிற்கு 15% வரையும் உள்;ர் கடனட்டை வட்டி விகிதம் குறைக்கப்பட்டது.
- வாடிக்கையாளர்களிற்கு உச்சபட்ச சேவைகளை வழங்கும் பொருட்டு வங்கிகளின் கிளைகள் யாவும் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்ட காலங்களில் திறக்கப்பட்டன.
- இடையூறு அற்ற விகிதத்தில் கடன் கொடுப்பனவுகளை முகாமை செய்யும் பொருட்டு அங்கீகாரமளிக்கப்பட்ட வங்கிகளிற்கு அத்தியாவசியமற்ற செலவினங்கள் மற்றும் தற்துணிவு கொடுப்பனவுகள் மீது குறைப்பு செய்வதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டது..
- கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட கட்டுமான துறை போன்ற வியாபார நிறுவனங்களிற்கு மூன்று புதிய கடன் திட்டமானது 4.00 சதவீத குறைந்த வட்டி விகிதத்தில் கொடுத்து உதவுவதனால் பொருளாதாரத்தை மீள ஆரம்பிக்க முடியுமாக இருக்கும்.

## நிர்வாக நடவடிக்கைகள்

- கொவிட்-19 சுகாதார பராமரிப்பு, கல்வி மற்றும் பொருளாதார மீளமைத்தல் மற்றும் வறுமை குறைப்பு போன்றவற்றிற்காக ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டும், கொவிட்-19 இனை கட்டுப்படுத்துவதற்காக தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் உருவாக்கப்பட்டும் சுகாதார ஆபத்துக்களையும் இலகு பொருளாதார தந்திரோபாயங்களை முகாமை செய்வதற்காக உயர் இணைப்பு ஆலோசனை சபையும் உருவாக்கப்பட்டுள்ளன..
- தேசிய தொற்றுநோய் நிறுவனம் மற்றும் பெரிய வைத்தியசாலைகள் என்பன கொவிட்-19 மருத்துவ நிலயங்கள் மற்றும் 34 நோய் தடுப்பு நிலையங்களாக நாடு பூராகவும் மாற்றப்பட்டுள்ளன.
- 2020 நவம்பர் 07 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஒரு நாளிற்கு 10,000 இற்கு மேற்பட்ட PCR பரிசோதனைகள் செய்யும் முகமாக அதிகரிக்கப்பட்டது..

- குறிக்கப்பட்ட பயனாளிகளிற்காக “திரிபோசா” மற்றும் “போசணை மல்லா” மற்றும் மருந்து பொருட்கள் நேரடியாக விநியோகிக்கப்பட்டன.
- தபால் சேவை மற்றும் பிரதேச செயலகங்களின் மூலம் 645,179 ஓய்வூதியம் பெறுவோரின் ஓய்வூதியம் செலுத்தப்பட்டன.
- நாட்டின் உணவு பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக “சௌபாக்கிய வீட்டுத்தோட்ட திட்டம்” நடைமுறைப்படுத்தப்பட்டது..
- விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட தூண்டும் வகையில் சமுர்த்தி பயனாளிகளிற்கு மரச்செய்கை பொருட்கள், விதைகள் மற்றும் பசளைகள் கொடுக்கப்பட்டன.
- கிருமி தொற்று நீக்கிகள், தொற்று நீக்கும் அறைகள், வைத்தியசாலை கட்டில்கள் என்பனவற்றை உற்பத்தி செய்வதற்கு உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்கள் ஊக்கவிக்கப்பட்டார்கள்.
- ஏற்றுமதி மற்றும் உள்ளூர் கேள்வியை பூர்த்தி செய்யும் பொருட்டு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக ஊரடங்கு சட்ட கட்டுபாடுகள் தளர்த்தப்பட்டன.
- சார்க் கொவிட்-19 அவசர நிதிக்காக ஐ.அ.டொலர் 5 மில்லியன் வழங்கப்பட்டது..
- இந்தியா, ஐக்கிய இராச்சியம், சீனா மற்றும் ஏனைய நாடுகளிலிருந்து கொவிட்-19 காரணமாக அங்கலாய்த்திருந்த இலங்கையர்கள் “ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ்” விமான சேவை மூலம் இலங்கைக்கு திரும்பி வர ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
- குறிப்பாக பொதுத்துறை பணியாளர்களிற்கு “வீட்டில் இருந்து வேலை” செயற்பாடுகளிற்கான வழிகாட்டல் வழங்கப்பட்டன.

# பகுதி II

## வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை – 2021

### 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 7,8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் கீழ் கௌரவ நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்டது

வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் நியதிகளின் கீழ் வெளியிடப்பட்டது. இது அரசிறை உபாய கூற்றுக்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையி-னை மதிப்பிடுவதற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு தேவைப்படுத்தப்படுவதுடன், பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாவது வாசிப்பு சமர்ப்பிக்கப்படும் தினத்தில் சமர்ப்பிக்கப்படும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைகள், கொடுப்பனவு மீதி, வருமானம் மற்றும் செலவின மதிப்பீடுகளு-க்கான அடிப்படை ஊகங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

இதற்கமைவாக, இவ்வறிக்கையானது அரசாங்கத்தின் வருமானம், செலவினம் மற்றும் 2010 இன் முதல் எட்டு (8) மாதங்களில் பெறுகைகள் தொடர்பான தரவுகளை உள்ளடக்கியுள்ளதுடன், இக்காலப்பகுதியின் போது நடை-டமுறைப்படுத்தப்பட்ட அரசிறை தொழிற்பாடுகளுக்குள் முழு மொத்த பொருளாதார நிலைமையினை விளங்கிக் கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில் பிரதான பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை வழங்குகிறது. மேலும் இவ்வறிக்கை பொருளாதாரம் மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகளை தயாரிப்பதில் பயன்படுத்-தப்பட்ட பிற ஊகங்கள் பற்றிய அடிப்படை தகவல்களை வழங்குவதுடன், இந்த ஊகங்களுடன் தொடர்பான பி-ன்னோக்கிய இடர்வுகளும் அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையில் குறிப்பிடத்தக்களவு தாக்கமொன்றினை ஏற்படுத்தக்கூடிய பிற தகவல்களையும் கொண்டுள்ளது.

# அரசிறை அபிவிருத்திகள், திறைசேரி தொழிற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்புக்கள்

# 01

## 1.1 மேன்நோக்கு

பொருளாதாரத்தில் ஒன்றிணைக்கப்பட்ட கேள்வியினால், சீர் செய்யப்பட்ட பொருளாதாரத்திற்காக அரசாங்கமானது 2019 இன் இறுதியிலும், 2020 இன் ஆரம்பத்திலும் வெளிப்படையான, திறன்மிக்க, எளிமையான வரி முறைகளை அறிமுகப்படுத்தியிருந்தது. கடன் மீளளிப்பு வரி, தேச கட்டுமான வரி, பொருளாதார சேவைகள் கட்டணம் போன்றவற்றினை நீக்கி எளிமையான வரி கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. கூட்டிணைக்கப்பட்ட மற்றும் தனியார் வருமான வரியானது மீளமைக்கப்பட்டன. பெறுமதி சேர் வரி விகிதமானது 15 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகவும், அதனை பதிவு செய்வதற்கான ஆகக்குறைந்த வருமான மட்டமும் விரிவாக்கப்பட்டது.

பல்வேறு காரணங்களினால், 2020 இன் ஜனவரியிலிருந்து ஆகஸ்ட் வரையான காலப்பகுதியினுள் அரசிறை செயற்பாடானது ஏற்ற இறக்க முன்னேற்றத்தை வெளிக்காட்டியுள்ளது. கொவிட்-19 இன் தாக்கத்தினை நிவர்த்திக்கும் முகமாக அறிமுகம் செய்யப்பட்ட அரசிறை மற்றும் நாணய சீர்திருத்த பொதிகளினாலும் பிரதானமாக கொவிட்-19 இன் நோய் பரம்பலினாலும் இது பாதிப்படைந்திருந்தது. வருமான முன்னேற்றம் மூன்று கட்டங்களாக இக்காலக்கட்டத்தில் காணப்பட்டது. (i) கொவிட்-19 இன் இரண்டு மாத காலப்பகுதியில் வருமானமானது 5.0 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 318.6 பில்லியனாகவும், (ii) முடக்க காலமான மார்ச் இறுதியில் இருந்து மே 2020 காலப்பகுதியில், வருமானமானது 43.4 சதவீதமாக குறைவடைந்து 264.7 பில்லியனாகவும், (iii) புதிய சாதாரண காலப்பகுதியான 2020 யூன் இலிருந்து ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் வருமானமானது மீளெழுந்து 25.6 சதவீதத்தினால் மட்டும் சிறிது குறைவடைந்து ரூபா 323.1 பில்லியனாகவும் காணப்பட்டது. இதன் காரணமாக, 2019 ஜனவரியிலிருந்து ஆகஸ்ட் வரையான வருமானமான ரூபா 1,205 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதிக்கான வருமானமானது 24.8 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 906.4 பில்லியனாக காணப்பட்டது.

2019 இன் ஜனவரியிலிருந்து ஆகஸ்ட் வரையான காலப்பகுதியினுள் ஏற்பட்டிருந்த அரசாங்க செலவீனமான ரூபா 1,927.1 பில்லியனுடன் ஒப்பிடப்படும் போது 2020 இன் இதே காலப்பகுதியிலான அரசாங்க செலவீனமானது 2.3 சதவீதத்தினால் குறைவடைந்து 1,883.7 பில்லியனாக காணப்பட்டது. கொவிட்-19 விளைவிற்கு உதவும் பொருட்டு அதிகரித்த வாழ்வாதார உதவிகளிற்கான செலவினம் காரணமாக, பொதுவாகவே நிரந்தர செலவாக காணப்படும் மீண்டெழும் செலவினமானது, 2020 மார்ச் மாதத்தில் 11.3 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 1,670.4 பில்லியனாக காணப்பட்டது. இருப்பினும் மூலதன செலவினமானது வருமானம் போன்று 3 கட்டங்களாக காணப்பட்டது. மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய முதல் இரண்டு மாதங்களில் மூலதன செலவினமானது அரைவாசியாக குறைந்தும், பின்னர் முடக்க காலம் முடிந்து மே மாதமளவில் அதிகரித்தும் காணப்பட்டது. இருப்பினும், கட்டுமான துறையில் ஏற்பட்ட தொய்வு காரணமாக யூன் மற்றும் யூலை மாதமளவில் மூலதன செலவீனமானது ஏப்ரல் மாதத்தில் காணப்பட்ட அளவாக மாறியது.

ரூபா 801.3 பில்லியன வரி வருமானம் மற்றும் ரூபா 105.0 பில்லியன் வரியற்ற வருமானங்கள் உள்ளடங்கலாக 2020 இன் முதல் எட்டு மாதங்களிற்கான அரசாங்க மொத்த வருமானமானது ரூபா 906.4 பில்லியனாக காணப்பட்டது. 2019 இன் மார்ச்சிலிருந்து ஏப்ரல் வரையான வருமானமான ரூபா 294.5 பில்லியனுடன் ஒப்படும் போது, 2020 இல் இதே காலப்பகுதிக்கான மொத்த அரசாங்க வருமானமானது கொவிட்-19 தாக்கத்தினால் 46.3 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 158.1 பில்லியனாக காணப்பட்டது. யூலை இலிருந்து ஆகஸ்ட் வரையான புதிய சாதாரண காலப்பகுதியில் வருமானமானது மீள அதிகரித்து ரூபா 243.0 பில்லியனாக காணப்பட்டது. இதேநேரம் கொவிட்-19 இன் விளைவாக குறைவடைந்த பொருளாதார செயற்பாடுகள் காரணமாக வரியற்ற வருமானமானது, ஏப்ரலிலிருந்து யூன் வரையான காலப்பகுதியில் 42.1 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 258.1 பில்லியனாக காணப்பட்டது. இருப்பினும் யூலை மாதமளவில், பொருளாதார செயற்பாடுகள் மீள ஆரம்பித்ததன் காரணமாக வரியற்ற வருமானமானது 2020 யூலை இல் 2019 யூலையில் பெறப்பட்டதை விட அதிகரித்து காணப்பட்டது. 2020 பெப்ரவரி இல் பெறப்பட்ட மத்திய வங்கியின் இலாப மாற்றத்தின் பயனாக, 2019 ஜனவரியிலிருந்து ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் பெறப்பட்ட ரூபா 99.6 பில்லியன் வரியற்ற வருமானத்துடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் பெறப்பட்ட வரியற்ற வருமானமானது 5.4 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 105.0 பில்லியனாக காணப்பட்டது.

2019 இன் முதல் எட்டு மாத செலவினம் ரூபா 1,927.1 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இல் இதே காலப்பகுதிக்கான செலவினமானது 2.3 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 1,883.7 பில்லியானக காணப்பட்டது. இதேநேரம், 2020 இன் முதல் எட்டு மாதத்திற்கான மீண்டெழும் செலவினம் 11.3 சதவீதத்தினால் ரூபா 1,670.4 பில்லியனாக அதிகரித்த அதேநேரம், மூலதன மற்றும் நிகர கடன்கள் 50.0 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 213.3 பில்லியனாக அக்காலப்பகுதியில் காணப்பட்டது. சம்பளம் மற்றும் வேதனங்களிற்கான மீண்டெழும் செலவினம் 15.7 சதவீதத்தினால் ரூபா 516.3 பில்லியனாகவும், மற்றும் வட்டி

வீதங்களிற்கான செலவினம் 9.0 சதவீதத்தினால் ரூபா 653.5 பில்லியனாகவும் அதிகரித்து காணப்பட்டன. மொத்த மீண்டெழும் செலவினத்தில் 30 சதவீதமாக இவ்விரண்டு செலவினங்களும் காணப்பட்டன. 2020 இன் முதல் எட்டு மாதங்களிற்கான பொருட்களிற்கும் சேவைகளிற்குமான செலவினமானது 15.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 106.8 பில்லியனாகவும் மற்றும் மானியங்களிற்கும் மாற்றங்களிற்குமான செலவினமானது 8.7 சதவீதத்தினால் ரூபா 393.7 பில்லியனாகவும் அதிகரித்து காணப்பட்டன.

**அட்டவணை 1.1 :** அரசிறை தொழிற்பாடுகளின் சுருக்கம்

ரூ.மில்லியன்

| விடயம் | ஜனவரி - ஆகஸ்ட் | |
|---|---|---|
| | 2019 | 2020 (அ) |
| **வருமானமும் கொடைகளும்** | **1,206,477** | **908,876** |
| **வருமானம்** | **1,205,036** | **906,359** |
| வரி | 1,105,402 | 801,340 |
| வரி அல்லாத | 99,634 | 105,020 |
| கொடைகள் | 1,440 | 2,516 |
| **செலவினம்** | **1,927,104** | **1,883,706** |
| **நடைமுறை** | **1,500,534** | **1,670,356** |
| சம்பளங்கள் | 446,451 | 516,354 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 599,612 | 653,498 |
| பிற | 454,471 | 500,504 |
| அரசாங்க முதலீடுகள் | 435,270 | 227,939 |
| பிற | -8,699 | -14,590 |
| **வருமான பற்றாக்குறை(-) / மிகை (+)** | **-295,498** | **-763,997** |
| **மொத்த வரவுசெலவுதிட்ட பற்றாக்குறை (-) / மிகை (+)** | **-720,628** | **-974,831** |
| **நிதியளிப்பு** | **720,628** | **974,831** |
| வெளிநாட்டு நிதியளிப்பு (தேறிய) | 142,349 | -92,289 |
| உள்நாட்டு நிதியளிப்பு (தேறிய) | 578,279 | 1,067,119 |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிக

2020 இற்கான செலவினத்திற்கான ஏற்பாடுகள் பெருமளவு வாக்கு கணக்கில் தங்கியிருந்தது. 2020 இற்கான வரவு செலவு திட்டம் சமர்ப்பிப்பதற்கு காலதாமதமாகியதன் காரணமாக, 2020 இன் முதல் நான்கு மாதங்களிற்கான வாக்கு கணக்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது 2019 ஒக்டோபர் 23 இல் நாடாளுமன்றத்தால் 2020 ஏப்ரல் 30 வரை செலவு செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்டது. இதேநேரம், 2020 மார்ச் 02 இல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அரசியலமைப்பு யாப்பின் 150 ஆம் சரத்தின் படி மாண்புமிகு ஜனாதிபதியினால், திறைசேரி செயலாளரிற்கு 2020 மார்ச்சிலிருந்து மே வரையான அரசாங்கத்தின் சேவைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு தேவையான செலவுகளிற்கு அரசாங்க கட்டுபணத்திலிருந்து பெறுவதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தார். கொவிட்-19 தாக்கத்தினால் பிற்போடப்பட்ட பாராளுமன்ற தேர்தல் காரணமாக 2020 ஆகஸ்ட் வரை இவ் அங்கீகாரம் நீட்டித்து வழங்கப்பட்டது. பாராளுமன்ற தேர்தலின் பின்னர் 2020 இன் இறுதி 4 மாதங்களிற்கான செலவினங்களிற்காக புதிதாக வாக்கு கணக்கு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அது பாராளுமன்றத்தினால் 2020 ஆகஸ்ட் 28 அன்று அங்கீகாரம் வழங்கப்பட்டது.

2020 இன் முதல் எட்டு மாத காலத்திற்கான வரவு செலவு திட்ட பற்றாக்குறையானது ரூபா 974.8 பில்லியன் மற்றும் உள்நாட்டு கடன்களினாலேயே இப்பற்றாக்குறை பெருமளவு நிதியளிக்கப்படுகின்றது. இக்கால கட்டத்தில் பெறப்பட்ட உள்நாட்டு கடன்கள் ரூபா 1,067.1 பில்லியனும் வெளிநாட்டு கடன்கள் ரூபா 92.3 பில்லியன் கடன் மீளளிப்பிற்காகவும் பெறப்பட்டது.

**அட்டவணை 1.2 :** மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் : 2020

ரூ.பில்லியன்

| விடயம் | வருடாந்த மதிப்பிடப்பட்ட | ஜனவரி – ஆகஸ்ட் உண்மையான (அ) | ஜனவரி – ஆகஸ்ட் |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **1,520.0** | **906.3** | **-613.7** |
| **வரி வருமானம்** | **1,358.0** | **801.3** | **-556.7** |
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | | | |
| வருமானம் மற்றும் இலாபம் மீதான வரி | 323.9 | 167.4 | -156.5 |
| பெறுமதி சேர் வரி - உள்நாட்டு (தேறிய) | 161.0 | 87.1 | -73.9 |
| தேச கட்டுமான வரி (உள்நாட்டு) | **2.8** | **1.8** | **-1.1** |
| ஏனைய | **7.4** | **33.1** | **25.7** |
| **உப மொத்தம்** | **495.1** | **289.4** | **-205.7** |
| **சுங்கத் திணைக்களம்** | | | |
| இறக்குமதி தீர்வை | 140.0 | 73.2 | -66.8 |
| பெறுமதி சேர் வரி - இறக்குமதிகள் (தேறிய) | 80.0 | 50.6 | -29.4 |
| தேச கட்டுமான வரி (இறக்குமதி) | 0.2 | 0.1 | -0.1 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | **115.0** | **71.8** | **-43.2** |
| செஸ் அறவீடு | **50.0** | **31.3** | **-18.7** |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு மற்றும் பிற | **99.6** | **55.9** | **-43.7** |
| பொருளாதார வேைக் கட்டணம் | 0.1 | 0.0 | -0.1 |
| உற்பத்தி விசேட ஏற்பாடுகள் | 225.0 | 142.3 | -82.7 |
| சிகரெட்டுகள் | 105.0 | 59.0 | -46.1 |
| பெற்றோலியம் | 65.0 | 37.3 | -27.7 |
| மோட்டார் வாலகனங்கள் | 50.0 | 43.2 | -6.9 |
| ஏனைய | 5.0 | 2.9 | |
| **உப மொத்தம்** | **709.9** | **425.1** | **-284.7** |
| **மதுவரி திணைக்களம்** | | | |
| மதுபானம் / புகையிலை | 130.0 | 72.5 | -57.5 |
| **உப மொத்தம்** | **130.0** | **72.5** | **-57.5** |
| **ஏனைய** | | | |
| தொலைதொடர்பு அறவீடு | 15.0 | 8.8 | -6.2 |
| உரிமப் பத்திர வரி மற்றும் பிற | 8.0 | 5.4 | -2.6 |
| **உப மொத்தம்** | **23.0** | **14.2** | **-8.8** |
| **வரி அல்லாத வருமானம்** | **162.0** | **105.0** | **-57.0** |
| **மொத்த செலவினம்** | **2,667.0** | **1,883.6** | **-783.4** |
| **நடைமுறை செலவினம்** | **2,324.0** | **1,670.2** | **-653.8** |
| சம்பளங்களும் படிகளும் | 800.0 | 516.4 | -283.6 |
| வட்டி கொடுப்பனவுகள் | 866.0 | 653.5 | -212.5 |
| ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | 230.0 | 160.1 | -69.9 |
| அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான மாற்றல்கள் | 89.0 | 74.3 | -14.7 |
| ஏனைய | 339.0 | 266.0 | -73.0 |
| **மூலதன செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **343.0** | **213.3** | **-129.7** |

மூலங்கள் : திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிக

## 1.2 அரசாங்க வருமானம்

உள்ளக மற்றும் வெளியக பொருளாதார செயற்பாடுகளின் மீது கொவிட்-19 இன் தாக்கத்தினால் 2019 இல் முதல் எட்டு மாதங்களில் பெறப்பட்ட அரசாங்க வருமானமான ரூபா 1,205.0 பில்லியனிலிருந்து 2020 இன் இதே காலப்பகுதியில் வருமானமானது 24.8 சதவீதத்தினால் குறைவடைந்த ரூபா 906.4 பில்லியனாக காணப்பட்டது. இருப்பினும், இக்காலத்தில் வருமானமானது v – வடிவத்தில் மீண்டெழுவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. கொவிட்-19 இனால் 2020 இன் முதல் காலாண்டில் வீழ்ச்சியடைந்த வருமானமானது 2020 இன் இரண்டாம் காலாண்டில் மீளெழுச்சி பெற்றிருந்தது. வருமானமானது யூலை 2020 இலிருந்து அதிகரித்த போக்கை கொண்டிருந்தது. வரி வருமானமானது முதல் எட்டு மாதங்களில் 27.5 சதவீதத்தால் ரூபா 801.3 பில்லியனாக, குறிப்பாக பெறுமதி சேர் வரி, வாகன இறக்குமதி மீதான விற்பனை வரி, தொலைத்தொடர்பு வரி மற்றும் இல்லாதொழிக்கப்பட்ட குறிப்பிட்ட வரிகளில் இருந்து பெறப்பட்ட வருமானமானது குறைந்தமை காரணமாக குறைவடைந்து காணப்பட்டது. வரியற்ற வருமானமானது 2020 ஜனவரியிலிருந்து ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் பெறப்பட்ட ரூபா 105.0 பில்லியனாக, 2019 இல் இக்காலப்பகுதியில் பெறப்பட்ட ரூபா 99.6 பில்லியனுடன் ஒப்பிடும் போது 5.4 சதவீதத்தினால அதிகரித்து காணப்பட்டது. இக்காலப்பகுதியில் பெறப்பட்ட வருமானமானது கணிக்கப்பட்ட வருடாந்த வருமானமான ரூபா 1,520.0 பில்லியன் 59.6 சதவீதமாக உள்ளது.

**வரைபு 1.1 :** மொத்த வருமானத்தின் வகுதி (சனவரி - ஆகஸ்ட் 2020)




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

**வரைபு 1.2 :** வருமான மூலங்கள் அடிப்படையில் மொத்த வருமானம் (சனவரி - ஆகஸ்ட் 2020)




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

**அட்டவணை 1.3 : அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம்**

ரூ.மில்லியன்

| விடயம் | ஜனவரி – ஆகஸ்ட் | | |
|---|---|---|---|
| | 2019 | 2020 (அ) | மாற்றம் (%) |
| **வரி வருமானம்** | **1,105,402** | **801,340** | **-27.5** |
| **வருமான வரி** | **238,168** | **167,440** | **-29.7** |
| **உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி** | **358,848** | **223,201** | **-37.8** |
| பெறுமதிசேர் வரி | 186,875 | 87,148 | -53.4 |
| உற்பத்தி வரி | 137,270 | 134,298 | -2.2 |
| தேச கட்டுமான வரி | **34,703** | **1,754** | **-94.9** |
| **இறக்குமதி அடிப்படையிலான வரி** | **467,480** | **362,609** | **-22.4** |
| சுங்கத் தீர்வை | 63,973 | 73,171 | 14.4 |
| பெறுமதிசேர் வரி | 114,885 | 50,644 | -55.9 |
| தேச கட்டுமான வரி | 13,254 | 112 | -99.2 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 73,825 | 71,769 | -2.8 |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு | 46,867 | 55,141 | 17.7 |
| மதுவரி | **122,280** | **80,486** | **-34.2** |
| செஸ் | **32,397** | **31,286** | **-3.4** |
| **உரிமப் பத்திர வரிகள் மற்றும் பிற** | **40,906** | **48,091** | **17.6** |
| **வரி அல்லாத வருமானம்** | **99,634** | **105,020** | **5.4** |
| **மொத்த வருமானம்** | **1,205,035** | **906,359** | **-24.8** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிக

## வருமான வரி

2019 இன் முதல் மூன்று மாதங்களில் பெறப்பட்ட வருமான வரி ரூபா 74.9 பில்லியனுடன், 2020 இன் இதே காலப்பகுதியினுள் பெறப்பட்ட 79.3 பில்லியனுடன் ஒப்பிடும் போது 5.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. கொவிட்-19 இன் தாக்கம் காரணமாக குறைவடைந்திருந்த பொருளாதார செயற்பாடுகளினால். 2020 ஏப்ரல் இலிருந்து ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் வருமான வரியிலிருந்தான வருமானமானது 46.0 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 88.1 பில்லியனாக காணப்பட்ட அதேவேளை 2020 ஜனவரி 01 இலிருந்து வலுப்பெறும் வகையில் கட்டுமான மற்றும் உற்பத்தி துறை நிறுவனங்கள் மீது முறையே 14 சதவீத மற்றும் 18 சதவீத மானிய வரி விகித மாற்றங்கள் மற்றும் நிறுவனங்கள் மீதான 28 சதவீதத்திலிருந்து 24 சதவீதமாக குறைக்கப்பட்ட நியம வருமான வரி விகிதங்களிடையே, 2020 இன் முதல் எட்டு மாத காலத்தில் பெறப்பட்ட நிறுவனங்கள் மீதான வரி வருமானமானது 12.1 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 132.1 பில்லியனாக காணப்பட்டது.

2020 ஜனவரி 01 இலிருந்து வலுப்பெறும் வகையில் தனியாள் மீதான வருமான வரியின் வரியற்ற சலுகை வருமான மட்டமானது ஆண்டிற்கு ரூபா 500,000 இலிருந்து ரூபா 3 மில்லியனாக மீளமைக்கப்பட்டதுடன் மற்றும் அதிகரிக்கும் வருமான மட்ட வரி விகிதங்களின் மீளமைப்பினாலும் ஏற்பட்ட விளைவினால், நிறுவனம் அற்றவை மீதான வருமான வரியானது 65.5 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 4.3 மில்லியனாக காணப்பட்டது. 2020 ஜனவரி 01 இலிருந்து வலுப்பெறும் முகமாக நீக்கப்பட்ட பொருளாதார சேவைகள் கட்டணம் மற்றும் உழைக்கும் போதான வருமான வரி என்பவற்றின் காரணமாக 2020 இன் முதல் எட்டு மாத காலத்திற்கான இவ்வரிகளிலிருந்தான வருமானமானது முறையே 66.0 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 13.8 பில்லியன் மற்றும் 70.8 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 9.9 பில்லியனாக காணப்பட்டன.

**அட்டவணை 1.4 :** வருமான வரி செயலாற்றுகை

ரூ.மில்லியன்

| வரி அடிப்படை | ஜனவரி – ஆகஸ்ட் 2019 | 2020 (அ) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| நிறுவன மற்றும் நிறுவனமல்லாத | **129,967** | **136,214** | **4.8** |
| உழைக்கும் போது செலுத்தும் வரி | **33,737** | **9,860** | **-70.8** |
| வட்டி வருமானம் மீதான வரி | **33,616** | **7,406** | **-78.0** |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 40,625 | 13,816 | -66.0 |
| மூலதன பெறுகை வரி | 224 | 144 | -35.9 |
| **மொத்தம்** | **238,168** | **167,440** | **-29.7** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிக

## பெறுமதி சேர் வரி

கொவிட்-19 நோயின் தாக்கத்தினால் உள்நாட்டு மற்றும் இறக்குமதி தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்பட்ட தொய்வு நிலை மற்றும் 2019 டிசம்பர் இலிருந்து பயன் வலுப்பெறுமதி 15 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக மாற்றப்பட்ட பெறுமதி சேர் வரி விகிதம் காரணமாக 2020 இன் முதல் எட்டு மாத காலத்தில் பெறுமதி சேர் வரியானது பெருமளவு குறைவடைந்தது. மேலும், பெறுமதி சேர் வரியின் பதிவிற்கான வருமான மட்டம் ஆண்டிற்கு ரூபா 12 மில்லியனிலிருந்து ரூபா 300 மில்லியனாக 2020 ஜனவரி 01 இலிருந்து பயன் வலுப்பெறுமாறு மாற்றப்பட்டமையும் பெறுமதி சேர் வரியின் வருமான வீழ்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ளது.

**அட்டவணை 1.5 :** பெறுமதி சேர் வரியின் செயலாற்றகை

ரூ.மில்லியன்

| வரி அடிப்படை | ஜனவரி – ஆகஸ்ட் 2019 | 2020(அ) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| உள்நாட்டு | **187,026** | **87,394** | **-53.3** |
| இறக்கமதிகள் | **115,488** | **51,626** | **-55.3** |
| **மொத்த வருமானம்** | **302,514** | **139,019** | **-54.0** |

**அட்டவணை 1.5 :** பெறுமதி சேர் வரியின் செயலாற்றகை

ரூ.மில்லியன்

| வரி அடிப்படை | ஜனவரி – ஆகஸ்ட் 2019 | 2020(அ) | வளர்ச்சி (% ) |
|---|---|---|---|
| மீளளிப்புக்கள் | 753 | 1,226 | 62.8 |
| தேறிய வருமானம் | 301,761 | 137,793 | -54.3 |
| மொத்த வருமானத்தில் மீளளிப்பு | **0.25** | **0.88** | |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிக

2019 இன் முதல் எட்டு மாதத்திற்கான பெறுமதி சேர் வரியின் வருமானமான ரூபா 301.8 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியிலான வருமானம் ரூபா 137.8 பில்லியனாக காணப்பட்டது. இது 2020 இற்கான வருடாந்த வருமான வரி கனிப்பீடான ரூபா 241.0 பில்லியனுடன் ஒப்பிடும் போது 57.2 சதவீதமாகும். 2019 இன் இக்காலப்பகுதிக்கான வருமானமான ரூபா 186.9 பில்லியனுடன் ஒப்பிடும் போது, 2020 இல் இக்காலப்பகுதிக்கான உள்நாட்டு செயற்பாடுகளின் மீதான பெறுமதி சேர் வரி வருமானமானது 53.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூபா 87.1 பில்லியனாக காணப்பட்டது. இதேநேரம் இறக்குமதி மீதான பெறுமதி சேர் வரியின் இதே முதல் எட்டு மாத காலப்பகுதியில் பெறப்பட்ட வருமானமான ரூபா 114.9 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இல் இதே காலப்பகுதியில் 55.6 சதவீதத்தினால் விழ்ச்சியடைந்து ரூபா 59.6 பில்லியனாக காணப்பட்டது.

## விற்பனை வரி

2019 இன் முதல் மூன்று மாதங்களில் பெறப்பட்ட உற்பத்தி வரி வருமானமானது ரூபா 94.6 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இல் இதே காலப்பகுதியில் அது 11.6 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 105.6 பில்லியனாக காணப்பட்டது. வாகனம் மீதான உற்பத்தி வரி தவிர்ந்த மற்றைய பிரிவுகளிலிருந்தான உற்பத்தி வரி வருமானமானது இக்காலப்பகுதியில் அதிகரித்து காணப்பட்டன. இருப்பினும், கொவிட்-19 நோயின் காரணமாக, 2020 இன் இரண்டாம் காலாண்டு பகுதிக்கான உற்பத்தி வரி வருமானமானது 44.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூபா 54.5 பில்லியனாக மாற்றமடைந்து பின்னர் 2020 ஆகஸ்ட் இல் புதிய சாதாரண நிலைமையில் வருமானமானது மீள அதிகரிக்க தொடங்கியது. உற்பத்தி வரி வருமானமானது, தொடர்ச்சியாக அரசாங்க வரி வருமானத்திற்கு பெருமளவு பங்களிப்புச் செய்து வருகிறது. குறிப்பிட்ட காலத்திற்கான மொத்த வரி வருவாமானத்தில் 26.8 சதவீதத்தையும் 2020 ஆம்

ஆண்டின் வருடாந்திர மதிப்பீட்டில் 60.5 சதவிகித அடைவினையும் கொண்டுள்ளது.

**அட்டவணை 1.6 :** உற்பத்தி வரி செயலாற்றுகை

ரூ.மில்லியன்

| வரி அடிப்படை | ஜனவரி – ஆகஸ்ட் 2019 | ஜனவரி – ஆகஸ்ட் 2020(அ) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| மதுபானம் | 75,628 | 72,503 | -4.1 |
| சிகரெட்டு | 58,300 | 58,949 | 1.1 |
| மோட்டார் வாகனங்கள் | 81,521 | 43,151 | -47.1 |
| பெற்றோலியம் | 40,759 | 37,335 | -8.4 |
| ஏனைய | 3,342 | 2,846 | -14.8 |
| **மொத்தம்** | **259,548** | **214,783** | **-17.2** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிக

2019 இன் சிகரெட் விற்பனையுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டு அதன் விற்பனை வீழ்ச்சியடைந்த போதும், 2019 இல் முதல் எட்டு மாதங்களில் பெறப்பட்ட வருமானமான ரூபா 58.3 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியிலிருந்தான வருமானம் 1.1 சதவீதத்தினால் சிறிது அதிகரித்து ரூபா 58.9 பில்லியனாக பதிவு செய்திருந்தது. எப்படியிருப்பினும், விற்பனை வீழ்ச்சியை விட சிகரெட் மீதான வரி அதிகரிப்பு இதற்கான காரணமாகும்.

**வரைபு 1.3 :** உற்பத்தி வரியின் செயலாற்றுகை (சனவரி - ஆகஸ்ட் 2020)




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

2020 மார்ச் இலிருந்து வாகன இறக்குமதிகள் மீதான கட்டுபாடுகள் காரணமாக வீழ்ச்சியடைந்த வாகன இறக்குமதியினால், 2019 இன் முதல் எட்டு மாதங்களில் பெறப்பட்ட ரூபா 81.5 பில்லியனுடன் ஒப்பிடும் போது, 2020 இன் இக்காலப்பகுதிக்கான வரி வருமானமானது 47.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூபா 43.1 பில்லியனாக காணப்பட்டது. மேலும் 2019 வரவு செலவு திட்ட முன்மொழிவுடன் அதிகரித்த வாகன இறக்குமதி மீதான உற்பத்தி வரி விளைவினால் வாகன இறக்குமதி மீது எதிர்மறை தாக்கம் ஏற்பட்டிருந்தது.

2020 மார்ச்சிலிருந்து மே வரையான காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்த மதுபானம் மீதான உற்பத்தி வரியானது யூன் இலிருந்து யூலை மாதமளவில் அதிகரித்த போக்கை கொண்டிருந்த கொவிட்-19 நோய் காரணமாகவும் மதுபான விற்பனையும், உற்பத்தியும் தடைப்பட்டதன் விளைவாக 2019 இன் முதல் எட்டு மாதங்களில் பெறப்பட்ட வரி வருமானம் ரூபா 75.6 பில்லியனிலிருந்து 2020 இல் இதே காலப்பகுதிக்கான வரி வருமானமானது 4.1 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 72.5 பில்லியனாக காணப்பட்டது. 2019 இன் முதல் எட்டு மாத வன் மதுபானம் மீதான உற்பத்தி வரி வருமானமான ரூபா 54.6 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இதே காலப்பகுதியில் அதன் வருமானமானது 6.0 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 51.3 பில்லியனாக காணப்பட்டது. இதேபோல், 2019 இன் இதே காலப்பகுதியில் மாவூறல் மதுபானம் மீதான வரி வருமானமான ரூபா 21.6 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது அதன் வருமானமானது, 16.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூபா 18.1 பில்லியனாக காணப்பட்டது.

பெற்றோலிய உற்பத்திகளின் அதிகரித்த நுகர்வு காரணமாக 2020 ஜனவரியிலிருந்து மார்ச் வரையான காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகள் மீதான வரி வருமானமானது 2019 இன் இதே காலப்பகுதியில் வரி வருமானமான ரூபா 14.1 பில்லியனுடன் ஒப்பிடும் போது, 29.3 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 18.3 பில்லியனாக காணப்பட்டது. இருப்பினும், 2020 ஏப்ரல் இலிருந்து யூன் வரையான காலப்பகுதியில் அது 52.0 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 7.4 பில்லியனாகவும், பின்னர் 2020 யூலை இலிருந்து ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் வரி வருமானமானது 4.0 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 11.6 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 2019 இன் முதல் எட்டு மாத காலத்தினுள் பெறப்பட்ட மற்றைய பொருட்கள் மீதான விற்பனை வரி வருமானமானது ரூபா 3.3 பில்லியனில் இருந்து 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் வரி வருமானமானது 14.8 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 2.8 பில்லியனாக காணப்பட்டது.

**அட்டவணை 1.7 :** மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மற்றும் வாகனங்களைப் பதிவு செய்தல்

ரூ.மில்லியன்

| விடயம் | இறக்குமதிகள் சனவரி – நவம்பர் | | | | புதிய பதிவுகள் சனவரி – நவம்பர் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2019 | 2020 | வளர்ச்சி | % | 2019 | 2020 | வளர்ச்சி | % |
| மோட்டார் கார்கள் | 3,309 | 27 | -3,282 | -99 | 25,909 | 19,445 | -6,464 | -25 |
| பேருந்துகள் | **106** | **2** | | | **1,116** | **445** | | |
| முச்சக்கர வண்டிகள் | **1,060** | **-** | **-1,060** | **-100** | **10,245** | **6,610** | **-3,635** | **-35** |
| மோட்டார் சைக்கிள் | 21,203 | 277 | -20,926 | -99 | 202,081 | 135,270 | -66,811 | -33 |
| பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் (அ) | 1,441 | 57 | -1,384 | -96 | 13,761 | 12,746 | -1,015 | -7 |
| தரைப் போக்குவரத்து வாகன-ங்கள் (ஆ) | 233 | 354 | 121 | 52 | 3,592 | 3,018 | -574 | -16 |
| ஏனைய (இ) | 11 | 3 | -8 | -73 | 593 | 395 | -198 | -33 |
| **மொத்தம்** | **27,363** | **720** | **-26,643** | **-97** | **257,297** | **177,929** | **-78,697** | **-31** |

மூலம்: சுங்கத் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி

(அ) லொறிகள், பிற பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் விசேட நோக்கத்திற்கான வாகனங்கள்

(ஆ) லொறிகள், பிற பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் விசேட நோக்கத்திற்கான வாகனங்கள்

(இ) இரு நோக்கத்திற்கான வாகனங்கள் உட்பட

### சுங்க இறக்குமதி வரி வருமானம்

2019 இன் முதல் எட்டு மாத வருமானமான ரூபா 64.0 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இதே காலப்பகுதியில் 14.0 சதவீதத்தினால் ரூபா 73.2 பில்லியனாக அதிகரித்திருந்தது. அத்தியவசியமற்ற பொருட்களின் இறக்குமதி வருமான வீழ்ச்சியுடன் ஏற்பட்ட விளைவை விட 2020 ஏப்ரல், மார்ச் மாதங்களில் பெற்றோல் மற்றும் டீசல் போன்ற பெற்றோலிய இறக்குமதிகள் மீதான இறக்குமதி வரி தீர்வை விலக்குகளை இல்லாதொழித்ததுடன் 2020 ஏப்ரலில் வரியையும் அதிகரித்ததன் காரணமாக சுங்க இறக்குமதி வரி வருமானமானது அதிகரிக்க காரணமாக அமைந்திருந்தன.

**அட்டவணை 1.8 :** சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் உற்பத்திகளின் உள்ளடக்கம் மற்றும் இறக்குமதி / ஏற்றுமதிகளின் பெறுமதி

ரூ.மில்லியன்

| சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | சனவரி - யூன் 2020 | | |
|---|---|---|---|
| | தீர்வை சலுகை வழங்கப்படும் பொருட்களின் எண்ணிக்கை | இறக்குமதி பெறுமதி | ஏற்றுமதி பெறுமதி |
| இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) | 4,883 | 21,863 | 52,338 |
| பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA) | 5,724 | 1,338 | 7,461 |
| தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA) | 5,465 | 724 | 5,401 |
| ஆசியா - பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA) | 715 | 2,723 | 28,539 |
| **மொத்தம்** | **16,787** | **26,648** | **93,739** |

மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்

### விசேட வியாபாரப் பண்ட அறவீடு

2019 இன் முதல் எட்டு மாத வருமானமான ரூபா 46.9 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலத்தில் வருமானமானது 17.7 சதவீதத்தினால் ரூபா 55.1 பில்லியனாக அதிகரித்திருந்தது. 2020 மே இலிருந்து தோடம்பழம், திராட்சைபழம், அப்பிள், சீனி, மீன், தாவர எண்ணெய், பருப்பு, பயறு, வெள்ளைப்பூண்டு, சிவப்பு வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவற்றின் மீதான அதிகரித்த வரி விகிதம் வருமான அதிகரிப்பிற்கு காரணமாக அமைந்திருந்தது. மேலும், அரசாங்கத்தின் கொள்கையான, உள்ளூர் விவசாயத்தை பாதுகாப்பதுடன், உள்ளூர் விலைகளை சீராக பேணுதல் என்பவற்றின் விளைவு வருமான அதிகரிப்பிற்கு உதவி செய்துள்ளது.

### ஏனைய வரிகள்

2019 டிசம்பர் 06 இலிருந்து கச்சா எண்ணெய் மீதான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி மானிய வரியானது 2.5 சதவீதம் தவிர்ந்த மற்றைய இறக்குமதி பொருட்களிற்கு நியம வரி விகிதம் 7.5 சதவீதத்திலிருந்து 10.0 சதவீதமாக மாற்றிய போதும், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி வருமானமானது 2019 இன் முதல் எட்டு மாத வருமானமான ரூபா 73.8 பில்லியனில் இருந்து 2020 இன் இதே காலப்பகுதி வருமானமாக 2.8 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 71.8 பில்லியனாக காணப்பட்டது. இருப்பினும், இறக்குமதி கட்டுபாடுகள் மற்றும் சில பொருட்களின் இறக்குமதிகள் மீதான வரி விலக்களிப்புகள் காரணமாக, எதிர்பார்க்கப்பட்ட அதிகரித்த வருமானத்தை விட குறைந்த வருமானத்தை பெறவேண்டிய நிலைமை உருவாகியிருந்தது. இதேபோல், செஸ் வரி வருமானமானது 2019 இன் முதல் எட்டு மாத வருமானமான ரூபா 32.4 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதி வரி வருமானமானது 3.4 சதவீதத்தால் குறைவடைந்து ரூபா 31.3 பில்லியனாக காணப்பட்டது. 2019 டிசம்பர் இலிருந்து குரல் வழி தொடர்பாடலிற்கான தொலைத்தொடர்பு வரியானது 15 சதவீதத்திலிருந்து 11.25 சதவீதமாக குறைக்கப்பட்டதினால் ரூபா 12.5 பில்லியனில் இருந்து 30.0 சதவீதத்தால் ரூபா 8.8 பில்லியனாக குறைவடைந்தது.

**அட்டவணை 1.9 :** தேச கட்டுமான வரி, முத்திரை வரி மற்றும் மோட்டார் வாகன பதிவுக் கட்டணம் ஆகியவற்றின் செயலாற்றுகை

ரூ.மில்லியன்

| விடயம் | 2019 ஜனவரி – ஆகஸ்ட் | | | 2020 ஜனவரி – ஆகஸ்ட் | | | % மாற்றம் 2019/2020 ஜனவரி – ஆகஸ்ட் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ம.அ | மா.ச | மொத்தம் | ம.அ | மா.ச | மொத்தம் | ம.அ | மா.ச | மொத்தம் |
| தேச கட்டுமான வரி* | 47,957 | 23,978 | 71,935 | 1,866 | 933 | 2,800 | -96.1 | -96.1 | -96.1 |
| உள்நாட்டு | **34,703** | **17,351** | **52,054** | **1,754** | **877** | **2,631** | **-94.9** | **-94.9** | **-94.9** |
| இறக்குமதி | **13,254** | **6,627** | **19,881** | **112** | **56** | **168** | **-99.2** | **-99.2** | **-99.2** |
| முத்திரை வரி** | - | 7,053 | 7,053 | - | 4,374 | 4,374 | - | -38.0 | -38.0 |
| மோட்டார் வாகன பதிவுக் கட்டணங்கள்*** | 489 | 1,141 | 1,630 | 372 | 869 | 1,241 | -58.9 | -58.9 | -58.9 |
| **மொத்தம்** | 48,446 | 32,173 | 80,618 | 2,239 | 6,176 | 8,415 | -95.7 | -82.0 | -90.3 |

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

* 2019.12.01 இலிருந்து தேச கட்டுமான வரி நீக்கப்பட்டுள்ளது.

**2011 ஆம் ஆண்டில் இருந்து மத்திய அரசாங்கத்தினால் முத்திரை வரியில் இருந்து திரட்டப்பட்ட வருமானத்தில் 100 சதவீதம் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது.

***மோட்டார் வாகன பதிவுக் கட்டணங்கள் மூலம் மத்திய அரசாங்கத்தினால் திரட்டப்பட்ட வருமானத்தில் 70 சதவீதம் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது.

குறிப்பு: ம.அ = மத்திய அரசாங்கம், மா.ச = மாகாண சபைகள்

**அட்டவணை 1.10 :** சர்வதேச வர்த்தகத்தின் மூலம் செஸ் வருமானம்

ரூ.மில்லியன்

| விடயம் | சனவரி – ஆகஸ்ட் 2019 | சனவரி – ஆகஸ்ட் 2020 |
|---|---|---|
| **ஏற்றுமதிகள் மீதான செஸ்** | **1,563** | **1,224** |
| தேயிலை- தேயிலை (ஏற்றுமதி வரி மற்றும் கட்டுப்பாடு) சட்டம், இலங்கை தேயிலை சபை சட்டத்தின் கீழ் | **526** | **272** |
| இறப்பர்-இறப்பர் மீள்நடுகை மானிய சட்டத்தின் கீழ் | 4 | 4 |
| தேங்காய்-தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் கீழ் | 90 | 129 |
| ஏற்றுமதி அபிவிருத்தி சபை செஸ்-இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம் | 942 | 819 |
| இறக்குமதிகள் மீதான செஸ்-இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் | 30,834 | 30,062 |
| **மொத்தம்** | **32,397** | **31,286** |

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

### வரியற்ற வருமானம்

2019 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத வருமானமான ரூபா 99.6 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இல் இதே காலப்பகுதியில், வரியற்ற வருமானமானது 5.4 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 105.0 பில்லியனாக காணப்பட்டது. மத்திய வங்கியின் ரூபா 24.0 பில்லியன் இலாப மாற்றமும் வாடகை வருமானம், சமூக பாதுகாப்பு பங்களிப்புகள் அதிகரித்தமையினால் இவ் வருமான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி இல் பெறப்பட்ட வாடகை வருமானமான ரூபா 8.6 பில்லியனினால் 2019 இல் ரூபா 2.8 பில்லியனாக இருந்த வாடகை வருமானமானது 2020 இல் 245.4 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 9.8 பில்லியனாக காணப்பட்டது. இதேநேரம், 2019 இன் முதல் எட்டு மாத வருமானமாகிய ரூபா 2.8 பில்லியனில் இருந்து 2020 இதே காலப்பகுதிக்கான சமூக பாதுகாப்பு பங்களிப்பு வருமானமானது 13.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 20.8 பில்லியனாக காணப்பட்டது. இதே காலப்பகுதியில், கொவிட்-19 இன் தாக்கத்தினால், வட்டி வருமானம், இலாபம், அரச நிறுவனங்களிலிருந்தான பங்கிலாப மாற்றல், கட்டணங்கள் மற்றும் விதிப்புகள் 47.7 சதவீதம், 45.6 சதவீதம், 33.4 சதவீதம் போன்றவற்றால் குறைவடைந்து 2020 ஆம் ஆண்டில் முறையே ரூபா 4.7 பில்லியன், ரூபா 7.8 பில்லியன் மற்றும் ரூபா 34.4 பில்லியனை வருமானமாக பதிவு செய்துள்ளன. 2019 இன் முதல் எட்டு மாதங்களில் பெறப்பட்ட வரியற்ற வருமானங்கள் மொத்த வருமானத்தின் 8.3 சதவீதமாக இருந்து 2020 இன் இதே காலப்பகுதி வருமானமானது மொத்த வருமானத்தின் 11.6 சதவீதமாக காணப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.11 :** அரசாங்க வருமான வேறுபாட்டிற்கான பகுப்பாய்வு (2020 ஜனவரி – ஆகஸ்ட் வரையில்)

ரூபா.பில்லியன்

| விடயம் | 2019 | 2020 மதிப்பீடு | 2020 தற்காலிக | காரணம் |
|---|---|---|---|---|
| வரி வருமானம் | 238.2 | 324.0 | 167.4 | 2019 இன் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடும் போது ரூபா 74.9 பில்லியனுடன் ஒப்பிடும் போது வருமான வரிலிருந்தான வருமானம் 5.9 சதவீதத்தினால் அதிகரித்து 79.3 பில்லியனாக 2020 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்டது. இருப்பினும், 2020 மார்ச் இன் நடுப்பகுதியிலிருந்து பரவலடைந்த கொவிட்-19 இன் காரணமாக 2020 ஜனவரியில் இருந்து ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் வருமான வரியிலிருந்தான வருமானம் 29.7 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 167.4 பில்லியனாக காணப்பட்டது. 2020 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் 2020 இல் ஆண்டுக்கான எதிர்பார்க்கப்பட்ட மொத்த வருமானத்தின் 51.7 சதவீதம் அடையப்பட்டுள்ளது. மூலதன பெறுகை வரி உட்பட இக்காலப்பகுதியில் தனியாள் மற்றும் நிறுவனங்கள் மீதான வருமான வரியானது 48 சதவீதத்தினால் அதிகரித்து 136.2 பில்லியனாக அதிகரித்திருந்தது. மேலும், 2019 இன் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட அரசிறை சீராக்கலினால் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் கொவிட்-19 இன் பரவலுடன் தாமதமடைந்துள்ளது. |

**அட்டவணை 1.11 :** அரசாங்க வருமான வேறுபாட்டிற்கான பகுப்பாய்வு (2020 ஜனவரி – ஆகஸ்ட் வரையில்)

ரூபா.பில்லியன்

| விடயம் | 2019 | 2020 மதிப்பீடு | 2020 தற்காலிக | காரணம் |
|---|---|---|---|---|
| பெறுமதி சேர் வரி (VAT) | 301.8 | 241.0 | 137.8 | கொவிட்-19 பரவலுடன் குறைவடைந்த பொருளாதார செயற்பாடுகளினாலும் பெறுமதி சேர் வரியானது 15 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக குறைவடைந்தமையினாலும் மொத்த பெறுமதி சேர் வரியிலிருந்தான வருமானமானது இக்காலத்தில் 54.3 சதவீதத்தினால் குறைவடைந்து 137.8 பில்லியனாகவும் அது மொத்த வருடாந்த கணிப்பீட்டில் 57.2 சதவீதமாகவும் காணப்படுகின்றது. |
| உற்பத்தி வரி | 259.5 | 355.0 | 214.8 | 2019 இன் முதல் மூன்று மாதங்களில் பெறப்பட்ட உற்பத்தி வரி ரூபா 94.6 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில், உற்பத்தி வரியிலிருந்தான வருமானம் 11.6 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 105.6 பில்லியனாக காணப்படுகின்றது. இருப்பினும், 2019 ஜனவரியிலிருந்து ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் பெறப்பட்ட வருமானமான 259.5 பில்லியனுடன் ஒப்பிடும் போது கொவிட்-19 இன் தாக்கத்தினால் 2020 இல் இதே காலப்பகுதியில் வருமானமானது 17.2 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 214.8 பில்லியனாக காணப்பட்டது. இது 2020 இன் வருடாந்த கணிப்பீட்டுடன் ஒப்பிடும் போது 60.5 சதவீதமாகும். சிகரெட் விற்பனை வீழ்ச்சியடைந்த போதிலும் சிகரெட் மீதான விற்பனை வரியானது இக்காலக்கட்டத்தில் 0.3 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 58.9 பில்லியனாக காணப்பட்டது. இருப்பினும், 2020 மார்ச் இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீதான கட்டுப்பாட்டினால், மோட்டார் வாகன இறக்கமதிகள் மீதான விற்பனை வரியானது 47.1 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 43.1 பில்லியனாக காணப்பட்டது. மேலும், நோய் தொற்று காலத்தில் குறைவடைந்த மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை காரணமாக மதுபானங்கள் மீதான விற்பனை வரியானது 4.1 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 72.5 பில்லியனாக காணப்பட்டது. இதேவேளை, ஆண்டின் தொடக்கத்தில் வருமான முன்னேற்றத்தை கொண்டிருந்த பெற்றோலிய பொருட்களின் இறக்குமதி மீதான விற்பனை வரியானது 2020 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலத்தில் பெற்றோல் மற்றும் டீசலின் இறக்குமதிகள் குறைவடைந்து இருந்ததால், அவற்றிலிருந்தான விற்பனை வரி வருமானம் 8.4 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 37.3 பில்லியனாக காணப்பட்டது. மற்றைய பொருட்கள் மீதான வரி வருமானம் 14.8 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 2.8 பில்லியனாக காணப்பட்டது. |
| சுங்க இறக்குமதி தீர்வை (CID) | 64.0 | 140.0 | 73.2 | 2020 மார்ச் நடுப்பகுதியில் இருந்து இறக்குமதிகள் மீது கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருப்பினும், 2019 இன் முதல் எட்டு மாதத்திற்கான சுங்க இறக்குமதி தீர்வையிலிருந்தான வருமானமான ரூபா 64.0 பில்லியனுடன் ஒப்பிடும் போது, 2020 இல் அதன் வருமானமானது சிறிதளவு அதிகரித்து ரூபா 73.2 பில்லியனாக காணப்பட்டது. இது ஆண்டிற்கான வருமான மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது, 52.3 சதவீதமாகும். 2020 ஏப்ரல் இலிருந்து அதிகரிக்கப்பட்ட பெற்றோலிய மற்றும் டீசலின் இறக்குமதிகள் மீதான விகிதம் மற்றும் சுங்க தீர்வை விலக்குகள் இல்லாமை செய்யப்பட்டமையுமே பிரதான காரணமாகும். |

**அட்டவணை 1.11 :** அரசாங்க வருமான வேறுபாட்டிற்கான பகுப்பாய்வு (2020 ஜனவரி – ஆகஸ்ட் வரையில்)

ரூபா.பில்லியன்

| விடயம் | 2019 | 2020 மதிப்பீடு | 2020 தற்காலிக | காரணம் |
|---|---|---|---|---|
| விசேட பண்ட அறவீடு (SCL) | 46.9 | 98.0 | 55.1 | 2019 ஜனவரியிலிருந்து ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் விசேட பண்டங்கள் மீதான பதிவுசெய்யப்பட்ட தீர்வையானது ரூபா 46.9 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இல் இக்காலப்பகுதியில் வருமானமானது 17.7 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 55.1 பில்லியனாக அதிகரித்திருந்தது. இது 2020 வருடாந்த மதிப்பீட்டின் 56.2 சதவீதமாகும். உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம், வெள்ளைப் பூண்டு பட்டானி, கொண்டைக்கடலை, பருப்பு, மரக்கறி எண்ணெய், மீன், சீனி, அப்பிள், திராட்சைப்பழம் மற்றும் தோடம்பழம் போன்ற தெரிவு செய்யப்பட்ட இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட அதிகரித்த விசேட பண்ட தீர்வையே இவ்வருமான அதிகரிப்பிற்கு காரணமாகும். |
| ஏனைய வரிகள் | 195.1 | 200.0 | 153 | ஏனைய வரிகளிலிருந்தான வருமானமானது 2020 இன் முதல் எட்டு மாதங்களில் 18.9 சதவீதத்தினால் குறைவடைந்து, 2020 வருடாந்த மதிப்பீட்டின் 74.5 சதவீத அடைவை கொண்டிருந்தன. துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரியிலிருந்தான வருமானமானது இக்கலப்பகுதியில் 2.8 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 71.8 பில்லியனாக ஆண்டு கணிப்பீட்டு பெறுமதியில் 62.4 சதவீதத்தையும் கொண்டிருந்தது. கொவிட்-19 நோய் பரவலினால் ஏற்படுத்தப்பட்டிருந்த இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளினால் செஸ் வரியிலிருந்தான வருமானமானது, 2020 இன் முதல் எட்டு மாதங்களில் 3.4 சதவீதத்தினால் குறைவடைந்து 31.3 பில்லியனாக காணப்பட்டது. 2019 டிசம்பர் 01 இலிருந்து குரல்வழி தொடர்பாடலிற்கான தொலைத்தொடர்பு தீர்வையானது 15 சதவீதத்திலிருந்து 11.25 சதவீததாக குறைக்கப்பட்டிருந்ததினாலும் மற்றும் 2020 இன் முதல் எட்டு மாதங்களில் குறைவடைந்த சர்வதேச குரல்வழி தொடர்பாடல் காலத்தினாலும் தொடலைத்தொடர்பு தீர்வையிலிருந்தான வருமானமானது 30.0 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 8.8 பில்லியனை பெற்றிருந்தது. மேலும், 2019 டிசம்பர் 01 இலிருந்து நீக்கப்பட்ட தேசிய கட்டுமான வரியிலிருந்தான வருமானமானது மற்றும் 2020 ஜனவரி 01 இலிருந்து மீள செலுத்தும் போதான தீர்வை நீக்கப்பட்டமையினால் இவற்றிலிருந்தான வரி வருமானங்கள் இல்லாதுபோயுள்ளன. |
| வரியல்லா வருமானம் | 99.6 | 162.0 | 105.0 | கடந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் பெறப்பட்ட ரூபா 99.6 பில்லியன் வரியற்ற வருமானமானது, 2020 இல் இதே காலப்பகுதியில், 5.4 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 105.0 பில்லியனையும் 2020 வருடாந்த மதிப்பீட்டில், 64.8 சதவீதத்தையும் பெற்றுள்ளது. இலங்கை மத்திய வங்கியிலிருந்து மாற்றப்பட்ட ரூபா 24.0 பில்லியன் மற்றும், வாடகை வருமானம் ரூபா 10.0 பில்லியன், சமூக பாதுகாப்பு பங்களிப்பு ரூபா 20.8 பில்லியன் என்பன பிரதானமான இவ் வருமான அதிகரிப்பிற்கு காரணிகளாகும். இருப்பினும், இவ் ஆய்வு காலத்தில், கொவிட்-19 இன் தாக்கத்தின் விளைவாக, அரச தொழில்முயற்சி நிறுனங்களில் இருந்து பெறப்படும் வட்டி வருமானம் இலாபம், பங்கிலாபம் என்பன முறையே ரூபா 4.7 பில்லியன், ரூபா 7.7 பில்லியன் மற்றும் ரூபா 34.5 பில்லியனாக குறைவடைந்து காணப்பட்டன. |
| **மொத்தம்** | **1,205.1** | **1,520.0** | **906.3** | |

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிக

**கட்டம் 3 :** பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2020 சனவரி – செப்தெம்பர் வரையில்

<table>
<tr><th>பயன்வலுப்பெறும் திகதி</th><th>நடவடிக்கைகள்</th></tr>
<tr><td></td><td>வருமான வரி - 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்</td></tr>
<tr><td></td><td>தாபன வருமான வரி</td></tr>
<tr><td>01.01.2020</td><td>
<table>
<tr><th>பிரிவு</th><th>விகிதம்</th></tr>
<tr><td>நியம வருமான வரி விகிதம்</td><td>24%</td></tr>
<tr><td>உற்பத்தித் துறை மீது ஏற்புடைய வருமான வரி விகிதம்</td><td>18%</td></tr>
<tr><td>ஏற்றுமதிகள், சுற்றுலா, கல்வி, சுகாதாரம், நிர்மாணத்துறை மற்றும் வேளாண்மை-செயலாக்கம் ஆகியவற்றின் மீது ஏற்புடைய வருமான வரி விகிதம்</td><td>14%</td></tr>
<tr><td>பந்தயம் மற்றும் சூதாட்டம், மதுபானம் மற்றும் புகையிலை மீது ஏற்புடைய வருமான வரி விகிதம்</td><td>40%</td></tr>
</table>
</td></tr>
<tr><td></td><td>தனியாள் வருமான வரி</td></tr>
<tr><td>01.01.2020</td><td>
<table>
<tr><th>வருடாந்த வரி அறவிடத்தகு வருமானம்</th><th>விகிதம்</th></tr>
<tr><td>முதல் ரூ.3,000,000</td><td>விலக்களிப்பு</td></tr>
<tr><td>ரூ. 3,000,000 – ரூ. 6,000,000</td><td>6%</td></tr>
<tr><td>ரூ. 6,000,000 – ரூ. 9,000,000</td><td>12%</td></tr>
<tr><td>ரூ. 9,000,000 இற்கு மேற்பட்ட</td><td>18%</td></tr>
</table>
</td></tr>
<tr><td>01.01.2020</td><td>முடிவுறுத்தல் நன்மைகள்</td></tr>
<tr><td></td><td>
<table>
<tr><th>முடிவுறுத்தல் நன்மைகளில் இருந்து அடையப்பெற்ற வருமானம்</th><th>விகிதம்</th></tr>
<tr><td>முதல் ரூ. 10,000,000</td><td>விலக்களிப்பு</td></tr>
<tr><td>அடுத்துவரும் ரூ.10,000,000</td><td>6%</td></tr>
<tr><td>மீதி</td><td>12%</td></tr>
</table>
</td></tr>
<tr><td></td><td>உழைக்கும் போது செலுத்தும் வரி</td></tr>
<tr><td>01.01.20200</td><td>• எவரேனும் வதிவாளர் அல்லது வதிவாளர் அல்லாத ஒருவருக்குக் ஏதேனும் ஊழிய வருமானம் மீது ஏற்புடைய உழைக்கும் போது செலுத்தும் வரியை நீக்குதல் மற்றும் ஊழியரின் ஒப்புதலுடன் வருமான மூலத்தில் குறைக்கக் கூடிய முற்பண தனியாள் வருமான வரியை அறிமுகப்படுத்துவதற்காக.</td></tr>
<tr><td></td><td>பிடித்துவைத்தல் வரி</td></tr>
<tr><td>01.01.2020</td><td>பின்வருவன தவிர்ந்த எவரேனும் ஒரு வதிவாளருக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகள் மீது பிடித்து வைத்தல் வரியை நீக்குவதற்காக்<br>• சீட்டிழுப்பு (லொத்தர்), வெகுமதி, பந்தயம் அல்லது சூதாட்டம் வெற்றிகளூடாக பெறப்பட்ட தொகை மீது 14 சதவீதத்தில் பிடித்து வைத்தல் வரி.<br>• தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையினால் நடாத்தப்பட்ட ஏலவிற்பனை ஒன்றில் இரத்தினக்கல் ஒன்றின் விற்பனை மீது 2.5 சதவீத விகிதத்தில் பிடித்து வைத்தல் வரி.<br>• வதிவாளர் அல்லாத நபர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் மீது 14 சதவீத பிடித்து வைத்தல் வரி.</td></tr>
</table>

**கட்டம் 3 :** பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2020 சனவரி – செப்தெம்பர் வரையில்

| பயன்வலுப்பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| | **வருமான வரி விலக்களிப்புக்கள்** |
| 01.01.2020 | • தகவல் தொழில்நுட்பம் மற்றும் சம்பந்தப்பட்ட சேவைகளிலிருந்து ஈட்டப்பட்ட இலாபங்கள் மற்றும் வருமானம்.<br>• வெளிநாட்டு மூலங்களால் ஈட்டப்பட்ட வருமானம் உட்பட இலங்கைக்கு வெளியே உள்ள நபர்களுக்கு வழங்கிய சேவைகள் ஊடாக பெற்றுக் கொண்ட இலாபங்கள் மற்றும் வருமானம், குறித்த சேவைகளுக்காக பெற்றுக்கொண்ட கொடுப்பனவுகள் வங்கி ஒன்றின் ஊடாக வெளிநாட்டு நாணயங்களில் பெறப்பட்டிருப்பின்.<br>• வதியாதோர் நாணயக் கணக்கு மற்றும் வதிவோர் நாணயக் கணக்குகள் ஊடாக அடையப் பெற்ற வட்டி வருமானம்.<br>• வதிவிடமல்லாத கம்பனி ஒன்றிற்கு ஒருவருக்கு வதிவிடக் கம்பனி ஒன்றினால் செலுத்தப்படும் பங்கிலாபங்கள்.<br>• வர்த்தக மைய இயக்குநர்களால் விநியோகிக்கப்படும் பங்கிலாபங்கள்.<br>• வதிவாளர் அல்லாத ஒருவரால் ஆய்வுகூடச் சேவைகள் அல்லது தராதர சான்றிதழ் சேவைகள் ஊடாக ஈட்டப்பட்ட தொகைகள்.<br>• ஏதேனும் சமய நிறுவனங்களால் கொடைகள் மற்றும் அன்பளிப்புக்களாக பெற்றுக்கொள்ளப்பட்ட தொகைகள். |
| 01.04.2019 | • விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடைவளர்ப்பு உட்பட வேளாண்மைத் துறையில் பெற்றுக்கொண்ட இலாபங்களும் வருமானங்களும். |
| 01.04.2018 | • இலங்கைக்கு வெளியே நபர் ஒருவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவு.<br>• வதியாத நபர் ஒருவரினால் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நாணயத்தில் படிநிலையாக்கப்பட்ட ஏதேனும் இறையாண்மை முறி ஊடாக உழைக்கப்பட்ட ஏதேனும் வருமானம்.<br>• வெளிநாட்டு நாணயத்தில் படிநிலையாக்கப்பட்ட இறையாண்மை முறிகள் மீது எவரேனும் ஒரு நபருக்கு செலுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட வட்டி அல்லது கழிப்பீடு.<br>• திரட்டிய நிதியத்தில் இருந்து பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியத்தில் இருந்து பொது கூட்டுத்தாபனம் ஒன்றினால் பெறப்பட்ட நிதி அல்லது அரசாங்கத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் கடன். |
| | **பொருளாதார சேவைக் கட்டணம் - 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டம்** |
| 01.01.2020 | பொருளாதார சேவைக் கட்டணத்தை நீக்குவதற்காக. |
| | **பெறுமதி சேர் வரி – 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம்** |
| 01.01.2020 | • பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்தலின் ஆரம்ப எல்லையை ஆண்டொன்றிற்கு ரூபா 12 மில்லியனில் இருந்து ரூபா 300 மில்லியன் வரை அதிகரிப்பதற்காக.<br>• தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய சேவைகளுக்கு பெறுமதி சேர் வரியில் இருந்து விலக்களிப்பதற்காக. |
| 01.04.2020 | • இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட சுற்றுலா முகவர்களினால் உள்ளூரில் நடாத்தப்படும் சுற்றுலா சேவைகள். |
| 22.04.2020 | முதலீட்டு ஊக்குவிப்பு சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களினால், சுகாதார அமைச்சு, சுதேச சுகாதார மருத்துவ சேவைகள், சுகாதார திணைக்களம், முப்படைகள், இலங்கை பொலிஸ் மற்றும் கொவிட்-19 மத்திய நிலையம் (கொவிட்-19 இனை கட்டுபடுத்துவதற்கான தேசிய செயலணி என்பவர்களின் வேண்டுகோளிற்கிணங்க சுகாதார பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் அவை சார்ந்த பொருட்களின் வழங்கல் அல்லது உதவிகள். |

**கட்டம் 3 :** பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2020 சனவரி – செப்தெம்பர் வரையில்

| பயன்வலுப்பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 20.05.2020 | கொவிட்-19 இனை கட்டுபடுத்தும் முகமாக தேவைப்படும் சுகாதார ஏற்பாடுகளிற்காக சுகாதார மற்றும் சுதேச வைத்திய மருத்துவ சேவைகள் அமைச்சின் செயலாளரிற்காக மருத்துவ இயந்திரங்களும் சாதனங்களும் பலவைத்திய உபகரணங்கள், சாதனங்கள், பொருட்களும் அதன் பகுதிகளும், வைத்தியசாலை.'.மருத்துவமுகாம் தளபாடங்கள், மருந்துகள், இரசாயன பதார்த்தங்கள் மற்றும் அவை போன்ற பொருட்களினதும் இறக்குமதியும் வழங்கலும் அல்லது இறக்குமதியும் உதவியும். |
| | **உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி - 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரிச் சட்டம்** |
| 06.03.2020 | 06.03.2020 ஆம் திகதிய 2165/60 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• 05.03.2019 ஆம் திகதிய 2113/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் II அட்டவணையைத் திருத்தியமைப்பதற்காக. |
| 02.06.2020 | 2020.06.02 ஆம் திகதிய 2178/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• கைத்தொழில் கொழுப்பமிலங்கள் மீது தீர்வை விகிதத்தினை 20 சதவீதத்தில் இருந்து 24 சதவீதம் வரை அதிகரிப்பதற்காக. |
| 22.08.2020 | 21.08.2020 ஆம் திகதிய 2189/47 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• கார்பனேற்றப்பட்ட குடிபானங்கள் மற்றும் பழச்சாறு சார்ந்த குடிபானங்கள் மீதான வரி கட்டமைப்பை மீளமைப்பதற்கு. |
| | **மது வரி (கட்டளைச் சட்ட) தீர்வை – மதுவரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)** |
| 01.03.2020 | 01/2020 இலக்க மதுவரி அறிவித்தல் (2020.03.01 ஆம் திகதிய 2164/72 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>• 04/2019 இலக்க மதுவரி அறிவித்தலின் விதிமுறைகளைத் திருத்தியமைப்பதற்காக. |
| 30.04.2020 | 02/2020 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2020.04.03 ஆம் திகதிய 2173/11 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>• 988 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலில் உள்ள அட்டவணையை திருத்தியமைப்பதற்காக. |
| 01.06.2020 | 03/2020 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2020.06.01 ஆம் திகதிய 2178/ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• 01/2020 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலில் உள்ள அட்டவணையைத் திருத்துவதற்காக. |
| 09.06.2020 | 04/2020 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2020.06.09 ஆம் திகதிய 2179/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• 02/2020 ஆம் இலக்க மது வரி அறிவித்தலில் உள்ள அட்டவணையைத் திருத்துவதற்காக. |
| | **துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு – 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்** |
| 25.02.2020 | 2020.02.24 ஆம் திகதிய 2164/08 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• கிளிங்கர் இறக்குமதிக்கு 7.5 சதவீத சலுகை விகிதத்தினை வழங்குவதற்காக. |
| 16.04.2020 | 2020.04.16 ஆம் திகதிய 2171/06 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்:<br>• துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டில் இருந்து பின்வருமாறு விலக்களிப்பு வழங்குவதற்காக: செயலாளர், சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சிற்கு நன்கொடையாக மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவமனை தளபாடங்களின் இறக்குமதிக்காக. |
| 23.04.2020 | 2020.04.22 ஆம் திகதிய 2171/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• உருக்கு கைத்தொழில் தொடர்பான மூலப் பொருட்களின் இறக்குமதிக்காக 5.0 சதவீத சலுகை வீதத்தை வழங்குவதற்காக. |

**கட்டம் 3 :** பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2020 சனவரி – செப்தெம்பர் வரையில்

| பயன்வலுப்பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 19.05.2020 | 2020.05.19 ஆம் திகதிய 2176/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டில் இருந்து பின்வருமாறு விலக்களிப்பு வழங்குவதற்காக:<br>சுகாதார, சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு, சுகாதார சேவைகள் திணைக்களம், முப்படைகள், இலங்கை பொலீஸ் மற்றும் கொவிட் நிலையம்(கொவிட் - 19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையம்) ஆகியவற்றிற்கு ஏற்றுமதி சார்ந்த முதலீட்டு சபை நிறுவனம் ஒன்றினால் சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொடர்புடைய உற்பத்திகளின் வழங்கல் அல்லது அன்பளிப்பு ஆகியவற்றிற்காக.<br>கொவிட் - 19 பரவலை எதிர்கொள்வதற்கு சுகாதார சேவைத் துறைக்கு மருத்துவ, சத்திரசிகிச்சை மற்றும் பற்சிகிச்சை உபகரணங்கள், கருவிகள், சாதனங்கள், துணைக்கருவிகள் மற்றும் அவற்றின் பாகங்கள் உள்ளடங்கலாக இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள், மருத்துவமனை/மருத்துவ தளபாடங்கள் மற்றும் மருந்துகள், இரசாயனப் பொருட்கள் மற்றும் அவை போன்றவற்றின் இறக்குமதி அல்லது இறக்குமதி மற்றும் வழங்கல் அல்லது இறக்குமதி மற்றும் அன்பளிப்பு ஆகியவற்றிற்காக. |
| 26.05.2020 | 2020.05.26 ஆம் திகதிய 2177/4 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டில் இருந்து பின்வருமாறு விலக்களிப்பு வழங்குவதற்காக:<br>• மருந்துப் பொருட்கள் உற்பத்தியாளர்களினால் மருந்துப் பொருட்கள் தயாரிப்பிற்கு மூலப் பொருட்கள் மற்றும் பொதி செய்தல் சாதனங்களின் இறக்குமதிக்காக. |
| 03.09.2020 | 02.09.2020 ஆம் திகதிய 2191/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• எண்ணெய் அகழ்ந்தெடுக்கும் கைத்தொழிலிற்கான இயந்திரங்களின் இறக்குமதிகளுக்கு வரி விகிதத்தை 2.5 சதவீத மானிய வரியில் வழங்குதல். |
| | **செஸ் அறவீடு – 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம்** |
| 14.01.2020 | 13.01.2020 ஆம் திகதிய 2158/1 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• கோதுமை மா இறக்குமதி மீதான செஸ் அறவீட்டினை நீக்குவதற்காக. |
| 20.05.2020 | 2020.05.20 ஆம் திகதிய 2176/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• செஸ் அறவீட்டில் இருந்து பின்வருமாறு விலக்களிப்பு வழங்குவதற்காக:<br>சுகாதார, சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு, சுகாதார சேவைகள் திணைக்களம், முப்படைகள், இலங்கை பொலீஸ் மற்றும் கொவிட் நிலையம் (கொவிட் - 19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையம்) ஆகியவற்றிற்கு ஏற்றுமதி சார்ந்த முதலீட்டு சபை நிறுவனம் ஒன்றினால் சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொடர்புடைய உற்பத்திகளின் வழங்கல் அல்லது அன்பளிப்பு ஆகியவற்றிற்காக.<br>கொவிட் - 19 பரவலை எதிர்கொள்வதற்கு சுகாதார சேவைத் துறைக்கு மருத்துவ, சத்திரசிகிச்சை மற்றும் பற்சிகிச்சை உபகரணங்கள், கருவிகள், சாதனங்கள், துணைக்கருவிகள் மற்றும் அவற்றின் பாகங்கள் உள்ளடங்கலாக இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள், மருத்துவமனை/மருத்துவ தளபாடங்கள் மற்றும் மருந்துகள், இரசாயனப் பொருட்கள் மற்றும் அவை போன்றவற்றின் இறக்குமதி அல்லது இறக்குமதி மற்றும் வழங்கல் அல்லது இறக்குமதி மற்றும் அன்பளிப்பு ஆகியவற்றிற்காக. |
| 03.06.2020 | 2020.06.03 ஆம் திகதிய 2178/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• சீமெந்து கிளிங்கர்கள் மற்றும் போட்லண்டு சீமெந்து மீதான செஸ் அறவிட்டினை அலகு முறைக்கு திருத்துவதற்காக. |
| 30.06.2020 | 2020.06.30 ஆம் திகதிய 2182∴21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• பப்படம், பனங்கள்ளு, பனஞ்சாராயம், கறுவா சேர்த்த சிகரட், காலணி மேற்பாகம், தங்குதன் மின்குமிழ் மீதான செஸ் வரியை அறிமுகப்படுத்தலும் சீமெந்து மீதான இறக்குமதி வரியை திருத்துவதற்கும். |

**கட்டம் 3 :** பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2020 சனவரி – செப்தெம்பர் வரையில்

| பயன்வலுப்பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 30.06.2020 | 2020.06.30 ஆம் திகதிய 2182/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• சீமெந்து கிளிங்கர்கள் மீதான செஸ் அறவீட்டினை நீக்குவதற்காக. |
| | **சுங்க இறக்குமதி தீர்வை - 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்** |
| 08.03.2020 | அரசிறைப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் . 01/2020 (07.03.2020 ஆம் திகதிய 2165/72 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• உழுந்து தொடர்பாக புதிய இயைபுறு முறைக் குறியீடு ஒன்றினை உருவாக்குவதற்காக. |
| 10.04.2020 | அரசிறைப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் - 02/2020 (2020.04.09 ஆம் திகதிய 2170/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• உராய்வு நீக்கி எண்ணெய்களின் இறக்குமதி மீதான சுங்க இறக்குமதி தீர்வையைத் திருத்துவதற்காக. |
| 17.04.2020 | அரசிறைப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் 03/2020 (2020.04.16 ஆம் திகதிய 2174/4 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• தெரிவு செய்யப்பட்ட பொருட்கள் மீதான சுங்க இறக்குமதி தீர்வையைத் திருத்துவதற்காக. |
| 23.04.2020 | அரசிறைப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் 04/2020 (2020.04.22 ஆம் திகதிய 2172/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி மீதான சுங்க இறக்குமதி தீர்வையைத் திருத்துவதற்காக. |
| 19.06.2020 | அரசிறை பாதுகாப்பு கட்டளை இலக்கம் 05/2020 (18.06.2020 ஆம் திகதிய 2180.'.31 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>• தெரிவு செய்யப்பட்ட இறக்குமதிகளின் இயைபுறு முறைக் குறியீட்டை உருவாக்கலும் மற்றும் சுங்க தீர்வையை திருத்துதலும் |
| 08.07.2020 | அரசிறைப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் 06/2020 (2020.07.08 ஆம் திகதிய 2183/27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• உழுந்தின் இறக்குமதி மீதான சுங்க இறக்குமதி தீர்வையின் வலுப்பெறும் காலத்தை நீட்சித்தல். |
| 22.09.2020 | அரசிறை பாதுகாப்பு கட்டளை இலக்கம்<br>07/2020 (21.09.2020 ஆம் திகதிய 2194/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>• மூங்கிலின் இறக்குமதிக்கான சுங்க இறக்குமதி தீர்வையை திருத்துதல். |
| | **சுங்கத் தீர்வை மீதான மேலதிக அறவீடு – சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 232)** |
| 14.03.2020 | 13.03.2020 ஆம் திகதிய 2166/35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வைக்கு மேலதிக அறவீடு ஒன்றை இரண்டு மாத காலத்திற்கு அறிமுகப்படுத்துவதற்காக. |
| 23.04.2020 | 22.04.2020 ஆம் திகதிய 2172/07 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வைக்கான மேலதிக அறவீட்டை இரண்டு மாத காலத்திற்கு அதிகரிப்பதற்காக. |
| 24.06.2020 | 24.06.2020 ஆம் திகதிய 2181/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• பெற்றோல் மற்றும் டீசலின் இறக்குமதிகள் மீது இரண்டு மாத காலத்திற்கு வலுப்பெறும் வகையில் சுங்க தீர்வைக்கான மேலதிக அறவீட்டை குறைத்தலும் நீடித்தலும். |
| 24.08.2020 | 23.08.2020 ஆம் திகதிய 2189/57 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• பெற்றோல் மற்றும் டீசலின் இறக்குமதிகள் மீதான சுங்க தீர்வைக்கான மேலதிக அறவீட்டை அதே விகிதத்தில் மேலும் மூன்று மாதங்களிற்கு நீடித்தல். |

**கட்டம் 3 :** பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2020 சனவரி – செப்தெம்பர் வரையில்

| பயன்வலுப்பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| | **சுங்க இறக்குமதி தீர்வை தளர்த்தீடு – சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 232)** |
| 14.01.2020 | • கோதுமை மா இறக்குமதி மீது கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 13 சுங்கத் தீர்வை தள்ளுபடியினை அறிமுகப்படுத்துவதற்காக. |
| 14.03.2020 | • ஓட்டோ டீசல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றிற்கு ரூபா 3 சுங்க இறக்கமதி தீர்வை தளர்வினை நீக்குவதற்காக<br>• பெற்றோல் (ஒக்ரேன் 92) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 17 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 5 வரை சுங்கத் தீர்வை தளர்வினைக் குறைப்பதற்காக. |
| 23.04.2020 | • பெற்றோல் (ஒக்ரேன் 92) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 5 சுங்கத் தீர்வை தளர்வினை நீக்குவதற்காக. |
| 30.06.2020 | • பெற்றோல் 92 மற்றும் பெற்றோல் 95 இற்கான இறக்குமதிகள் மீது லீற்றரிற்கு ரூபா 6.00 படி இறக்குமதி தீர்வை தளர்வை அறிமுகப்படுத்தல்.<br>• சுப்பர் டீசல் மற்றும் ஒடோ டீசல் என்பவற்றின் இறக்குமதிகள் மீது லீற்றரிற்கு முறையே ரூபா 5.00 மற்றும் ரூபா 7.00 படி இறக்குமதி தீர்வை தளர்வை அறிமுகப்படுத்தல். |
| 17.09.2020 | • பெற்றோல் 92 இன் இறக்குமதி மீதான சுங்க இறக்குமதி தீர்வை தளர்வை லீற்றரிற்கு ரூபா 6.00 இலிருந்து ரூபா 5.00 ஆக குறைத்தல்.<br>• டீசலிற்கான இறக்குமதி மீதான சுங்க இறக்குமதி தீர்வை தளர்வை லீற்றரிற்கு ரூபா 7.00 இலிருந்து ரூபா 1.00 ஆக குறைத்தல். |
| | **விசேட வியாபாரப் பண்ட அறவீடு – 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்** |
| 25.01.2020 | 2020.01.24 ஆம் திகதிய 2159/41 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை 31 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு நீடிப்பதற்காக. |
| 02.02.2020 | 2020.02.01 ஆம் திகதிய 2160/63 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• பெரிய வெங்காயம், சிக் கடலைகள் சிவப்புப் பருப்பு (முழுமையானவை மற்றும் உடைக்கப்பட்டவை), மஞ்சள் பருப்பு (முழுமையானவை மற்றும் உடைக்கப்பட்டவை), பேரீச்சம்பழம், (புதிய மற்றும் உலர்ந்த) தோடம்பழம், (புதிய) அப்பிள் (புதிய) மக்காச் சோளம், மரக்கறி எண்ணெய், பீற் மற்றும் கரும்புச் சீனி, வெள்ளை பளிங்கு நிற கரும்புச் சீனி, வெள்ளை பளிங்குநிற பீற் சீனி என்பனவற்றின் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டினை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிப்பதற்காக. |
| 07.02.2020 | 2020.02.06 ஆம் திகதிய 2161/34 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• மீன் (புதிய, குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்ட) இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டினை கிலோ கிறாமொன்றிற்கு ரூபா 25 இனால் மூன்று மாத காலப்பகுதிக்கு குறைப்பதற்காக. |
| 25.02.2020 | 2020.02.24 ஆம் திகதிய 2164/10 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை 31 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு நீடிப்பதற்காக. |
| 04.03.2020 | 2020.03.03 ஆம் திகதிய 2165/12 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• மீன் (புதிய, குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்ட) இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை கி.கிறாமொன்றிற்கு 150 ரூபாவினால் ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிப்பதற்காக. |
| 08.03.2020 | 2020.03.07 ஆம் திகதிய 2165/73 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• மெக்கரல், உழுந்து, கௌபி மற்றும் குரக்கன் என்பனவற்றின் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டினை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிப்பதற்காக. |

**கட்டம் 3 :** பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2020 சனவரி – செப்தெம்பர் வரையில்

| பயன்வலுப்பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 13.03.2020 | 2020.03.13 ஆம் திகதிய 2166/34 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• 2020.03.03 ஆம் திகதிய 2165/12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மீன் இரை இறக்குமதி தொடர்பிலான கட்டளையின் பின்னோக்கிய விளைவினை நீக்குவதற்காக. |
| 18.03.2020 | 2020.03.18 ஆம் திகதிய 2167/10 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• 2020.03.03 ஆம் திகதிய 2165/12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மீன் (புதிய, குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்ட) இறக்குமதி தொடர்பிலான கட்டளையின் பின்னோக்கிய விளைவினை நீக்குவதற்காக. |
| 19.03.2020 | 2020.03.18 ஆம் திகதிய 2167/11 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• தொற்றுநீக்கிகள் மற்றும் முகக் கவசங்கள் இறக்குமதி மீது கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 1 இனை விசேட வியாபாரப் பண்ட அறவீடாக இரண்டு மாத காலப்பகுதிக்கு விதிப்பதற்காக. |
| 27.03.2020 | 2020.03.26 ஆம் திகதிய 2168/7 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்கு நீடிப்பதற்காக. |
| 10.04.2020 | 2020.04.09 ஆம் திகதிய 2170/5 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• மரக்கறி எண்ணெய்கள் இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக திருத்தியமைப்பதற்காக. |
| 17.04.2020 | 2020.04.16 ஆம் திகதிய 2171/2 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• தோடம்பழம் (புதிய), திராட்சைப் பழம் (புதிய, உலர்த்திய) மற்றும் அப்பில் இறக்குமதி மீதான விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டினை இரண்டு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக திருத்தியமைப்பதற்காக. |
| 17.04.2020 | 2020.04.16 ஆம் திகதிய 2171/3 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• மரக்கறி எண்ணெய்கள் இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக விட்டுவிடுவதற்காக. |
| 01.05.2020 | 2020.04.30 ஆம் திகதிய 2173/12 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>• பெரிய வெங்காயம் இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை மூன்று மாத காலப் பகுதிக்கு கிலோ கிறாமொன்றிற்கு 1ரூபாவிலிருந்து கிலோ கிறாமொன்றிற்கு 15 ரூபா வரை அதிகரிப்பதற்காக. |
| 08.05.2020 | 2020.05.07 ஆம் திகதிய 2174/7 ஆம் இலக்க வர்த்தமாானி அறிவித்தல்<br>• நெத்தலிகள், கருவாடு, பாசிப்பயறு, மங்குஸ்தான் பழங்கள் (உலர்ந்த/புதிய) மற்றும் கிவி பழம் ஆகியவற்றின் இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டின் செயல்வலுக்காலத்தினை மூன்று மாத காலத்திற்கு நீடிப்பதற்காக. |

**கட்டம் 3 :** பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2020 சனவரி – செப்தெம்பர் வரையில்

| பயன்வலுப்பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 22.05.2020 | 2020.05.21 ஆம் திகதிய 2176/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• யோகட், உருளைக்கிழங்கு, சிறிய வெங்காயம், வெள்ளைப்பூடு, பட்டாணிக் கடலை (முழுமையானவை மற்றும் உடைக்கப்பட்டவை, கடலை (முழுமையானவை மற்றும் உடைக்கப்பட்டவை) சிவப்புபருப்பு (முழுமையானவை மற்றும் உடைக்கப்பட்டவை), மஞ்சள் பருப்பு (முழுமையானவை மற்றும் உடைக்கப்பட்டவை), பேரீச்சம்பழங்கள் (புதியவை மற்றும் உலர்ந்தவை), தோடம்பழங்கள் (புதியவை), லெமன் (புதியவை மற்றும் உலர்ந்தவை, திராட்சை (புதியவை மற்றும் உலர்ந்தவை), அப்பிள்கள் (புதியவை மற்றும் உலர்ந்தவை), குவின்ஸஸ், மிளகாய் (உலர்ந்தவை), சீரக விதைகள், மக்காச் சோளம், நிலக்கடலைகள் (கோது நீக்கிய), மரக்கறி எண்ணெய்கள், மீன், பீட் மற்றும் கரும்பு சீனி, வெள்ளைப்பளிங்கு நிற சீனி மற்றும் வெள்ளைப்பளிங்கு நிற பீட் சீனி ஆகியவற்றின் இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டின் செல்லுபடியான காலத்தை ஆறு மாத காலத்திற்காக திருத்துவதற்காகவும் நீட்டிப்பதற்காகவும். |
| 22.05.2020 | 2020.05.21 ஆம் திகதிய 2176/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• இ.மு.தலைப்பு 03.03 இன் கீழ் உள்ள ஜக் அன்ட் ஹோஸ் மக்கரல் இறக்குமதி மீது (இ.மு. குறியீடு 0303.55 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள டிராச்சரஸ் எஸ்பீபீ) ஒரு கிலோ கிறாமிற்கு ரூபா.150 அல்லது 10% இ இவற்றில் கூடிய தொகையில் கிலோ கிறாமிற்கு ரூபா 6. அறவிட்ட பின்னர் எஞ்சிய தொகையை மூன்று மாத காலத்திற்காக விட்டு விடல் (தள்ளுபடி செய்வதற்காக) |
| 17.06.2020 | 2020.06.16 ஆம் திகதிய 2180/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• மரக்கறி கொழுப்புக்கள் மற்றும் எண்ணெய்களின் இறக்குமதி மீது ஆறு மாத காலப் பகுதிக்காக விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை விதித்தல். |
| 17.06.2020 | 2020.06.16 ஆம் திகதிய 2180∴11 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• தெரிவு செய்யப்பட்ட பழங்களின் இறக்குமதி மீது விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை ஆறு மாத காலம் விதித்தல். |
| 27.06.2020 | 26.06.2020 ஆம் திகதிய 2181/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• தெரிவுசெய்யப்பட்ட மரக்கறி எண்ணெயின் மீதி ஆறு மாத காலத்திற்கு விசேட வியாபார பண்ட அறவீட்டினை விதித்தல். |
| 27.06.2020 | 26.06.2020 ஆம் திகதிய 2181/24 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• இயைபுறு முறைக் குறியீட்டை இலக்கம் 1516.20 இல் உள்ள மரக்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய் மீது விதிக்கப்பட்ட விசேட வியாபார பண்ட அறவீட்டினை கிலோகிராமிற்கு ரூபா 440 ஆக தளர்வினையும் இயைபுறு முறைக் குறியீட்டை இலக்கம் 1517.90 இல் உள்ள மாஜரீனிற்கான விசேட வியாபார பண்ட அறவீட்டினை கிலோவிற்கு ரூபா 400 ஆக தளர்வினையும் ஆறு மாத காலத்திற்கு செயற்படுத்தல். |
| 11.07.2020 | 2020.07.10 ஆம் திகதிய 2183/44 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• தேங்காய் எண்ணெய்களின் இறக்குமதி மீது ஆறு மாத காலப் பகுதிக்காக விசேட வியாபாரப் பண்ட அறவீட்டில் ரூ. 25 இனை தள்ளுபடி செய்தல். |
| 19.07.2020 | 2020.07.18 ஆம் திகதிய 2184/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• மாசிக் கருவாடும் பதிலீடுகளும், அனைத்து வகையான சீவப்பட்ட அல்லது பொடி செய்யப்பட்ட பாலாடைக் கட்டிகள், கொத்தமல்லி விதைகள் (உடைக்கப்படாதனவும் அரைக்கப்படாதனவும்), மஞ்சள் (உடைக்கப்படாதனவும் அரைக்கப்படாதனவும்), மற்றும் மஞ்சள் (பிற) ஆகியவற்றின் இறக்குமதி மீது ஆறு மாத காலப் பகுதிக்காக விசேட வியாபாரப்பண்ட அறவீட்டினை விதித்தல். |

**கட்டம் 3 :** பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2020 சனவரி – செப்தெம்பர் வரையில்

| பயன்வலுப்பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 01.08.2020 | 2020.07.31 ஆம் திகதிய 2186/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• நெத்தலிகள், கருவாடு, பெரிய வெங்காயங்கள், பிற-பச்சைப்பயறு, மங்குஸ்தான் பழங்கள்- புதிய, மங்குஸ்தான் பழங்கள்-உலர்ந்த, கிவி பழம் மற்றும் ஏனையவற்றின் இறக்குமதி மீது மூன்று மாத காலப் பகுதிக்காக விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை விதித்தல். |
| 15.08.2020 | 14.08.2020 ஆம் திகதிய 2188/50 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>உருளைக்கிழங்கின் இறக்குமதி மீது விசேட வியாபார பண்ட அறவீட்டை கிலோவிற்கு ரூபா 55 ஐ மேலும் நான்கு மாதங்களிற்கு நீடித்தலும் |
| 22.08.2020 | 21.08.2020 ஆம் திகதிய 2189˙.39 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• இயைபுறு முறைக் குறியீட்டை இலக்கம் 03.03 (டிசாசராஸ் இயைபுறு முறைக் குறியீட்டை இலக்கம் 03.03.55) இல் அடையாளப்படுத்தப்படும். ஜக் மற்றும் கோர்ஸ் மக்ரல் இன் இறக்குமதி மீது விசேட வியாபார பண்ட அறவீட்டினை கிலோவிற்கு ரூபா 150 அல்லது 10 சதவீதத்தில் எது அதிகமானதோ அதில் ரூபா 6 இனை தளர்த்தி மூன்று மாதகாலத்திற்கு அறவிடுதல். |
| 04.09.2020 | 03.09.2020 ஆம் திகதிய 2191˙.26 இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் மீது விசேட வியாபார பண்ட அறவீட்டை ஆறு மாதகாலம் நீட்டித்தல |
| 01.10.2020 | 30.09.2020 ஆம் திகதிய 2195/29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• வெண்ணெய், பால்பொருட்கள், குரக்கன் மா, மஸ்டார்ட் விதை, மசாலா மற்றும் உப்பு மீதான விசேட வியாபாரப்பண்ட அறவீட்டை ஒருவருட காலத்திற்கு நீட்டித்தல். |
| | **2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம்** |
| | **மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி** |
| 20.02.2020 | 2020.02.20 ஆம் திகதிய 2163/26 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• 2019.10.31 ஆம் திகதிய 2147/72 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தலைத் திருத்துவதற்காக. |
| 26.05.2020 | 2020.05.26 ஆம் திகதிய 2177/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• 2019.10.31 ஆம் திகதிய 2147/72 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தலைத் திருத்துவதற்காக. |
| 17.06.2020 | 2020.06.17 ஆம் திகதிய 2180/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>• 2020.05.26 ஆம் திகதிய 2177/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலைத் திருத்துவதற்காக. |
| | **படுகடன் மீள்கொடுப்பனவு அறவீடு** |
| 01.01.2020 | படுகடன் மீள்கொடுப்பனவு அறவீட்டினை நீக்குவதற்காக. |
| | **2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்** |
| | **தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்கள் மீதான அறவீடு** |
| 27.03.2020 | 2020.03.27 ஆம் திகதிய 2168/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>• 2017.11.07 ஆம் திகதிய 2044/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலைத் திருத்துவதற்காக. |
| | **2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டம்** |
| 01.10.2020 | புறப்படுகை கட்டணம்<br>21.09.2020 ஆம் திகதிய 2194/06 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>29.07.2019 ஆம் திகதிய 2134/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலை திருத்துவதற்காக. |

## 1.3 அரசாங்க செலவினம்

2020 முதல் எட்டு மாத அரச செலவினமான ரூபா 1,883.7 பில்லியனில், ரூபா 1,670.4 பில்லியன் மீண்டெழும் செலவினமாகவும், ரூபா 213.3 பில்லியன் மூலதன செலவினமாகவும் காணப்பட்டன.

**அட்டவணை 1.12 :** அரசாங்க செலவினத்தின் செயலாற்றுகை

| | ரூ.மில்லியன் | |
|---|---|---|
| | சனவரி – ஆகஸ்ட் | |
| விடயம் | 2019 | 2020 (அ) |
| மீண்டெழும் செலவினம் | **1,500,534** | **1,670,356** |
| சம்பளங்கள் | **446,451** | **516,354** |
| ஓய்வூதியம் | 143,511 | 160,058 |
| வட்டி | 599,612 | 653,498 |
| ஏனைய | 310,960 | 340,446 |
| மூலதன செலவினம் | 426,571 | 213,350 |
| மொத்தம் | **1,927,104** | **1,883,706** |

மூலம்: தேசிய வரவுசெலவுதிட்ட திணைக்களம்

(அ) தற்காலிக

### தனிப்பட்ட வேதனங்கள் மற்றும் ஓய்வூதியங்கள்

மாகாண சபைகளின் பொதுச்சேவை ஊழியர்கள் உள்ளடங்கலான பொதுச்சேவை ஊழியர்களின் வேதனங்கள், 2019 இன் முதல் எட்டு மாத செலவுகளாகிய ரூ. 446.4 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியின் இதற்கான செலவினம் 15.7 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 516.3 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 2019 இன் இதே காலப்பகுதியின் மத்திய அரசினால் மாகாண சபைகளிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட ரூபா 115.9 பில்லியனுடன் ஒப்பிடும் போது அத்தொகை 2020 இல் அதே காலப்பகுதிக்கு 32.6 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 153.8 பில்லியனாக காணப்பட்டது.

2019 இன் முதல் எட்டு மாத கால ஓய்வூதிய செலவான ரூபா 143.5 பில்லியனில் இருந்து 2020 இல் இதே காலப்பகுதிக்கான செலவாக 11.5 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 160.1 பில்லியனாக காணப்பட்டது.

### வட்டி மீளளிப்பு

2019 இன் முதல் எட்டு மாத கடன் மீளளிப்பான ரூபா 599.6 பில்லியனில் இருந்து 2020 இற்கான இதே காலப்பகுதியில் கடன் மீளளிப்பானது 9.0 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 653.5 பில்லியனாக காணப்பட்டது. இதில் ரூபா 481.7 பில்லியன் உள்நாட்டு கடன்களிற்கான வட்டியாகவும் ரூபா 171.7 பில்லியன் வெளிநாட்டு கடன்களிற்கான வட்டியாகவும் செலுத்தப்பட்டன.

### நலனோம்புகை செலவுகள்

2019 இன் முதல் எட்டுமாத நலனோம்புகை செலவான ரூபா 141.5 பில்லியனானது 2020 இதே காலப்பகுதியில் ரூபா 199.4 பில்லியனாக காணப்பட்டது. 2020 இன் முதல் எட்டு மாதத்திலும் "எல்லோரிற்கும் இலவச மருத்துவம்", "திரிபோசா", "போசன மல்" போன்ற திட்டங்களிற்காக ரூபா 44.1 பில்லியனாக காணப்பட்டது. "எல்லோரிற்கும் இலவச மருத்துவம்" செயற்திட்டத்திற்காக பெருமளவு செலவினம் ஏற்பட்ட அதேவேளை கல்வித்துறைக்கான செலவினமும் அதிகரிக்கப்பட்டது.

ரூபா 105.1 பில்லியன் வாழ்வாதார உதவிகளிற்காக செலவழிக்கப்பட்டது. இதில் ரூபா 47.7 பில்லியன் ஏப்பிரல் மற்றும் மே மாதங்களில் கொவிட்-19 உதவு தொகையாகிய ரூபா 5000 வழங்குவதற்காக செலவு செய்யப்பட்டது.

சமுர்த்தியும், உர மானியமும் பாரியளவிலான வாழ்வாதார செயற்திட்டங்களாகும். 2020 இன் முதல் எட்டு மாதத்தில் சமூக நலனோம்புகை மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்களிற்காக ரூபா 39.7 பில்லியன் செலவு செய்யப்பட்டன. இதில் ரூபா 25.4 பில்லியன் மாற்றுத்திறனாளி படையினரிற்காக செலவிடப்பட்டதோடு குறித்த செலவினம் 58 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது.

**அட்டவணை 1.13 :** அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2019 – 2020

ரூ.மில்லியன்

| காலப்பகுதி | திறைசேரி உண்டியல்கள் (%) | | | திறைசேரி முறிகள் (%) | | | | நாணய மாற்று வீதங்கள் ரூபா / ஐ.அ. டொ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | 2 வருடம் | 3 வருடம் | 4 வருடம் | 5 வருடம் | |
| **2019** | | | | | | | | |
| சனவரி | 10.01 | 9.87 | 10.69 | - | 10.85 | - | 11.58 | 182.1 |
| பெப்ரவரி | 9.55 | 9.87 | 10.67 | - | - | - | - | 178.7 |
| மார்ச் | 9.39 | 9.67 | 10.40 | - | - | - | 11.04 | 178.4 |
| ஏப்ரல் | 8.89 | 9.09 | 9.81 | - | 10.72 | - | 10.98 | 174.8 |
| மே | 8.52 | 8.63 | 8.88 | - | - | - | - | 176.4 |
| ஜூன் | 8.24 | 8.49 | 8.70 | 9.79 | - | - | 9.83 | 176.6 |
| ஜூலை | 7.85 | 7.94 | 8.21 | - | - | - | - | 176.0 |
| ஆகஸ்ட் | 7.63 | 7.70 | 8.22 | - | - | - | - | 178.0 |
| செப்தெம்பர் | 7.62 | 7.75 | 8.41 | - | - | - | 10.27 | 180.8 |
| ஒக்தோபர் | 7.49 | 7.65 | 8.35 | - | 9.65 | - | - | 181.5 |
| நவம்பர் | 7.45 | 7.67 | 8.29 | - | - | - | - | 180.4 |
| டிசெம்பர் | 7.51 | 8.02 | 8.45 | - | - | - | 9.87 | 181.3 |
| **2020** | | | | | | | | |
| சனவரி | 7.51 | 8.15 | 8.59 | - | 9.39 | - | 9.27 | 181.4 |
| பெப்ரவரி | 7.42 | 8.06 | 8.58 | - | - | - | - | 181.6 |
| மார்ச் | 7.00 | 7.25 | 7.50 | - | 9.33 | 9.81 | - | 185.1 |
| ஏப்ரல் | 6.75 | 6.80 | 7.00 | - | 8.14 | 8.70 | 8.75 | 193.1 |
| மே | 6.69 | 6.82 | 6.93 | - | 8.05 | - | - | 187.9 |
| ஜூன் | 5.50 | 5.53 | 5.66 | 5.86 | - | - | 8.59 | 186.0 |
| ஜூலை | 4.59 | 4.68 | 4.86 | 5.73 | - | - | 6.50 | 185.8 |
| ஆகஸ்ட் | 4.56 | 4.68 | 4.89 | - | - | - | - | 184.9 |
| செப்தெம்பர் | 4.51 | 4.64 | 4.89 | 5.65 | 5.72 | - | 6.59 | 185.0 |

மூலங்கள் : திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம், பொதுப் படுகடன் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1.14 : சமூக நலனோம்பல் செலவினம்**

ரூ.மில்லியன்

| விடயம் | சனவரி - ஆகஸ்ட் 2019 | 2020 (அ) |
|---|---|---|
| சுகாதார நலன் மற்றும் போசாக்கு | 41,260 | 44,089 |
| அனைவருக்கும் இலவச மருந்து | 36,453 | 40,133 |
| திரிபோசா நிகழ்ச்சித்திட்டம் | 1,282 | 728 |
| பாடசாலை சிறார்களுக்கான காலை உணவு | 174 | 65 |
| போசன மல்ல | 3,351 | 3,163 |
| கல்வி | 9,742 | 10,523 |
| இலவச பாடப் புத்தகங்கள் | 919 | 1,958 |
| இலவச பாடசாலை சீருடைகள் | 2,500 | 2,080 |
| பாடசாலை பருவகாலச் சீட்டுக்கள் | 1,399 | 2,900 |
| பாடசாலை போசனை உணவுத் திட்டம் | 2,436 | 1,541 |
| கடின மற்றும் அதிகடின பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான காலணிகள் | 681 | 491 |
| தரம் ஐந்து புலமைப் பரிசில்கள் | 123 | 321 |
| மகாபொல புலமைப் பரிசில்கள் | 822 | 698 |
| உதவுதொகைகள் | 438 | 427 |
| அறநெறி பாடசாலை பாடப் புத்தகங்கள் | 122 | 30 |
| ஆசிரியர்களுக்கான அறநெறி பாடசாலை சீருடைகள் | 66 | 3 |
| அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான உதவி | 236 | 74 |
| வாழ்வாதார உதவி | 57,964 | 105,157 |
| உர மானியம் | 30,148 | 21,349 |
| சமூர்தி நிவாரணம் | 27,036 | 35,087 |
| மீள்நடுகைக்கான (தேயிலை/இரப்பர்) மானியங்கள் | 534 | 740 |
| ஏற்றுமதி பயிர் அபிவிருத்திக்காக விவசாயிகளுக்கு உதவுதல் | 246 | 281 |
| கோவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்ட நபர்கள்/ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி | | 47,700 |
| சமூகநலன் மற்றும் பாதுகாப்பு வலை | 32,554 | 39,689 |
| மாற்றுத் திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான உதவி | 506 | 1,460 |
| முதியோர்களுக்கான உதவி | 3,331 | 6,575 |
| மாற்றுத்திறனாளிகளான படைவீரர்களுக்கான உதவி | 21,635 | 25,431 |
| ரணவிரு பெற்றோர்களுக்கான சமூக நலன் | 1,567 | 1,571 |
| உணவு உதவிஇ வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணம் | 228 | 52 |
| சிக்கனமற்ற வீதிகளுக்கான பேருந்து சேவை | 5,287 | 4,600 |
| மொத்தம் | 141,520 | 199,458 |

மூலம்: தேசிய வரவுசெலவு திட்ட திணைக்களம்

(அ) தற்காலிக

### பொது முதலீடு

2019 இன் முதல் எட்டு மாதங்களில், நெடுஞ்சாலைகள், நீர்வழங்கல், போக்குவரத்து, விவசாயம், சுகாதாரம் மற்றும் கல்வித்துறைக்காக முதலீடு செய்யப்பட்ட ரூபா 175 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில் ரூபா 98 பில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.4 திறைசேரி செயற்பாடுகள்

### பொது திறைசேரியின் காசுப்பாய்ச்சல் முன்னேற்றம்

2019 இன் முதல் எட்டு மாதங்களிற்கான பொது திறைசேரியின் காசு உட்பாய்ச்சலானது ரூபா 1,281.7 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதிக்கான காசு உட்பாய்ச்சலானது வருமானம் மற்றும் செலவுகள் உள்ளடங்கியதாக 31.3 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 880.4 பில்லியனாக காணப்பட்டது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கொவிட்-19 தொற்றினால் ஏற்பட்ட விளைவுகளினால் குறைவடைந்த பொருளாதார செயற்பாடுகளே இதற்கான காரணமாகும். 2019 இன் முதல் எட்டு மாதப்பகுதியில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களிற்கான காசு வெளிப்பாய்ச்சலான ரூபா 1,869.4 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதிக்கான காசு வெளிப்பாய்ச்சலானது 4.2 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 1,948.1 பில்லியனாக காணப்பட்டது.

2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை பொதுத் திறைசேரிக்கு கிடைக்கப்பெற்ற காசு உட்பாய்ச்சலானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 34.2 சதவீதத்தினால் குறைவடைந்ததன் காரணமாக 2019 இன் ஆகஸ்ட் இறுதிப்பகுதியில் காணப்பட்ட மொத்த காசு பற்றாக்குறையான ரூபா 587.7 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதியில் காசு பற்றாக்குறையானது 81.7 சதவீதத்தினால் அதிகரித்து 1,067.7 பில்லியன் ஆக காணப்பட்டது. இதன் விளைவாக 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதியில் உள்ளவாறு முடிவுறுத்தப்பட்ட காசு மற்றும் வங்கி கணக்குகளின் மீதியானது அதிகரித்த மறை பெறுமதியை ரூபா 541.5 பில்லியன் வரை காணப்பட்டது.

**அட்டவணை 1.15 :** அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள்

ரூ.மில்லியன்

| விடயம் | சனவரி - ஆகஸ்ட் மெய் | |
|---|---|---|
| | 2019 | 2020 |
| ஆரம்ப காசு மீதி | -274.2 | -274.3 |
| வருமானம் மற்றும் பிற பெறுகைகளிலிருந்தான மொத்த காசு உட்பாய்ச்சல் | 1,281.7 | 880.4 |
| மீண்டெழும் செலவினங்களுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | -1,442.9 | -1,626.7 |
| மூலதனக் கொடுப்பனவுகளுக்காக மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | -426.5 | -321.4 |
| தேறிய காசு மிகை/ (பற்றாக்குறை) | -587.7 | -1,067.7 |
| மொத்த பெறுகை * | 1,524.1 | 1,355.7 |
| படுகடன் மீள்கொடுப்பனவு | -886.5 | -616.2 |
| தேறிய பெறுகை | 637.6 | 739.5 |
| முன்னைய ஆண்டின் சர்வதேச பிணை முறிகளில் இருந்தான வருமான மீதி | - | 51.4 |
| சரிபடுத்தல் கணக்கு மீதி (TEB, தேறிய வைப்புகள் போன்றன) | 5.3 | 9.6 |
| இறுதி காசு மீதி | -219.0 | -541.5 |

மூலம்: திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

* 2020 ஆகஸ்ட் 31 அன்றுள்ளவாறு திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்ட/ கருத்திட்ட கடன்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### அரச கடன்களின் முகாமைத்துவம்

இக்காலப்பகுதியில் அபிவிருத்தி கருத்திட்டம், மற்றும் காசுப் பாய்ச்சல் செயற்பாடுகளிற்காக நிதியினை வழங்கும் பொருட்டு, ரூபா 1,085.8 பில்லியன் உள்நாட்டு மற்றும் ரூபா 269.9 பில்லியன் வெளிநாட்டு கடன்கள் உட்பட 2020 ஜனவரி 01 இலிருந்து ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியினுள் அரசாங்கம் பெற்ற கடன்களின் மொத்த பெறுமதியானது ரூபா 1,355.7 பில்லியனாகும். 2020 இன் முதல் எட்டு மாதங்களில் பெறப்பட்ட உள்நாட்டு கடன்களில் கிட்டதட்ட 74 சதவீதமானது நீண்ட கால கடன்களாகும். திறைசேரி

பிணையங்கள், திறைசேரி உண்டியல்கள், இலங்கை அபிவிருத்தி பிணையங்கள் மற்றும் வெளிநாட்டு நாணய வங்கி அலகுகள் என்பன இலங்கை அரசாங்கத்தின் உள்நாட்டு கடன்கள் பெறும் பிரதான வழிமுறைகளாகும். இதனடிப்படையில், மொத்த உள்நாட்டு கடன்களில் 67 சதவீதமானவை திறைசேரி பிணையங்கள் மூலமும், 21 சதவீதமானவை திறைசேரி உண்டியல் மூலமும், 7 சதவீதமானவை இலங்கை அபிவிருத்தி பிணையங்களினூடும் மற்றைய 5 சதவீதமானவை வெளிநாட்டு நாணய வங்கி அலகுகளின் மூலமும் 2020 இன் முதல் எட்டு மாத காலங்களில் பெறப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.16 :** மொத்த உள்நாட்டு பெறுகைகள்

| சாதனங்கள் | ரூ.மில்லியன<br>ஜனவரி<br>-<br>ஆகஸ்ட்<br>2020 |
|---|---|
| திறைசேரி முறிகள் | 721.2 |
| திறைசேரி உண்டியல்கள் (தேறிய) | 227.9 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 77.7 |
| வெளிநாட்டு நாணய வங்கியிடல் அலகு (தேறிய) | 57.8 |
| இலங்கை மத்திய வங்கி தற்காலிக முற்பணங்கள் | 1.2 |
| மொத்தம் | 1085.8 |

மூலம்: திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

**வரைபு 1.4 :** சாதன அடிப்படையில் மொத்த உள்நாட்டுப் பெறுகைகள் (சனவரி - ஆகஸ்ட் 2020)




மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

மேலும், 2020 இன் முதல் காலாண்டில் பெறப்பட்ட குறித்த நோக்கங்களிற்காக வழங்கப்பட்ட கடன்கள், வெளிநாட்டு நாணய கடன் வழங்கல் சேவைகளிற்காக பயன்படுத்தப்பட்டது. 2020 ஆகஸ்ட் இறுதியில் பெறப்பட்ட நிகர கடன்கள் ரூபா 739.5 பில்லியன் ஆகும்.

### திறைசேரியின் உத்தரவாதங்களின் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல்

2016 இன் 13 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்பளிப்பு) (திருத்தப்பட்ட) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், வரையறுக்கப்பட்ட அளவிற்கு உட்பட்டதாக 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதியில் ரூபா 1,317 பில்லியன் திறைசேரியினால் வழங்கப்பட்ட மற்றும் வலுவிலுள்ள திறைசேரி உத்தரவாதங்களின் தொகையாக காணப்பட்டது. 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதியில் உள்ளவாறு, பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் விபரங்கள் பின்னிணைப்பு I இல் வழங்கப்பட்டுள்ளது.

## 1.5 வெளிநாட்டு நிதியளிப்பு

### வெளிநாட்டு நிதியளிப்பு உறுதியளிப்புகள்

பொது முதலீட்டு செயற்பாட்டிற்காக 2020 ஜனவரி 01 இலிருந்து ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு அபிவிருத்தி முகவர்கள் மற்றும் கடன் வழங்குபவர்களுடன் ஏற்படுத்தப்பட்ட 11 உடன்படிக்கைகளினூடு ஐ.அ.டொலர் 742.8 மில்லியனை அரசாங்கமானது ஏற்பாடு செய்துள்ளது. இவற்றில், ஐ.அ.டொலர் 500 மில்லியனை, சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து வெளிநாட்டு நாணய நிதி முறையினூடு வரவு செலவு திட்ட உதவியாகவும், கொவிட்-19 இனை எதிர்கொள்ளும் முகமாக உலக வங்கியினால் ஐ.அ.டொலர் 128.6 மில்லியன் உடனடி செயற்பாடு மற்றும் சுகாதார முறைமைகளிற்காகவும், மற்றும் ஜப்பான், ஜேர்மனி, ஆசிய அபிவிருத்தி வங்கி, அகதிகளிற்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தால் வழங்கப்பட்ட நிதி உதவிகள் முறையே ஐ.அ.டொலர் 7.6 மில்லியன், ஐ.அ.டொலர் 12.5 மில்லியன், ஐ.அ.டொலர் 3.0 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர். 0.02 மில்லியன் என்பன உள்ளடங்கியுள்ளன. கொவிட்-19 தாக்கத்தினால் இந்நிதிகளின் செயற்பாடுகள் தடைப்பட்டன.

**அட்டவணை 1.17 :** 2019 ஜனவரி 01 முதல் ஆகஸ்ட் 31 வரையில் நியதிகளுடனான வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புக்கள

| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் முகவர் | சாதன வகை | உடன்படிக்கைத் திகதி (ஆண்டு/ மாதம்/திகதி) | கருத்திட்டம்/ நிகழ்ச்சித் திட்டம்/ சாதனத்தின் பெயர் | அர்ப்பணிக்கப்பட்ட தொகை (மில்லியன்) | | | | நியதிகள் | | | | ஏனைய நியதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நாணயம் | சாதன நாணயத்தில் | ரூபா. | ஐ.அ.டொ | வட்டி வகை | வருடாந்த விகிதம் (%) | அண்ணளவாக (100) அடிப்படை | ஏனைய கட்டணங்கள் | சலுகைக் காலம் (ஆண்டு கள்) | முதிர்ச்சி/ உடன்படிக்கை திகதியிலிருந்தான காலம் |
| இருதரப்பு | | | | | | | | | | | | | |
| சீன அபிவிருத்தி வங்கி | கடன் | 3/18/20 | வெளிநாட்டு நாணய நியதி நிதியளிப்பு வசதி 2020 | ஐ.அ. டொ. | 500 | 92,542.70 | 500 | மாறக்கூடிய | ஐ.அ. டொலருக்கான லிபோர் | 2.51 | முன்னோக்கிய கட்டணம் 1.25% | 3 | 10 |
| ஜப்பான் | மானியம் | 7/30/20 | இலங்கையில் கொவிட்-19 தடுப்பு செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்காக மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான யப்பான் கருத்திட்டமல்லாத மானிய உதவி | யென் | 800 | 1,413.90 | 7.6 | ஏற்புடையதாகாது | | | | | 3 |
| | மானியம் | 8/11/20 | இலங்கை பொலீஸ் எதிர்- போதைப் பொருள் மேம்பாட்டுக் கருத்திட்டம் | யென் | 200 | 348.8 | 1.9 | ஏற்புடையதாகாது | | | | | 3 |
| ஜேர்மனி | மானியம் | 6/10/20 | ஜேர்மனியின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு | யூரோ | 11 | 2,308.80 | 12.5 | ஏற்புடையதாகாது | | | | | 1 |
| பல்தரப்பு | | | | | | | | | | | | | |

**அட்டவணை 1.17 :** 2019 ஜனவரி 01 முதல் ஆகஸ்ட் 31 வரையில் நியதிகளுடனான வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புக்கள

| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் முகவர் | சாதன வகை | உடன்படிக்கைத் திகதி (ஆண்டு/ மாதம்/திகதி) | கருத்திட்டம்/ நிகழ்ச்சித் திட்டம்/ சாதனத்தின் பெயர் | அர்ப்பணிக்கப்பட்ட தொகை (மில்லியன்) | | | | நியதிகள் | | | | ஏனைய நியதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | வட்டி | | | | | |
| | | | | நாணயம் | சாதன நாணயத்தில் | ரூபா. | ஐ.அ.டொ | வகை | வருடாந்த விகிதம் (%) | அண்ணளவாக (100) அடிப்படை | ஏனைய கட்டணங்கள் | சலுகைக் காலம் (ஆண்டு கள்) | முதிர்ச்சி/ உடன்படிக்கை திகதியிலிருந்தான காலம் |
| மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச நிறுவனம் | கடன் | 4/3/20 | கொவிட் - 19 அவசரகால நடவடிக்கை மற்றும் சுகாதார முறைமைகள் தயார்நிலை | ஐ.அ. டொ. | 35 | 6,685.00 | 35 | மாறக்கூடிய | ஐ.அ. டொலருக்கான லிபோர் | 0 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.25% | 5 | 30 |
| | | | | | | | | | | | முன்னோக்கிய கட்டணம 0.25% | | |
| சர்வதேச அபிவிருத்தி சங்கம் | கடன் | 4/3/20 | கொவிட் - 19 அவசரகால நடவடிக்கை மற்றும் சுகாதார முறைமைகள் தயார்நிலை | ஐ.அ. டொ | 93.6 | 17,877.60 | 93.6 | மாறக்கூடிய | ஐ.அ. டொலருக்கான லிபோர் | 0 | முன்னோக்கிய கட்டணம ஐ.அ.டொ. 234,000 | 5 | 30 |
| | கடன் | 7/23/20 | கொவிட் - 19 அவசரகால நடவடிக்கை மற்றும் சுகாதார முறைமைகள் தயார்நிலைக்கான மேலதிக நிதியளிப்பு – சலுகைக் கடன் | SDR | 33 | 8,467.20 | 45.6 | நிலையான | 1.25 | ஏற்புடையதாகாது | சேவைக் கட்டணம் 0.75% | 5 | 30 |

**அட்டவணை 1.17 :** 2019 ஜனவரி 01 முதல் ஆகஸ்ட் 31 வரையில் நியதிகளுடனான வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புக்கள

| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் முகவர் | சாதன வகை | உடன்படிக்கைத் திகதி (ஆண்டு/ மாதம்/திகதி) | கருத்திட்டம்/ நிகழ்ச்சித் திட்டம்/ சாதனத்தின் பெயர் | அர்ப்பணிக்கப்பட்ட தொகை (மில்லியன்) | | | | நியதிகள் | | | | ஏனைய நியதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நாணயம் | சாதன நாணயத்தில் | ரூபா. | ஐ.அ.டொ | வகை | வட்டி: வருடாந்த விகிதம் (%) | வட்டி: அண்ணளவாக (100) அடிப்படை | ஏனைய கட்டணங்கள் | சலுகைக் காலம் (ஆண்டு கள்) | முதிர்ச்சி/ உடன்படிக்கை திகதியிலிருந்தான காலம் |
| | கடன் | 7/23/20 | கொவிட் - 19 அவசரகால நடவடிக்கை மற்றும் சுகாதார முறைமைகள் தயார்நிலைக்கான மேலதிக நிதியளிப்பு – சலுகை அல்லாத கடன் | ஐ.அ. டொ. | 41.9 | 7,784.60 | 41.9 | மாறக்கூடிய | ஐ.அ. டொலருக்கான லிபோர் | 0 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.25%, | 5 | 30 |
| | | | | | | | | | | | முன்னோக்கிய கட்டணம் ஐ.அ.டொ. 104,750 | | |
| | மானியம் | 7/23/20 | கொவிட் - 19 அவசரகால நடவடிக்கை மற்றும் சுகாதார முறைமைகள் தயார்நிலைக்கான மேலதிக நிதியளிப்பு – மானியம் | ஐ.அ. டொ. | 1.7 | 320.2 | 1.7 | ஏற்புடையதாகாது | | | | | 0.5 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | மானியம் | 6/8/20 | கொவிட் - 19 அவசரகால நடவடிக்கை கருத்திட்டம் | ஐ.அ. டொ. | 3 | 556.4 | 3 | ஏற்புடையதாகாது | | | | | 0.5 |

**அட்டவணை 1.17 :** 2019 ஜனவரி 01 முதல் ஆகஸ்ட் 31 வரையில் நியதிகளுடனான வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புக்கள

| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் முகவர் | சாதன வகை | உடன்படிக்கைத் திகதி (ஆண்டு/ மாதம்/திகதி) | கருத்திட்டம்/ நிகழ்ச்சித் திட்டம்/ சாதனத்தின் பெயர் | அர்ப்பணிக்கப்பட்ட தொகை (மில்லியன்) | | | | நியதிகள் | | | | ஏனைய நியதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | வட்டி | | | | |
| | | | | நாணயம் | சாதன நாணயத்தில் | ரூபா. | ஐ.அ.டொ | வகை | வருடாந்த விகிதம் (%) | அண்ணளவாக (100) அடிப்படை | ஏனைய கட்டணங்கள் | சலுகைக் காலம் (ஆண்டு கள்) | முதிர்ச்சி/ உடன்படிக்கை திகதியிலிருந்தான காலம் |
| அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணைக் குழு | மானியம் | 3/2/20 | 5 மாவட்டங்களைச் சார்ந்தோர் தமது உரிமைகளுக்கு பிரவேசித்துக் கொள்வதற்கான பெறுகைகளை இயலச் செய்தல். | இலங்கை ரூபா | 4.6 | 4.6 | 0.02 | ஏற்புடையதாகாது | | | | | 0.5 |
| மொத்தம் | | | | | | 138,309.70 | 742.8 | | | | | | |

மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

குறிப்பு : LIBOR = லண்டன் வங்கியிடை வழங்கு வீதம், ஒவ்வொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்ட திகதியில் நடப்பிலிருந்த செலாவணி விகிதத்திற்கு அமைவாக பல்வேறு நாணயங்களில் உறுதியளிக்கப்பட்ட நிதிப் பெறுமதிகள் ஐ.அ.டொலர் மற்றும் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு நிதியின் பகிர்ந்தளிப்பும் பயன்பாடும்

2020 ஜனவரி 01 இலிருந்து ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 1,352.2 மில்லியனில், ஐ.அ.டொலர் 1,320.9 மில்லியன் கடனாகவும், ஐ.அ.டொலர் 31.3 மில்லியன் நிதி உதவியாகவும் வழங்கப்பட்டிருந்தன. பெருமளவு, கிட்டதட்ட 50 சதவீதமானவை சீனாவிடமிருந்தான கடன் ஒப்பந்தங்களாகவும், அதனையடுத்து, உலக வங்கி 15 சதவீதமாகவும், ஆசிய அபிவிருத்தி வங்கி 14 சதவீதமாகவும் மற்றும் ஜப்பான் 9 சதவீதமாகவும் நிதியை பகிர்ந்தளித்துள்ளன.

**அட்டவணை 1.18 :** வெளிநாட்டு கடன்கள் மற்றும் நிதி உதவிகளின் நிதிப்பகிர்வுகள் - 2020 ஜனவரி – ஆகஸ்ட் வரையில

| அபிவிருத்தி பங்குதாரர் | பகிரப்பட்ட தொகை (அ) (ஐ.அ.டொ.மில்) | | |
|---|---|---|---|
| | கடன் | மானியம் | மொத்தம் |
| **இருதரப்பு** | **914.4** | **9.3** | **923.7** |
| சீனா* | 679.4 | - | 679.4 |
| யப்பான் | 115.2 | 9.1 | 124.3 |
| பிரான்ஸ் | 47 | 0.2 | 47.2 |
| இந்தியா | 33 | - | 33 |
| ஐக்கிய இராச்சியம் | 11.8 | - | 11.8 |
| நெதர்லாந்து | 11.1 | - | 11.1 |
| அவுஸ்திரேலியா | 4.5 | - | 4.5 |
| கொரியா | 6.4 | - | 6.4 |
| குவைத் | 4.2 | - | 4.2 |
| ஸ்பெயின் | 0.9 | - | 0.9 |
| சேர்மனி | 0.5 | - | 0.5 |
| டென்மார்க்கு | 0.3 | - | 0.3 |
| **பலதரப்பு** | **406.5** | **22** | **428.5** |
| உலக வங்கி | 208.6 | 0.2 | 208.8 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 181.4 | 11.1 | 192.5 |
| ஓபெக் நிதியம் | 7.4 | - | 7.4 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 6.6 | - | 6.6 |
| ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | 2.4 | - | 2.4 |
| ஊலக உணவு நிகழ்ச்சித் திட்டம் | - | 0.4 | 0.4 |
| உணவு மற்றும் விவசாய அமைப்பு | - | 0.2 | 0.2 |
| ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | - | 8.4 | 8.4 |
| ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நிதியம் | - | 1.6 | 1.6 |
| ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் | - | 0.1 | 0.1 |
| **மொத்தம்** | **1,320.90** | **31.3** | **1,352.20** |

மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

குறிப்பு : பல்வேறுபட்ட நாணயங்களில் மேற்கொள்ளப்பட்ட நிதியளிப்புக்கள் ஐ.அ.டொ. மற்றும் ரூபா என்பனவற்றிற்கு மாற்றுவதற்காக 2020 ஆகஸ்ட் மாதம் 31 ஆந் திகதி நிலவிய நாணயமாற்று வீதங்கள் பயன்படுத்தப்பட்டன.

(அ) தற்காலிகமானது.

* சீனா அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட ஐ.அ.டொ. 500 மில்லியன் வெளிநாட்டு நாணய நியதியிலான நிதியளிப்பு உள்ளடங்கலாக.

வரவு செலவு திட்ட உதவியாக வழங்கப்பட்ட கடனான ஐ.அ.டொலர் 500 மில்லியனில், பெருமளவான கடன்கள் கிட்டதட்ட 17 சதவீதமானவை பாலக்கட்டுமானங்களிற்கும், தரை போக்குவரத்திற்கு 11 சதவீதமும், நீர் வழங்கல் மற்றும் கழிவகற்றல் செயற்பாடுகளிற்கு 9 சதவீதமும் மற்றும் பேரிடர் முகாமைத்துவத்திற்கு 4 சதவீதமும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

**வரைபு 1.5 :** 2020 ஆகஸ்ட் சனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரையில் துறைரீதியாக வழங்கப்பட்ட நிதி பகிர்வுகள் (ஐ.அ.டொ.மில்லியன்)




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்கம்

### உறுதியளிக்கப்பட்ட பகிர்ந்தளிக்கப்படாத மீதி

2020 ஆகஸ்ட் 31 இன் படி, ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட ஆனால் பகிர்ந்தளிக்கப்படாத ஐ.அ.டொலர் 8,737 மில்லியன் கடனானது, எதிர்வரும் 3-5 வருடங்களில் பயன்படுத்தப்படும் பகிர்ந்தளிக்கப்படாத மீதி பெரும்பாலானவை சீனாவிடமிருந்தும், அதனை தொடர்ந்து ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான் மற்றும் உலக வங்கியிடமிருந்து பெறப்படல் வேண்டும்.

பகிர்ந்தளிக்கப்படாத மீதியில் கிட்டதட்ட 25 சதவீதமானவை நெடுஞ்சாலை மற்றும் பால கட்டுமானத்திற்கும் 18 சதவீதமானவை நீர் வழங்கலிற்கும் 14 சதவீதமானவை தரை போக்குவரத்திற்கும் பயன்படுத்தப்படும்.

**வரைபு 1.6 :** 2020 ஆகஸ்ட் 31 அன்று உள்ளவாறு கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு பயன்படுத்தப்படாத மீதிகள் (ஐ.அ.டொ.மில்லியன்)




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்கம்

**வரைபு 1.7 :** 2020 ஆகஸ்ட் 31 அன்று உள்ளவாறு அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் துறை ரீதியாக பகிரப்பட்டு பயன்படுத்தப்படாத மீதி




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்கம்

### வெளிநாட்டு கடனும் வெளிநாட்டு கடன் சேவை கொடுப்பனவும்

2020 ஆகஸ்ட் இன் இறுதியில் மொத்த செலுத்தப்பட்ட வெளிநாட்டு கடன்கள் ஐ.அ.டொலர் 35.31 மில்லியன் ஆகும். 2020 ஜனவரி 01 இலிருந்து ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியில் மொத்த கடன் சேவை கொடுப்பனவானது ஐ.அ.டொலர் 2,292.7 மில்லியனாகும். அதில் ஐ.அ.டொலர் 1,348.6 மில்லியனானது கடன் மீளளிப்பாகவும், மிகுதி ஐ.அ.டொலர் 944.1 மில்லியன் வட்டிக்கான செலுத்துகையாகவும் உள்ளன.

# உலக சூழலில் பொருளாதாரம் 02

## 2.1 மேன்நோக்கு

பொருளாதாரமானது 2020 இன் முதலாம் காலாண்டில் 1.6 சதவீதத்தால், பல்வேறு உள்ளக மற்றும் வெளியக காரணிகளினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அவையாவன, (i) கடந்த ஐந்து வருடங்களாக குறைவடைந்த பொருளாதார செயற்பாடுகளினால் ஏற்பட்ட விரும்பத்தகாத விளைவு, (ii) கொவிட்-19 இன் நோய் பரவுகை, (iii) இதனால் நடமாட்டத்தை தடை செய்தல், சமூக இடைவெளியை பேணுதல் போன்ற சுகாதார முன்னேற்பாடுகள், (iv) குழப்பகரமான வானிலை மற்றும் (v) கொவிட்-19 இன் நாடு கடந்த பரவுகை காரணமாக உலகளாவிய பெறுமதி வலையமைப்பில் தாக்கத்தை கொண்டிருக்கும் அதேவேளை, பொருட்கள், சேவைகள் மற்றும் மூலதன பாய்ச்சல் என்பனவற்றின் அசைவுகளின் மீதான அழுத்தம் இருப்பினும், பேரண்ட பொருளாதார குறிகாட்டிகளின் படி, 2020 இன் கொவிட்-19 இன் பின்னரான யூலை - செப்தெம்பர் மாதங்களில் “V” வடிவ மீளெழுச்சி காணப்பட்டது.

சமூகத்தின் நலிவடைந்த மக்களிற்கான நிவாரணமாகவும், வியாபாரத்திற்கு பங்களிப்பு செய்யும் விதமாகவும், அரசிறை மற்றும் நாணய கொள்கைகளில் சீராக்கம் உள்ளிட்ட பல்வேறு நிவாரணங்கள் தொடர்ச்சியாக அரசினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. 2019 இன் இறுதிப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட அரசிறை மீளமைப்பும், நலிவடைந்த மக்களிற்காக வழங்கப்பட்ட பல்வேறு நிவாரணங்களிற்கு மேலதிகமாக கொவிட்-19 இன் தாக்கத்திற்கு எதிராக அரசிறை சீராக்கமும் செயற்படுத்தப்பட்டது. சந்தையில் திரவத்தன்மையை பேணும் முகமாக கொள்கை விகிதங்கள் மற்றும் சட்ட ஒதுக்கு வீதத்தை (SRR) குறைத்தல், தனிப்பட்டவர்களினதும் வியாபார நிறுவனங்களினதும் கடன்களை பிற்போடல், மானிய அடிப்படையிலான கடன்களை வழங்கல் போன்ற இலகு நாணய கொள்கை சீராக்கம் பொருளாதார செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டது.

2019 இன் முதல் ஒன்பது மாதங்களுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் விரிந்த பண விருத்தியை அதிகரிப்பதற்கு உதவியாக 2020 இன் ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் தனியார் துறையின் வளர்ச்சிக்காக கடன்கள் சிறிதளவு அதிகரித்து காணப்பட்டன. குறைந்தளவான வர்த்தக மீதி, அதிகரித்த வெளிநாட்டில் வதியும் உழைப்பாளர்களின் பணவனுப்பல்களுடன் சீராக பேணப்பட்ட அந்நிய செலாவணி விகிதம் காரணமாக வெளியக துறை பெருமளவு புத்தாக்கம் பெற்றுள்ளது. உலக எரிபொருட்களிற்கான விலை வீழ்ச்சியிலிருந்து பெறப்பட்ட மேலதிக வரபிரசாதத்தாலும், அரசாங்கத்தின் அத்தியவசியமற்ற பொருட்களின் இறக்குமதிகள் மீதான கட்டுபாடுகள் போன்ற முன்னாயத்த செயற்பாடுகளும் இதற்கான பிரதான காரணிகளாகும். 2020 ஆகஸ்ட் இறுதியில், மொத்த அதிகாரமளிக்கப்பட்ட ஒதுக்கமான ஐ.அ.டொலர் 7,430 இருந்த போது, செய்மதி நிலுவை (BOP), மிதமாக காணப்பட்டது. குறைகூறாத வகையில் குறித்த தவணையில் செலுத்தப்பட வேண்டிய ஐ.அ.டொலர் 1 பில்லியன் சர்வதேச இறைமை பிணையத்தினை (ISB) 2020 ஒக்டோர் முதல் வாரத்தில் அரசாங்கமானது வெற்றிகரமாக செலுத்தியிருந்தது. குறைந்தளவு வழங்கல் காரணமாக, குறிப்பிட்ட மாதங்களில் உணவு பண்டங்களின் விலைகள் அதிகரித்த போதிலும், பணவீக்கமானது 4 – 6 சதவீதமாக காணப்பட்டது. நன்றாக செயற்படுத்தப்பட்டு வரும் சுகாதார செயற்பாடுகளினால் கொவிட்-19 தொற்றானது கட்டுப்படுத்தப்படும் அதேவேளை, உள்நாட்டு உற்பத்திகளின் அளவை அதிகரிக்கும் விதமான கொள்கைகளின் விளைவாக, பொருளாதாரமானது 2021 இல் மீள் எழுச்சி பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.2 பொருளாதார வளர்ச்சி

2019 இன் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி விகிதமான 3.7 சதவீதத்ததுடன் ஒப்பிடும் போது 2020 இன் இக்காலப்பகுதியில் சேவைத்துறை வளர்ச்சியடைந்த போதும், விவசாயத்துறை மற்றும் உற்பத்தி துறையின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக பொருளாதார வளர்ச்சி விகிதமானது 1.6 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. கட்டுமானத்துறை மற்றும் உற்பத்தி துறையின் அமர்முடுகி செல்லும் வளர்ச்சி காரணமாக 2019 இன் முதலாம் காலாண்டில் 3.9 சதவீத வளர்ச்சியை கொண்டிருந்த உற்பத்தி துறையானது 2020 இன் இதே காலப்பகுதியில் 7.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. 2020 இன் முதலாம் காலாண்டில் மிதமான வளர்ச்சியை கொண்டிருந்த மீன்பிடி, தேயிலை மற்றும் தென்னை செய்கைகள் காரணமாக 2019 இன் இதே காலப்பகுதியில், 5.0 சதவீத வளர்ச்சியை கொண்டிருந்த விவசாய துறை 2020 இல் இதே காலப்பகுதியில், 5.6 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இருப்பினும், மொத்த மற்றும் சில்லறை வியாபார செயற்பாடுகள், நிதி சேவைகள், நில விற்பனை செயற்பாடுகள் மற்றும் தனியார் தொடர்பான சேவைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக 2019 இன் முதலாம் காலாண்டில் 3.7 சதவீத வளர்ச்சியை கொண்டிருந்த சேவைத் துறை, 2020 இன் இதே காலப்பகுதியில், 3.1 சதவீதமான வளர்ச்சியை அடைந்திருந்தது. வரிகள் குறைக்கப்பட்ட மானியங்களானது 2020 இன் முதலாம் காலாண்டில் 10.8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**வரைபு 2.1:** மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி




மூலம் : சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

**வரைபு 2.2:** மொ.உ.உற்பத்தி வகுதி - 2020 இன் முதல் காலாண்டு




மூலம் : சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

**அட்டவணை 2.1 :** நிலையான (2010) விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறை ரீதியான வகுதிகள்

ரூ. மில்லியன்

| துறை | 2017 | 2018 | 2019 (அ) | முதல் காலாண்டு 2019 (அ) | முதல் காலாண்டு 2020 (ஆ) | வளர்ச்சி (%) 2019 | வளர்ச்சி (%) 2020 |
|---|---|---|---|---|---|---|---|
| **விவசாயம், காடாக்கம், மீன்பிடி** | **642,159** | **683,816** | **687,857** | **162,787** | **153,735** | **-3.5** | **-5.6** |
| தானியங்கள் (அரிசி நீங்கலாக) | 11,503 | 11,736 | 10,615 | 3,426 | 3,867 | -19.8 | 12.9 |
| நெல் | 48,648 | 70,380 | 70,169 | 11,316 | 11,783 | 28.2 | 4.1 |
| மரக்கறிகள் | 55,240 | 57,439 | 58,298 | 9,801 | 10,288 | -4.4 | 5.0 |
| கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய பருவ காலப் பயிர்கள் | 2,044 | 1,820 | 1,973 | 443 | 490 | 3.1 | 10.6 |
| பழங்கள் | 49,961 | 55,654 | 60,399 | 14,788 | 15,883 | 11.4 | 7.4 |
| எண்ணெய் பிரித்தெடுக்கும் பழங்கள் (தேங்காய், இளநீர், பாம் விதைகள்) | 53,773 | 57,577 | 68,062 | 17,106 | 14,909 | 34.2 | -12.8 |
| தேயிலை (பச்சை இலை) | 66,879 | 67,141 | 66,300 | 16,223 | 11,766 | -1.2 | -27.5 |
| ஏனைய குடிபான பயிர்ச் செய்கை (கோப்பி, கொக்கோ முதலியன) | 1,268 | 1,592 | 1,219 | 334 | 306 | -16.2 | -8.3 |
| நறுமண, வாசனைத் திரவியங்கள், மருந்து மற்றும் மருந்தாக்கல் பயிர்கள். | 63,200 | 66,914 | 66,223 | 17,571 | 17,834 | 2.4 | 1.5 |
| இறப்பர் | 24,165 | 24,085 | 21,807 | 6,265 | 5,721 | 3.3 | -8.7 |
| ஏனைய குறுங்காலப் பயிர்கள | 16,717 | 16,303 | 16,255 | 4,044 | 3,870 | -1.0 | -4.3 |
| விலங்கு வேளாண்மை | 58,729 | 63,418 | 65,440 | 15,572 | 15,629 | 8.3 | 0.4 |
| விவசாய துறைக்கான தாவர வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்புச் செயற்பாடுகள் | 9,238 | 9,258 | 8,675 | 2,124 | 2,110 | -4.7 | -0.6 |
| காடாக்கம், விறகு மற்றும் பலகை உற்பத்தி | 62,545 | 62,020 | 59,036 | 13,745 | 11,914 | -5.5 | -13.3 |
| சமுத்திர மீன் பிடிப்பு மற்றும் கடல் வாழ் உயிரின வளர்ப்பு | 103,043 | 102,175 | 96,589 | 26,163 | 24,056 | -2.0 | -8.1 |

**அட்டவணை 2.1 :** நிலையான (2010) விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறை ரீதியான வகுதிகள்

ரூ. மில்லியன்

| துறை | 2017 | 2018 | 2019 (அ) | முதல் காலாண்டு 2019 (அ) | முதல் காலாண்டு 2020 (ஆ) | வளர்ச்சி (%) 2019 | வளர்ச்சி (%) 2020 |
|---|---|---|---|---|---|---|---|
| நன்நீர் மீன் பிடிப்பு மற்றும் நன்நீர் வாழ் உயிரின வளர்ப்பு | 15,208 | 16,304 | 16,797 | 3,866 | 3,308 | 17.6 | -14.4 |
| **கைத்தொழில்** | **2,509,421** | **2,540,315** | **2,608,211** | **736,946** | **679,127** | **3.9** | **-7.8** |
| கனிய அகழ்வும் சுரங்க செயற்பாடுகளும் | 237,827 | 225,505 | 231,893 | 62,727 | 51,232 | 6.2 | -18.3 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி தயாரிப்புகள் | 534,924 | 556,140 | 574,888 | 169,694 | 174,434 | 2.1 | 2.8 |
| பிடவை, தைக்கப்பட்ட ஆடை மற்றும் தோற்பொருட்களுடன் சம்பந்தப்பட்ட உற்பத்தி தயாரிப்புக்கள் | 304,090 | 314,442 | 326,803 | 114,329 | 98,723 | 3.9 | -13.6 |
| மரம் மற்றும் தயாரிப்புக்கள், தக்கை, தளபாடங்கள் நீங்கலாக | 32,909 | 33,845 | 31,178 | 10,472 | 10,850 | -17.0 | 3.6 |
| காகிதங்கள் உற்பத்தி, ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி மற்றும் அச்சடித்தல் | 31,885 | 32,226 | 30,803 | 11,484 | 10,599 | -5.8 | -7.7 |
| கற்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி தயாரிப்புக்கள் | 29,743 | 27,312 | 33,694 | 14,001 | 11,313 | 94.8 | -19.2 |
| இரசாயன உற்பத்திகள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்தி தயாரிப்புக்கள் | 93,552 | 96,761 | 100,511 | 23,740 | 21,339 | 1.8 | -10.1 |
| இறப்பர் மற்றும் பிளாஸ்திரிக் உற்பத்திகள் | 86,202 | 88,147 | 83,009 | 11,821 | 10,447 | 1.6 | -11.6 |
| ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி தயாரிப்புக்கள் | 77,821 | 85,031 | 85,341 | 21,592 | 21,471 | -4.1 | -0.6 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருத்தப்பட்ட உலோக உற்பத்தி தயாரிப்புகள் | 43,862 | 48,111 | 46,328 | 14,824 | 16,041 | -4.2 | 8.2 |
| இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரண உற்பத்திகள் | 50,967 | 52,075 | 52,578 | 14,578 | 14,072 | -2.5 | -3.5 |
| தளபாட உற்பத்திகள் | 97,920 | 100,302 | 100,797 | 32,824 | 30,633 | 5.9 | -6.7 |
| ஏனைய தயாரிப்புகள், உபகரணங்கள், சானங்கள் பொறுத்தல் மற்றும் பழுது பார்த்தல் | 76,943 | 78,408 | 75,040 | 20,194 | 20,696 | -3.8 | 2.5 |
| மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 94,803 | 100,382 | 104,437 | 25,609 | 26,191 | 1.9 | 2.3 |
| நீர் சேகரிப்பு, துப்புரவாக்கல் மற்றும் விநியோகம் | 13,562 | 14,351 | 15,139 | 3,711 | 3,895 | 6.3 | 5.0 |
| கழிவு நீர், கழிவு அகற்றல் செயற்பாடுகள் | 28,316 | 30,207 | 32,403 | 8,076 | 8,224 | 7.0 | 1.8 |
| நிர்மாணம் | 674,097 | 657,070 | 683,371 | 177,270 | 148,966 | 6.9 | -16.0 |

**அட்டவணை 2.1 :** நிலையான (2010) விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறை ரீதியான வகுதிகள்

ரூ. மில்லியன்

| துறை | 2017 | 2018 | 2019 (அ) | முதல் காலாண்டு 2019 (அ) | முதல் காலாண்டு 2020 (ஆ) | வளர்ச்சி (%) 2019 | வளர்ச்சி (%) 2020 |
|---|---|---|---|---|---|---|---|
| **சேவைகள்** | **5,313,435** | **5,555,303** | **5,680,757** | **1,326,977** | **1,367,507** | **3.7** | **3.1** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 993,667 | 1,040,360 | 1,071,847 | 270,577 | 281,581 | 4.6 | 4.1 |
| களஞ்சிய சாலை உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் நபர்கள் போக்குவரத்து | 1,013,857 | 1,034,755 | 1,049,566 | 233,219 | 232,917 | 2.7 | -0.1 |
| தபால் கூரியர்/ விரைவுத் தபால் செயற்பாடுகள் | 4,425 | 4,485 | 4,752 | 1,184 | 1,276 | 5.7 | 7.7 |
| தங்குமிடம், உணவு மற்றும் குடிபான சேவை செயற்பாடுகள் | 146,432 | 154,794 | 147,671 | 40,448 | 37,945 | 4.6 | -6.2 |
| நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஒளிபரப்புச் செயற்பாடுகள், ஒலி/ ஒளி தயாரிப்புக்கள் | 2,804 | 2,519 | 2,639 | 622 | 651 | 8.8 | 4.5 |
| தொலைத் தொடர்பு | 41,503 | 45,830 | 53,695 | 12,381 | 14,264 | 17.5 | 15.2 |
| தகவல் தொ.நு. நிகழ்ச்சித் திட்ட மதியுரை மற்றும் இணைச் செயற்பாடுகள் | 13,564 | 15,072 | 17,044 | 3,893 | 4,265 | 11.7 | 9.6 |
| நிதிச் சேவை செயற்பாடுகள் மற்றும் துணை நிதிச் சேவைகள் | 606,512 | 687,918 | 701,880 | 140,166 | 152,822 | 4.4 | 9.0 |
| காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு | 95,925 | 112,493 | 118,987 | 20,019 | 20,060 | 7.4 | 0.2 |
| வதிவிட உரித்து உள்ளடங்களாக ஆதன விற்பனை | 544,733 | 566,078 | 579,601 | 145,023 | 151,068 | 2.2 | 4.2 |
| தொழில்வாய்மை சேவைகள | 158,755 | 165,550 | 169,523 | 41,896 | 42,582 | 4.9 | 1.6 |
| பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு, கட்டாய சமூகப் பாதுகாப்பு | 430,672 | 428,022 | 437,065 | 97,733 | 98,631 | 2.0 | 0.9 |
| கல்வி | 172,701 | 179,524 | 185,116 | 46,439 | 47,540 | 4.3 | 2.4 |
| மனித நல செயற்பாடுகள், வதிவிடப் பராமரிப்பு மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகள் | 174,155 | 179,356 | 182,777 | 32,616 | 32,999 | -1.6 | 1.2 |
| ஏனைய தனிப்பட்ட சேவைகள் செயற்பாடுகள் | 913,729 | 938,547 | 958,592 | 240,760 | 248,905 | 3.8 | 3.4 |
| மொத்த பெறுமதி சேர்க்கப்பட்டவை, அடிப்படை விலைகளில் | 8,465,015 | 8,779,434 | 8,976,825 | 2,226,711 | 2,200,369 | 3.8 | -1.2 |
| (+) பொருட்கள் மீதான வரிகள் கழி - மானியங்கள் | 894,132 | 889,166 | 912,553 | 103,342 | 92,221 | 1.3 | -10.8 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) சந்தை விலைகளில்** | **9,359,147** | **9,668,600** | **9,889,379** | **2,330,053** | **2,292,590** | **3.7** | **-1.6** |

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

(அ) திருத்தப்பட்ட

(ஆ) தற்காலிகமானது

## விவசாயம்

தேயிலை, தென்னை, நன்னீர் மீன்பிடி, காடு மற்றும் மர குற்றிகளாக்கும் செயற்பாடுகள் குறைவடைந்தமையினால், 2019 இன் முதலாம் காலாண்டில் விவசாயத் துறையில் ஏற்பட்டிருந்த 5.0 சதவீத வளர்ச்சியானது 2020 இன் இதே காலப்பகுதியில் 5.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இருப்பினும், கரும்பு, புகையிலை மற்றும் குறுகிய கால பயிர்ச்செய்கைகள், தானியங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள், வாசனை திரவியங்கள், விலங்கு உற்பத்தி போன்ற உப துறைகள் நேர்மறை வளர்ச்சியினை 2020 இன் முதலாம் காலாண்டில் பதிவு செய்திருந்தன.

## நெல்

2019 இல் பெறப்பட்ட 4.6 மெட்ரிக் தொன் நெல் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது சிறுபோக காலத்தில் வழங்கப்பட்ட இலவச பசளைகள் மற்றும் நெல் பயிரிடப்படும் பிரதேசங்களில் காணப்பட்ட உகந்த காலநிலை காரணமாக 2020 இல் நெல் உற்பத்தியானது 4.0 சதவீதத்தினால் அதிகரித்து, 2019/20 பெரும்போக விளைச்சலான 3.2 மில்லியன் மெட்ரிக் தொன் மற்றும் 2020 சிறுபோக விளைச்சலாக எதிர்பார்க்கப்படும் 1.8 மில்லியன் மெட்ரிக் தொன் உட்பட, மொத்தமாக 5.0 மில்லியன் மெட்ரிக் தொன் விளைச்சலாக காணப்பட்டது. 2020 இன் முதல் ஒன்பது மாதங்களில் அரிசியின் இறக்குமதியானது 29.3 சதவீதத்தினால் குறைவடைந்து 10,724 மெட்ரிக் தொன்னாக இருந்தது. விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதுகாக்கும் பொருட்டு நெல்லின் உத்தரவாதமளிக்கப்பட்ட விலையையும், விற்பனை விலையின் உச்ச வரம்பையும் அரசாங்கமானது தீர்மானித்திருந்தது.

**வரைபு 2.3 :** விவசாயத்துறை வகுதி - 2020 இன் முதல் காலாண்டு




மூலம் : சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

## தேயிலை, தெங்கு மற்றும் இறப்பர் உற்பத்திகள்

2020 இன் முதல் எட்டு மாதங்களில் தேயிலை, தெங்கு மற்றும் இறப்பர் உற்பத்திகள் வீழ்ச்சியை கொண்டிருந்தன. கொவிட்-19 இன் தாக்கம் மற்றும் சாதகமற்ற காலநிலை காரணமாக தேயிலையின் உற்பத்தியானது 16.0 சதவீதத்தினால் குறைவடைந்து 177.3 மில்லியாக காணப்பட்டது. கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் தேயிலையின் விலையானது 15.5 சதவீதத்தினால் அதிகரித்து ஒரு கிலோவிற்கு ரூபா 630.80 ஆக காணப்பட்டது. கொவிட்-19 இன் நோய் தாக்கத்தினால் கட்டுப்படுத்தப்பட்ட நடமாட்டம், சாதகமற்ற காலநிலை காரணமாக இறப்பரின் பால் பெறப்படும் நாட்கள் குறைவடைந்தமையின் விளைவினால், 2020 இன் முதல் எட்டு மாதங்களிற்கான இறப்பர் உற்பத்தியளவு 5.9 சதவீதத்தினால் குறைவடைந்து 50.2 மில்லியன் கிலோகிராமாக காணப்பட்டது. 2020 இன் முதலாம் காலாண்டு பகுதியில், புகையூட்டப்பட்ட இறப்பர் (RSS1) இன் கொழும்பு ஏலவிற்பனை நிலையத்தில், விலையானது 20.8 சதவீதத்தினால் ஒரு கிலோவிற்கு ரூபா 309.24 ஆக அதிகரித்திருந்தது. அதேவேளை, லட்டெக்ஸ் கிரீப்பின் 1X இன் விலையானது 20.6 சதவீதம் அதிகரித்து ஒரு கிலோவிற்கு ரூபா 330.61 ஆக காணப்பட்டது. 2019 இன் முதல் எட்டு மாதங்களில் 2,104 மில்லியனாக காணப்பட்ட தேங்காய் உற்பத்தி 2020 இல் இதே காலப்பகுதியில், வறண்ட காலநிலை காரணமாக 11.3 சதவீதத்தினால் குறைவடைந்து 1,867 மில்லியன் தேங்காய்களாக காணப்பட்டது. இதனால் காய்ந்த தேங்காய் (கொப்பரா) மற்றும் தேங்காய் எண்ணெய் உற்பத்திகளும் குறைவடைந்தன தேங்காய் எண்ணெய், இளநீர் இ எண்ணெய், பாம் எண்ணெய் (முள்ளுத் தேங்காய்) போன்றவற்றின் இறக்குமதிகள் மீதான விே'ட விற்பனை வரியை குறைத்தமையின் பலனாக 2020 இன் முதல் எட்டு மாதங்களில், தேங்காய் எண்ணெய்யின் இறக்குமதி 30,575 மெட்ரிக் தொன்னாக குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இருப்பினும், 2020 இன் இதே காலப்பகுதியில், தேங்காய் பால் மற்றும் தேங்காய் களி என்பனவற்றின் உற்பத்திகள் 26.2 சதவீதத்தினால் அதிகரித்தன.

## தானியங்கள், காய்கறிகள், வாசனை திரவியங்கள் மற்றும் மருத்துவ பயிர்கள் வளர்ப்பு

2019 இன் முதல் காலாண்டில் தானிய உற்பத்தியின் 12.9 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடும் போது உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிக்கும் முகமாக தானியங்களின் இறக்குமதி மீதான அதிகரித்த விசேட பண்ட வரி (SCL) காரணமாக, 2020 இன் முதலாம் காலாண்டில் தானியங்களின் பெறுமதி சேர் உற்பத்தியானது 12.9 சதவீதத்தினால் அதிகரித்து விவசாய துறை வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ளது. சிறந்த விலை மற்றும் சாதகமான காலநிலை விளைவினால் 2019.'.20 பெரும்போகத்தில் காய்கறிகளின் உற்பத்தியானது

7.0 சதவீதத்தினால் அதிகரித்து 893,930 மெட்ரிக் தொன்னாக காணப்பட்டது. 2020 இன் முதலாம் காலாண்டில் பழங்களினதும், காய்கறிகளினதும் பெறுமதி சேர் உற்பத்திகள் முறையே 7.4 சதவீதம் மற்றும் 5.0 சதவீதமாக வளர்ச்சி கண்டிருந்தன. இதே காலப்பகுதியில், வாசனை திரவியங்கள், நறுமண உற்பத்திகள் மற்றும் மருந்துப் பொருட்கள் என்பன 1.5 சதவீதத்தினால் அதிகரித்தும் காணப்பட்டன.

### மீன் பிடித்தல் மற்றும் விலங்கு வேளாண்மை

2019 இன் முதல் காலாண்டுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் மீன்பிடித்தல் மற்றும் விலங்கு வேளாண்மை உபதுறை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியை கொண்டுள்ளது. 2019 இன் முதலாம் காலாண்டில் 17.4 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருந்த நன்னீர் மீன்பிடித்தல் மற்றும் நன்னீர் தாவர உற்பத்தி உபதுறை 2020 இன் இதே காலப்பகுதியில் 14.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தன. இதேவேளை, கடல் மீன்பிடி மற்றும் கடல் தாவர உற்பத்தி உபதுறையானது இக்காலக்கட்டத்தில் 8.1 சதவீதத்தினால் 2019 இன் இதே காலப்பகுதியில் 2.0 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடும் போது மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மீன்பிடித்தல் நடவடிக்கைகளில் ஏற்படுத்தப்பட்ட கட்டுபாடுகள் மற்றும் சாதகமற்ற காலநிலை காரணமாக 2020 இன் முதல் எட்டு மாதங்களில், அதன் உற்பத்தியானது 15.7 சதவீதத்தினால் குறைவடைந்து 283,485 மெட்ரிக் தொன்னாக காணப்பட்டது. இக்காலக்கட்டத்தில் கடல் மீன்பிடி உற்பத்தி 20.2 சதவீதத்தினால் குறைவடைந்து 222,270 மெட்ரிக் தொன்னாகவும் நன்னீர் மீன்பிடி உற்பத்தி 5.6 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்துள்ளன.

2019 இன் முதல் காலாண்டில் 9.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் கொவிட்-19 இன் தாக்கத்தினால், விலங்கு வேளாண்மை உபதுறை 0.4 சதவீத மந்தமான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. 2020 இன் முதல் ஆறு மாதங்களில் பால் உற்பத்தியானது 8.2 சதவீதத்தினால் அதிகரித்து 240.7 மில்லியன் லீற்றராக காணப்பட்டது.

### கைத்தொழில் துறையும் உற்பத்தி துறையும்

2019 இன் முதலாம் காலாண்டில் 3.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது கைத்தொழில் துறையானது 2020 இன் இதே காலப்பகுதியில் 7.8 சதவீதத்தினால் விழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு கட்டுமானத்துறை (16.0 சதவீதம்), உற்பத்தி துறை (4.1 சதவீதம்), கனிய அகழ்வும், கல்லுடைத்தல் தொழில்துறை (18.3 .சதவீதம்), ஆடைக்கைத்தொழில் (13.6 சதவீதம்) போன்றவற்றின் வீழ்ச்சியே பிரதான காரணமாகும். இருப்பினும், மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் வளி சீராக்கி (2.3 சதவீதம்), நீர் சுத்திகரிப்பு, பெறுகை மற்றும் வழங்கல் செயற்பாடுகள் (5.0 சதவீதம்) மற்றும் சுத்திகரிப்பு, வடிகாலமைப்பு மற்றும் கழிவகற்றல் செயற்பாடுகள் (1.8 சதவீதம்) கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ளன. ஆடை உற்பத்தி துறை (13.6 சதவீதம்), பெற்றோலிய பொருட்கள் உற்பத்தி (19.2 சதவீதம்), இரசாயன பொருட்கள் உற்பத்தி, மருந்து உற்பத்தி (10.1 சதவீதம்), தளபாட உற்பத்திகள் (6.7 சதவீதம்) இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி (11.6 சதவீதம்) என்பன குறைவடைந்துள்ளன.

இதற்கு மாறாக, உணவு உற்பத்தி, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் (2.8 சதவீதம்), அடிப்படை உலோக மற்றும் இணைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (8.2 சதவீதம்) என்பன நேர்மறை வளர்ச்சியை இக்காலப்பகுதியில் பெற்றுள்ளன.

**வரைபு 2.4 :** கைத்தொழிற்தறை வகுதி 2020 இன் முதல் காலாண்டு




மூலம் : சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

**வரைபு 2.5 :** தயாரிப்புத் துறை வகுதி - 2020 இன் முதல் காலாண்டு




மூலம் : சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

2020 இன் முதலாம் காலாண்டில் மின்சாரம், வளி சீராக்கி வழங்கல் மற்றும் நீர் சுத்திகரிப்பு, வடிகாலமைப்பு மற்றும் கழிவகற்றல் செயற்பாடுகள் முறையே 2.3 சதவீதம், 5 சதவீதம் மற்றும் 1.8 சதவீதத்தினால் சிறிதளவு வளர்ச்சியை பதிவு செய்திருந்தன. 2019 இன் முதல் எட்டு மாத

காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் 10,758 GWh உடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரமானது 3.9 சதவீதத்தால் குறைவடைந்து 10,339 GWh ஆக காணப்பட்டது. 2020 இன் இக்காலத்தில் மின்சாரத்தில் இருந்து பெறப்பட்ட மொத்த வருமானமானது 3.1 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 158.5 மில்லியன் ஆக காணப்பட்டது. 2019 இன் முதல் எட்டு மாதங்களில் பெறப்பட்ட மின்சார உற்பத்தி மூலங்கலான நீர், எரிபொருள், நிலக்கரி, புதுப்பிக்கதக்க எரிசக்தி மற்றும் காற்றாலை என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட சக்தி அளவின் விகிதாசாரமானது முறையே 17:37:38:9 உடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் பெறப்பட்ட சக்தி விகிதாசாரமானது 22:28:41:9 என்ற அடிப்படையில் மாற்றமடைந்துள்ளது.

### சேவைகள்

2019 இன் முதல் காலாண்டின் 3.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் சேவைத் துறையின் வளர்ச்சியானது 3.1 சதவீதத்தினால் அதிகரித்து காணப்பட்டது. நிதிச் சேவைகள் (9.0 சதவீதம்), மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் (4.1 சதவீதம்), தனியாள் தொடர்பான சேவைகள் (3.4 சதவீதம்) மற்றும் சொத்து வியாபார சேவைகள் (4.2 சதவீதம்) என்பன சேவைத்துறையின் வளர்ச்சிக்கு பெருமளவு பங்களிப்புச் செய்துள்ளன. மற்றைய சேவைகளான, தொலைத்தொடர்பு (15.2 சதவீதம்), கல்வி (2.4 சதவீதம்), பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு (0.9 சதவீதம்), தொழில் வான்மை புலமை சேவைகள் (1.6 சதவீதம்), தகவல் தொடர்பு சேவைகள் மற்றும் ஆலோசனை சேவைகள் (9.6 சதவீதம்), மனித சுகாதாரம் (1.2 சதவீதம்), தபால் மற்றும் விரைவு தபால் சேவைகள் (7.7. சதவீதம்), ஒளிபரப்பு சேவைகள் (4.5 சதவீதம்) மற்றும் காப்புறுதி சேவைகள் (0.2. சதவீதம்) என்பனவும் வளர்ச்சிக்கு சாதகமாக பங்களிப்பு செய்துள்ளன. இருப்பினும், இக்காலக்கட்டத்தில் விடுதிகள், உணவு மற்றும் குடிபானங்கள் சேவையும் (6.2 சதவீதம்) மற்றும் போக்குவரத்து சேவையும் (0.1 சதவீதம்) நலிவடைந்திருந்தன.

**வரைபு 2.6 :** சேவைத்துறை வகுதி - 2020 இன் முதல் காலாண்டு




மூலம் : சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

### மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வியாபாரம், போக்குவரத்து, பொருட்கள், களஞ்சியசாலை மற்றும் பயணிகள் சேவைகள்

2019 இன் முதலாம் காலாண்டில் அடைந்த 4.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியினுள் மொத்த மற்றும் சில்லறை வியாபார சேவைகள் 4.1 சதவீதத்தினால் அதிகரித்து காணப்பட்டது. 2019 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது போக்குவரத்து சேவைத்துறை 0.1 சதவீதத்தினால் மந்த கதியை அடைந்தது. 2019 இன் முதல் ஒன்பது மாதங்களில் புதிதாக பதிவு செய்யப்பட்ட 286,126 வாகனங்களுடன் ஒப்பிடும் போது 2020 இல் இதே காலப்பகுதியில் 190,442 வாகனங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்நிய செலாவணி விகிதத்தை சீராக பேணும் முகமாக அத்தியவசியமற்ற பொருட்களிற்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை விதித்தமையே இதற்கான பிரதான காரணியாகும்.

2019 இன் முதல் ஒன்பது மாதங்களில் பேருந்துகள், பாரவூர்திகள், இரட்டை நோக்க வாகனங்கள், முச்சக்கர வண்டிகளின் பதிவுகள் முறையே 55.9 சதவீதம், 25.0 சதவீதம், 8.5 சதவீதம் மற்றும் 42 சதவீதம் இருந்த போதிலும் வாகனங்களின் பதிவுகள் 29.8 சதவீதம் குறைவடைந்து காணப்பட்டது. 2020 இன் முதல் ஒன்பது மாதங்களில் கொள்கலன் கையாளுகை செயற்பாடு 4.7 சதவீதத்தினால் குறைவடைந்து 5.1 மில்லியன் 20 அடிக்கு சமனான அலகுகளாக (TEUs) காணப்பட்டது. இதே காலப்பகுதியில் கொள்கலன் கையாளுகையான மாற்றுகை, மீள் இறக்கி ஏற்றல் செயற்பாடுகள் என்பன முறையே 2.1 சதவீதத்தினால் குறைவடைந்து 4.3 மில்லியன் (TEUs) ஆகவும் 9.2 சதவீத்தால் குறைவடைந்து 0.1 மில்லியன் (TEUs) ஆகவும் காணப்பட்டன. மேலும், 2019 இன் முதல் ஒன்பது மாதங்களில் கையாளப்பட்ட சரக்குகளின் எண்ணிக்கையான 80.5 மில்லியன் மெட்ரிக் தொன்னுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் கையாளப்பட்ட சரக்குகளின் எண்ணிக்கையானது 4.8 சதவீதத்தினால் குறைவடைந்து 76.6 மில்லியனாக காணப்பட்டது. உலகளாவிய ரீதியில், கொவிட்-19 நோய் தொற்றின் விளைவால் உலகளாவிய வழங்கல் வலையமைப்பு பாதிப்படைந்தமையே இவ்வாறான மந்த நிலைமைக்கு காரணமாகும்.

### விடுதிகள், உணவு மற்றும் குடிபானங்கள்

2019 இன் முதலாம் காலாண்டின் பெறுமதி சேர்க்கப்பட்ட விடுதிகள், உணவு மற்றும் குடிபானங்கள் சேவையுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் இச்சேவையானது 6.2 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளன. 2019 இன் முதல் ஒன்பது மாதங்களில் வருகை தந்த 1.37 மில்லியன உல்லாச பிரயாணிகளுடன் ஒப்பிடும்

போது 2020 இல் இதே காலப்பகுதியில் வருகை தந்த உல்லாச பயணிகளின் எண்ணிக்கையானது 63.5 சதவீதத்தினால் குறைவடைந்து 507,311 பிரயாணிகளாக காணப்பட்டது. இதற்கு 2020 மார்ச் மாதமளவிலிருந்து, கொவிட்-19 நோய் தொற்று காரணமாக ஏற்படுத்தப்பட்ட பிரயாண தடைகள் மற்றும் நாட்டின் முடக்க நிலை காரணமாகும். தொடர்ச்சியாக 2020 இன் முதல் ஒன்பது மாதங்களிலும் உல்லாச பயணத்திலிருந்தான வருமானமானது குறிப்பிடத்தக்களவு 54 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொலர் 956.0 மில்லியனாக காணப்பட்டது.

**அட்டவணை 2.2 :** சேவைகள் துறையில் தெரிவு செய்யப்பட்ட சுட்டிகள்

ரூ. மில்லியன்

| சுட்டி | 2016 | 2017 | 2018 | 2019 | 2019 ஜன - ஜூலை | 2020 ஜன - ஜூலை |
|---|---|---|---|---|---|---|
| **துறைமுக சேவைகள்** | | | | | | |
| வருகை தந்த கப்பல்கள் | 5,023 | 4,879 | 4,874 | 4,707 | 3,513 | 3,320 |
| மொத்த சரக்கு கையாடல் (மெ.தொ '000) | 86,546 | 93,857 | 104,934 | 106,979 | 80,579 | 76,675 |
| மொத்த கொள்கலன் கையாடல் (TEU '000) | 5,735 | 6,209 | 7,047 | 7,228 | 5,428 | 5,190 |
| இடைமாற்றம் செய்யப்பட்டவை (TEU '000)* | 4,435 | 4,826 | 5,704 | 5,955 | 4,484 | 4,384 |
| **தொலைதொடர்பாடல் சேவை** | | | | | ஜன - செப் (அ) | ஜன - செப் (அ) |
| நிலையான தொலைபேசி இணைப்பு (எண். '000)** | 1,166 | 1,198 | 1,216 | 2,300 | 2,324 | 2,328 |
| கையடக்க தொலைபேசி (எண். '000) | 26,228 | 28,199 | 32,528 | 32,884 | 33,463 | 27,679 |
| கம்பியல்லா தொலைபேசி (எண். '000) | 1,384 | 1,405 | 1,269 | 1,055 | 1,084 | 1,074 |
| இணைய, மின்னஞ்சல் வசதி (எண் '000) | 4,921 | 5,904 | 10,563 | 13,408 | 12,536 | 13,295 |
| **சுகாதாரத் துறை** | | | | | ஜன - செப் (அ) | ஜன - செப் (அ) |
| தனியார் வைத்தியசாலைகள் | 225 | 181 | 191 | 207 | 207 | 209 |
| அரசாங்க வைத்தியசாலைகள் | 610 | 612 | 612 | 603 | 603 | 605 |
| கட்டில்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 76,829 | 76,569 | 76,824 | 77,964 | 77,964 | 78,526 |
| வைத்தியர்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 20,458 | 20,349 | 19,692 | 18,130 | 18,130 | 20,544 |
| தாதிகள் எண்ணிக்கை (அரசாங்கம்) | 32,499 | 34,221 | 34,714 | 38,276 | 38,276 | 38,569 |
| **நிதித் துறை** | | | | | ஜன - ஜூன் (அ) | ஜன - ஜூன் (அ) |
| வங்கிக் கிளைகள், பிற விற்பனை நிலையங்கள் | 6,107 | 6,213 | 6,882 | 7,387 | 7,133 | 7,397 |
| | | | | | ஜன - மார்ச் (அ) | ஜன - மார்ச் (அ) |
| பாவனையிலுள்ள கடன் அட்டைகள் | 1,315,915 | 1,486,545 | 1,710,671 | 1,854,103 | 1,730,521 | 1,892,205 |
| | | | | | ஜன - செப் (அ) | ஜன - செப் (அ) |
| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் | 46 | 45 | 43 | 42 | 42 | 39 |
| பதிவு செய்யப்பட்ட குத்தகைக் கம்பனிகள் | 7 | 6 | 5 | 4 | 4 | 3 |

**அட்டவணை 2.2 :** சேவைகள் துறையில் தெரிவு செய்யப்பட்ட சுட்டிகள்

ரூ. மில்லியன்

| சுட்டி | 2016 | 2017 | 2018 | 2019 | 2019 ஜன - ஜூலை | 2020 ஜன - ஜூலை |
|---|---|---|---|---|---|---|
| **சுற்றுலாத்துறை** | | | | | ஜன - செப் (அ) | ஜன - செப் (அ) |
| சுற்றுலாப் பயணிகளின் வருகை | 2,050,832 | 2,116,407 | 2,333,796 | 1,913,702 | 1,376,312 | 507,311 |
| சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அடொ.மில்.) | 3,518 | 3,925 | 4,381 | 3,607 | 2,594 | 956 |
| அறை பயன்பாட்டு விகிதம் | 74.8 | 73.3 | 72.8 | த.இ. | த.இ. | த.இ. |
| **போக்குவரத்து சேவைகள் (புதிய பதிவு)** | | | | | ஜன - செப் (அ) | ஜன - செப் (அ) |
| பேருந்துகள் | 2,685 | 3,331 | 2,957 | 1,613 | 1,099 | 507 |
| கார்கள் | 45,172 | 39,182 | 80,776 | 38,232 | 28,574 | 20,048 |
| லொறிகள் *** | 26,887 | 16,742 | 16,931 | 3,738 | 2,969 | 2,387 |
| மோட்டார் சைக்கிள்கள் | 340,129 | 344,380 | 339,763 | 284,301 | 223,728 | 144,399 |
| முச்சக்கர வண்டிகள் | 56,945 | 23,537 | 20,063 | 15,490 | 12,144 | 7,040 |
| நில வாகனங்கள் மற்றும் இழுவை வண்டிகள் | 13,947 | 13,049 | 10,282 | 7,666 | 5,531 | 5,790 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

* தற்காலிக

** கம்பியல்லா தொலைபேசிகளின் எண்ணிக்கையை இது உள்ளடக்கியுள்ளது.

*** விசேட நோக்கத்திற்கான வாகனம், மோட்டார் பாரவூர்தி மற்றும் நிலவாகனம், உயர்த்தி, நோயாளர் காவும் வாகனம் மற்றும் வாகன காவி

## தொலைத் தொடர்பு, தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் தபால் சேவைகள்

பெறுமதி சேர்க்கப்பட்ட தொலைத்தொடர்பு சேவையானது 2020 இன் மற்றைய உபசேவைத்துறைகள் எல்லாவற்றினையும் விட அதிகமாக 15.2 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. நாட்டின் முடக்க காலத்தில், “வீட்டிலிருந்து வேலை” என்ற கொள்கையினால் தொலைத்தொடர்பு சேவைக்கு ஏற்பட்ட பெருமளவு கேள்வியினால் இத்துறை பெருமளவு வரப்பிரசாதங்களை பெற்றிருந்தது. 2020 இன் முதல் காலாண்டு பகுதியில், வர்த்தக செயற்பாட்டு முகாமைத்துவம் (BPM) இற்கு ஏற்பட்ட பெருமளவு கேள்வியினால் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் ஆலோசனை மற்றும் செயற்பாடுகள் தொடர்பான சேவைகள் 9.6 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. செல்லிட இணைய பாவனை தொடர்புகள் மற்றும் நிரந்தர இணைய பாவனை தொடர்புகள் முறையே 19.4 சதவீதம் மற்றும் 6.5 சதவீதம் என்பனவற்றினால் அதிகரித்திருந்தன. “வீட்டிலிருந்து வேலை” “வீட்டிலிருந்து படிப்பு” போன்ற கொள்கைகள் தனியார் மற்றும் அரச துறைகளால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. இதேவேளை, 2020 முதலாம் காலாண்டில், தபால் சேவைகள் 7.7 சதவீத வளர்ச்சியடைந்திருந்தது.

## நிதிச் சேவைகள், காப்புறுதி, சொத்து வியாபாரம் மற்றும் வேறு சேவைகள்

2019 இன் முதலாம் காலாண்டின் 4.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது பெறுமதி சேர்க்கப்பட்ட நிதி, காப்புறுதி மற்றும், அவை தொடர்பான துணை சேவைகள் 2020 இன் அதே காலப்பகுதியில் 7.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தன.

மொத்த வியாபார சேவைகள் 2020 இன் முதலாம் காலாண்டு பகுதியில் 4.2 சதவீதமாக விரிவாக்கம் பெற்றிருந்தது. இதே காலப்பகுதியில் பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மானிட சுகாதாரம் மற்றும் சமூக செயற்பாடுகள் என்பன முறையே 0.9 சதவீதம், 2.4 சதவீதம் மற்றும் 1.2 சதவீதம் வளர்ச்சியடைந்திருந்தன. 2019 இன் 4.9 சதவீத வளர்ச்சியுடன் தொழில் வான்மை, விஞ்ஞான, தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் அவை தொடர்பான உதவிச் சேவைகள் என்பன சிறிதளவில் 1.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தன.

**அட்டவணை 2.3 :** சுற்றுலாத்துறையின் செயலாற்றுகை

| மாதம் | சுற்றுலாப் பயணிகளின் வருகை | | | | | சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ.டொ.மில்.) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) |
| சனவரி | 194,280 | 219,360 | 238,924 | 244,239 | 228,434 | 333.3 | 407.0 | 448.5 | 460.3 | 430.6 |
| பெப்ரவரி | 197,697 | 197,517 | 235,618 | 252,033 | 207,507 | 339.2 | 366.3 | 442.3 | 475.0 | 391.1 |
| மார்ச் | 192,841 | 188,076 | 233,382 | 244,328 | 71,370 | 330.8 | 348.8 | 438.1 | 460.5 | 134.5 |
| ஏப்ரல் | 136,367 | 160,249 | 180,429 | 166,975 | - | 234.0 | 297.2 | 338.7 | 314.7 | - |
| மே | 125,044 | 121,891 | 129,466 | 37,802 | - | 214.5 | 226.1 | 243.0 | 71.2 | - |
| ஜூன் | 118,038 | 123,351 | 146,828 | 63,072 | - | 202.5 | 228.8 | 275.6 | 118.9 | - |
| ஜூலை | 209,351 | 205,482 | 217,829 | 115,701 | - | 359.2 | 381.1 | 408.9 | 218.1 | - |
| ஆகஸ்ட் | 186,288 | 190,928 | 200,359 | 143,587 | - | 319.6 | 354.0 | 376.1 | 270.6 | - |
| செப்தெம்பர் | 148,499 | 145,077 | 149,087 | 108,575 | - | 254.8 | 269.0 | 279.8 | 204.6 | - |
| ஒக்தோபர் | 150,419 | 152,429 | 153,123 | 118,743 | | 258.1 | 283.0 | 287.4 | 223.8 | |
| நவம்பர் | 167,217 | 167,511 | 195,582 | 176,984 | | 286.9 | 311.0 | 367.1 | 333.6 | |
| டிசெம்பர் | 224,791 | 244,536 | 253,169 | 241,663 | | 385.7 | 453.0 | 475.2 | 455.5 | |
| மொத்தம் | 2,050,832 | 2,116,407 | 2,333,796 | 1,913,702 | 507,311 | 3,518.6 | 3,925.3 | 4,380.7 | 3,606.9 | 956.2 |

மூலம் : இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை

(அ) திருத்திய

(ஆ) தற்காலிகமானது

**அட்டவணை 2.4 :** மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (%) இல் துறை ரீதியான பகிர்வு

ரூ. மில்லியன்

| துறை | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | முதல் காலாண்டு 2019 (அ) | முதல் காலாண்டு 2020 (அ) |
|---|---|---|---|---|---|---|---|
| **விவசாயம்** | **4.7** | **-3.7** | **-0.4** | **6.5** | **0.6** | **5.0** | **-5.6** |
| தேயிலை | -2.5 | -11.2 | 4.5 | 0.4 | -1.3 | -1.2 | -27.5 |
| நெல் | 25.0 | -31.3 | -7.1 | 44.7 | -0.3 | 28.2 | 4.1 |
| இறப்பர் | -10.1 | -10.7 | 4.9 | -0.3 | -9.5 | 3.3 | -8.7 |
| தானியங்கள் | 7.3 | -12.2 | -12.6 | 2.0 | -9.5 | -19.8 | 12.9 |
| மரக்கறிகள் | 2.7 | 2.9 | -5.3 | 4.0 | 1.5 | -4.4 | 5.0 |
| கால்நடைகள் | 8.1 | 7.3 | 5.6 | 8.0 | 3.2 | 8.3 | 0.4 |
| காடாக்கம், விறகு | 1.9 | 8.5 | 19.2 | -0.8 | -4.8 | -5.5 | -13.3 |
| மீன்பிடி | -12.5 | 10.6 | -8.7 | 6.4 | -2.5 | 17.6 | -14.4 |
| **கைத்தொழில்** | **2.2** | **5.7** | **4.7** | **1.2** | **2.7** | **3.9** | **-7.8** |
| அகழ்வு, சுரங்கமறுத்தல் | -5.2 | 13.8 | 9.3 | -5.2 | 2.8 | 6.2 | -18.3 |
| தயாரிப்புச் செயற்பாடுகள் | 4.7 | 1.8 | 3.9 | 3.6 | 1.9 | 2.5 | -4.1 |
| ஏனைய கைத்தொழில்கள் | 10.1 | 10.0 | 3.9 | 7.5 | 3.4 | 3.4 | 2.4 |
| நிர்மாணம் | -2.5 | 8.3 | 4.4 | -2.5 | 4.0 | 6.9 | -16.0 |

**அட்டவணை 2.4 :** மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (%) இல் துறை ரீதியான பகிர்வு

ரூ. மில்லியன்

| துறை | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | முதல் காலாண்டு 2019 (அ) | முதல் காலாண்டு 2020 (அ) |
|---|---|---|---|---|---|---|---|
| **சேவைகள்** | **6.0** | **4.8** | **3.6** | **4.6** | **2.3** | **3.7** | **3.1** |
| மொத்த, சில்லறை வர்த்தகம் | 5.6 | 2.6 | 3.8 | 4.7 | 3.0 | 4.6 | 4.1 |
| போக்குவரத்து, களஞ்சியசாலை | 5.2 | 5.5 | 3.2 | 2.1 | 1.4 | 2.7 | -0.1 |
| தங்குமிட வசதி, உணவுச் சேவைச் செயற்பாடுகள் | 1.9 | 4.0 | 5.0 | 5.7 | -4.6 | 4.6 | -6.2 |
| தகவல், தொடர்பாடல் | 4.4 | 7.9 | -0.9 | -10.2 | 4.8 | 15.0 | 13.1 |
| நிதி, காப்புறுதிச் செயற்பாடுகள் | 14.8 | 11.8 | 8.9 | 13.9 | 2.6 | 4.5 | 7.9 |
| ஆதன விற்பனை செயற்பாடுகள் | 10.2 | 6.3 | 4.7 | 3.9 | 2.4 | 2.2 | 4.2 |
| தொழிற்துறை சேவைகள் | -7.3 | -1.3 | 4.3 | 4.3 | 2.4 | 4.9 | 1.6 |
| கல்வி, தேகாரோக்கியம், சமூகப் பணிச் செயற்பாடுகள் | -1.6 | 4.5 | 3.8 | 3.5 | 2.5 | 1.8 | 1.9 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு | 6.9 | 5.2 | -4.8 | -0.6 | 2.1 | 2.0 | 1.9 |
| ஏனைய சேவைகள் (சுய சேவைகள் நீங்கலாக) | 4.0 | 1.4 | 3.2 | 2.7 | 2.1 | 3.8 | 3.4 |
| **மொ.உ.உ.** | **5.0** | **4.5** | **3.6** | **3.3** | **2.3** | **3.7** | **-1.6** |

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

## வேலையின்மை

2019 இன் முதல் அறையாண்டில் காணப்பட்ட 8.2 மில்லியன் ஊழியர்களுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் ஊழியர்களின் எண்ணிக்கை 2.4 சதவீதத்தினால் குறைவடைந்து 8 மில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. விவசாயத் துறையில் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும், சேவைத்துறையிலும், கைத்தொழில் துறையிலும் உள்ள ஊழியர்கள் குறைவடைந்தமையே இதற்கான பிரதான காரணமாகும் இக்காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த தொற்று நோய் பரவலுடன் 2019 இன் அரையாண்டு பகுதியில் காணப்பட்ட வேலையற்றோர் எண்ணிக்கையான 0.410 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இல் இதே காலப்பகுதியில் வேலையற்றோரின் எண்ணிக்கையானது 14.8 சதவீதத்தினால் குறைவடைந்து 0.471 மில்லியனாக காணப்பட்டது. 2019 இன் அறையாண்டில் காணப்பட்ட வேலையற்றோர் விகிதமானது 4.8 சதவீதத்திலிருந்து 2020 இன் இதே காலப்பகுதியில் 5.6 சதவீதமாக அதிகரித்திருந்தது. பெண்களினதும் ஆண்களினதும் வேலையற்றோர் விகிதமானது முறையே 8.9 சதவீதம் மற்றும் 3.9 சதவீதமாக 2020 இன் அரையாண்டு பகுதியில் அதிகரித்து காணப்பட்டது.

இருப்பினும், வேலையற்றோர் விகிதமானது 2020 இன் முதலாம் காலாண்டில் 5.7 சதவீதமாக இருந்து 2020 இன் இரண்டாம் காலாண்டில் 5.4 சதவீதமாக குறைவடைந்திருந்தது. கணிக்கப்பட்ட தொழிற்படையின் பங்குபற்றும் விகிதமானது, 2020 யூன் இறுதியில் 50.2 சதவீதமாக காணப்பட்டது. 15 – 24 வயதிற்கிடைப்பட்ட இளையோரிடையேயான வேலையற்றோர் விகிதமானது 2020 இன் அரையாண்டிலும் தொடர்ச்சியாக பெருமளவு 27.7 சதவீதமாக காணப்பட்டது. 2019 இன் அரையாண்டு இறுதியில் 8.7 சதவீதமாக காணப்பட்ட கா.பொ.த. (உ/த) மற்றும் அதற்கு கூடிய கல்வியறிவை கொண்டுள்ள வேலையற்றோர் விகிதமானது 2020 இன் இதே காலப்பகுதியில் 10.1 சதவீதமாக குறிப்பிடத்தக்களவு அதிகரித்து காணப்பட்டது.

**வரைபு 2.7 :** வேலையின்மை




மூலம் : சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

## 2.3 நாணய துறை அபிவிருத்திகள்

கொவிட்-19 நோய் தொற்றின் காரணமாக இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாணய கொள்கையானது இன்னும் இலகுபடுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கியினால், வட்டி வீதங்களை குறைக்கும் மற்றும் தனியார் துறைக்கான வட்டிகளை அதிகரிக்கும் முகமாக கொள்கை செயற்பாடுகள் வரையறை செய்யப்பட்டன.

2019 இன் இறுதியில் நிலையான வைப்பு வசதி சதவீதத்தினை (SDFR) மற்றும் நிலையான கடன் வசதி சதவீதத்தினை (SLFR) என்பன முறையே 7.0 சதவீதம் மற்றும் 8.0 சதவீதமாக காணப்பட்டது. எதிர்பார்த்த அளவை விட குறைவாக காணப்பட்ட தனியார் துறை கடன் அளவின் வளர்ச்சியினை சீராக்கும் பொருட்டு நிலையான வைப்பு வசதி சதவீதத்தினையும், நிலையான கடன் வசதி சதவீதத்தினையும் 50 புள்ளிகளினால் 2020 ஜனவரியில் முறையே 6.5. சதவீதம், 7.5 சதவீதம் ஆக குறைக்கப்பட்டன. 2020 மார்ச் மாதமளவில், கொவிட்-19 இன் தாக்கத்தின் விளைவினால், உள்நாட்டு நிதிச்சந்தையினை இலகுபடுத்தும் விதத்தில் கொள்கை வட்டி வீதம் மற்றும் சட்ட ஒதுக்கு வீதத்தினை (SRR) முறையே மேலும் 25 புள்ளிகளினால் குறைக்கப்பட்டும் (SDFR-6.25 சதவீதமாக, SLFR-7.25 சதவீதமாக) 4.0 சதவீதமாக காணப்பட்டன. கொவிட்-19 இன் தொற்றிற்கு எதிர்வினையாற்றும் முகமாக, ஏப்ரல் மாதமளவில் கொள்கை வட்டி வீதமானது 25 அடிப்படை அலகுகளினால் குறைக்கப்பட்டு (SDFR-6.00 சதவீதமாக, SLFR-7.0 சதவீதமாக) காணப்பட்டது. வியாபார நிறுவனங்களிற்கும் தனியாரிற்கும் நிவாரணமளிக்கும் முகமாக, 2020 மே இல், கொள்கை கொள்கை வட்டி வீதங்கள் மேலும் 50 அடிப்படை புள்ளிகளினால் குறைக்கப்பட்டு (SDFR-5.50 சதவீதமாக, SLFR-6.50 சதவீதமாக) காணப்பட்டது. இருப்பினும், 2020 ஜனவரியிலிருந்து மே மாதம் வரையான காலப்பகுதியில் 150 அடிப்படை புள்ளிகளினால் கொள்கை வட்டி வீதங்களை குறைத்தும் எதிர்பார்த்த அளவையும் விட தனியார் துறை பலமிழந்து காணப்பட்டது. இதனால், 2020 யூனில் சந்தையில் கூடிய திரவத்தன்மையை ஏற்படுத்தி வட்டி வீதங்களை குறைக்கும் முகமாக மேலும் சட்ட ஒதுக்கு வீதம் (SRR) குறைக்கப்பட்டது.

இதேநேரம், செயற்பாட்டு மூலதனத்திற்காக மானிய வீதத்தில் புதிய கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை தனியார் துறைக்கான கடன் வளர்ச்சியானது மாறாமல் உள்ளது. சந்தையில் கடன்களிற்காக வீதங்களை குறைக்கும் முகமாக, கொள்கை வீதங்கள் மேலும் 100 அடிப்படை புள்ளிகளினால் 2020 யூலை இல் மேலும் குறைக்கப்பட்டு (SDFR-4.50 சதவீதமாக, SLFR-5.50 சதவீதமாக) காணப்பட்டது. ஆகஸ்ட் 2020 இல் வேறு ஒழுங்குமுறைகள் கடன் வழங்கலை அதிகரிக்கும் முகமாக செயற்படுத்தப்பட்டன. இறுதியாக, உத்வேகமான கொள்கை செயற்பாடுகளின் மூலம் சந்தையில் வட்டி வீதங்கள் எதிர்பார்த்தளவு குறைவடைந்தன. இதனால் தனியார் துறைக்கான கடன்களின் அளவு அதிகரிக்க உந்து சக்தியாக இருந்தது. விரிந்த பண அதிகரிப்பும் ஏற்பட்டது.

ஜனவரி இறுதியில் 13.47 சதவீதமாக காணப்பட்ட சராசரி நிறையிடப்பட்ட கடன் பெறுகை விகிதம் (AWLR) ஆனது 2020 யூலை இறுதியில் 12.29 சதவீதமாக குறைவடைந்து பின் செப்டெம்பர் 2020 இறுதியில் மேலும் குறைவடைந்து 11.21 சதவீதமாகவும் காணப்பட்டது. இதேவேளை, ஜனவரி இறுதியில் 8.06 சதவீதமாக காணப்பட்ட சராசரி நிறையிடப்பட்ட வைப்பு விகிதம் (AWDR) ஆனது 2020 ஒக்டோபர் இல் 6.23 சதவீதமாக குறைவடைந்தது. விரிந்த பணமானது (M2b) ஜனவரி 2020 இறுதியில் ரூபா 7,704 பில்லியனில் இருந்து 8.57 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 8,692 பில்லியனாக 2020 ஆகஸ்ட் இறுதியில் காணப்பட்டது. குறைந்த வங்கி வட்டி வீதங்கள் தொடர்ச்சியாக காணப்படுவதின் பிரதி பலனாக, தனியாரிற்கான கடன்கள் 2020 ஜனவரியில் ரூபா 5,798 பில்லியனில் இருந்து 2020 ஆகஸ்ட் இறுதியில் ரூபா 5,909 பில்லியனாக அதிகரித்திருந்தது.

**வரைபு 2.8** : விளைவு வீதங்கள், நாணய சராசரி, தனியார்த்துறை கடன் வளர்ச்சி




மூலம் : இலங்கை மத்திய வங்கி




மூலம் : இலங்கை மத்திய வங்கி

## பணவீக்கம்

2020 ஜனவரி இலிருந்து செப்தெம்பர் காலப்பகுதியினுள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணால் (CCPI, 2013 = 100) இனால் கணிக்கப்பட்ட பணவீக்கமானது 4 – 6 சதவீத வீச்சுக்களிடையே காணப்பட்டது. ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் கணிக்கப்பெற்ற பணவீக்கமானது 2020 முதல் ஒன்பது மாதங்களில் மூன்று நிலைகளில் காணப்பட்டது. (i) ஜனவரியில் 5.7 சதவீதமாக இருந்த பணவீக்கமானது பெப்ரவரியில் 6.2 சதவீதமாக அதிகரித்தது. (ii) யூன் மாதத்தில் பணவீக்கமானது 3.9 சதவீதமாக குறைவடைந்தது. (iii) 2020 செப்தெம்பரில் பண வீக்கமானது 4.0 சதவீதமாக அதிகரித்திருந்தது. ஆண்டு சராசரி பணவீக்கத்தை அடிப்படையாக கொண்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (CCPI) ஜனவரியில் 4.5 சதவீதமாகவும் பின்னர் சிறிது அதிகரித்து செப்தெம்பரில் 4.7 சதவீதமாகவும் காணப்பட்டது.

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (NCPI, 2013 = 100) மூலம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் கணிக்கப்படும் தலைக்குரிய பணவீக்கமானது 2020 ஜனவரியில் இருந்து செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் ஒற்றை இலக்க தானத்திலே காணப்பட்டது. இப்பணவீக்கமானது ஜனவரியில் 7.6 சதவீதமாகவும் பின்னர் பெப்ரவரியில் அதிக பெறுமதியான 8.1 சதவீதத்தையும் அடைந்து, 2020 செப்தெம்பரில் 6.4 சதவீதமாக காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை அடிப்படையாக கொண்ட ஆண்டு சராசரி பணவீக்கமானது ஜனவரியில் 4.1 சதவீதமாகவும் பின்னர் செப்தெம்பரில் 6.2 சதவீதமாகவும் அதிகரித்து காணப்பட்டது.

பொருளாதாரத்திற்கான அடிப்படையாக கருதப்படும் இதேவேளை, மைய பணவீக்கமானது தொடர்ச்சியாக குறைவாகவே காணப்படுகின்றது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாக கொண்ட ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் மைய பணவீக்கமானது ஜனவரியில் 3.9 சதவீதத்திலிருந்து மார்ச் மாதத்தில் 3.2 சதவீதமாக குறைவடைந்து பின்னர் செப்தெம்பரில் 4.8 சதவீதமாக அதிகரித்திருந்தது. இதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாக கொண்ட ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில், மைய பணவீக்கமானது ஜனவரியில் 3.0 சதவீதமாகவும் பின்னர் செப்தெம்பரில் 2.9 சதவீதமாகவும் குறைவடைந்தது

**அட்டவணை 2.5 :** தலைக்குரிய பணவீக்கம், மைய பணவீக்கம் மற்றும் உணவுப் பணவீக்கம் (அடிப்படை : 2013 = 100)

| மாதம் | தலைக்குரிய (%) | | பணவீக்கம் | | முக்கிய பணவீக்கம் (%) | | | | உணவுப் பணவீக்கம் (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருடத்திற்கு வருடம் | | வருடாந்த சராசரி | | வருடத்திற்கு வருடம் | | வருடாந்த சராசரி | | வருடத்திற்கு வருடம் | | வருடாந்த சராசரி | |
| | 2019 | 2020 | 2019 | 2020 | 2019 | 2020 | 2019 | 2020 | 2019 | 2020 | 2019 | 2020 |
| சனவரி | 3.7 | 5.7 | 4.1 | 4.5 | 5.5 | 3.0 | 3.7 | 5.3 | -2.1 | 12.4 | 2.3 | 2.0 |
| பெப்ரவரி | 4.0 | 6.2 | 4.1 | 4.6 | 5.4 | 3.2 | 3.8 | 5.1 | -1.4 | 14.7 | 1.7 | 3.3 |
| மார்ச் | 4.3 | 5.4 | 4.1 | 4.7 | 5.6 | 2.9 | 4.0 | 4.9 | -1.4 | 12.8 | 1.2 | 4.4 |
| ஏப்ரல் | 4.5 | 5.2 | 4.1 | 4.8 | 5.5 | 3.1 | 4.2 | 4.7 | -0.9 | 13.2 | 0.9 | 5.5 |
| மே | 5.0 | 4.0 | 4.2 | 4.7 | 6.2 | 2.9 | 4.4 | 4.4 | 0.8 | 9.9 | 0.7 | 6.3 |
| ஜூன் | 3.8 | 3.9 | 4.2 | 4.7 | 5.8 | 3.1 | 4.7 | 4.2 | -1.0 | 10.0 | 0.3 | 7.2 |
| ஜூலை | 3.3 | 4.2 | 4.0 | 4.8 | 5.7 | 3.2 | 4.8 | 4.0 | -2.6 | 10.9 | -0.3 | 8.4 |
| ஆகஸ்ட் | 3.4 | 4.1 | 3.8 | 4.8 | 5.6 | 3.2 | 5.0 | 3.8 | -2.8 | 12.3 | -1.2 | 9.7 |
| செப்தெம்பர் | 5.0 | 4.0 | 3.9 | 4.7 | 5.6 | 2.9 | 5.1 | 3.6 | 3.0 | 11.5 | -1.1 | 10.4 |
| ஒக்தோபர் | 5.4 | - | 4.0 | - | 5.5 | - | 5.3 | - | 6.8 | - | -0.4 | - |
| நவம்பர் | 4.4 | - | 4.1 | - | 5.1 | - | 5.4 | - | 4.6 | - | 0.1 | - |
| டிசெம்பர் | 4.8 | - | 4.3 | - | 4.8 | - | 5.5 | - | 6.3 | - | 0.8 | - |

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

**வரைபு 2.9 :** தலைக்குரிய பணவீக்கம், மைய பணவீக்கம் மற்றும் உணவுப் பணவீக்கம் (அடிப்படை: 2013 = 100)




மூலம் : சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

## 2.4 பங்குச் சந்தை

கொழும்பு பங்குச் சந்தையின் குறிகாட்டிகள், சந்தை கலப்பு முன்னேற்றத்தை கொண்டுள்ளது என்பதை காட்டியுள்ளன. 2019 இன் இறுதியுடன் ஒப்பிடும் போது 2020 செப்தெம்பரின் இறுதியில் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (ASPI) மற்றும் எஸ் அன்ட் பி இலங்கை 20 சுட்டெண் (S & P Sri Lanka 20) என்பன முறையே 2.4 சதவீதம் மற்றும் 16.1 சதவீதம் என்பனவற்றினால் குறைவடைந்துள்ளன. 2019 இன் இறுதியில் பெறப்பட்ட சந்தை புரள்வு ரூபா 2,851 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 செப்தெம்பரின் இறுதியில் ரூபா 2,596 பில்லியனாக குறைவடைந்துள்ளது. இதேவேளை, 2019 இன் முதல் ஒன்பது மாதங்களில் பெறப்பட்ட ரூபா 661 மில்லியன் சராசரி நாளிற்கான விற்பனை புரள்வானது 2020 இன் இதே காலப்பகுதியில் ரூபா 1,482 மில்லியனாக அதிகரித்து காணப்பட்டது. 2019 இன் ஒன்பது மாத காலப்பகுதியில் நடைபெற்ற வெளிநாட்டு விற்பனை ரூபா 2.6 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் வெளிநாட்டு விற்பனையானது ரூபா 40 பில்லியனாக அதிகரித்து காணப்பட்டது.

கொவிட்-19 இன் காரணமாக ஏற்பட்ட நிச்சயதன்மையற்ற நிலமையினால் இவ்வாறான கலப்பு முன்னேற்றத்தை கொழும்பு பங்கு சந்தை காட்டியுள்ளது. ஆண்டின் ஆரம்பத்தில் கொவிட்-19 இனை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியமையாலும் மற்றும் சீராக்கப்பட்ட நிலையான அரசியல் தன்மையின் விளைவாக ஏற்பட்ட முதலீட்டாளர்களின் மேம்பட்ட நம்பிக்கையினால் கொழும்பு பங்குச் சந்தையானது மீட்சியடைந்திருந்தது. இருப்பினும், கொழும்பு பங்கு சந்தையின் முன்னேற்றமானது தொற்று நோயின் பரவலில் தங்கியுள்ளது. கொழும்பு பங்குச் சந்தையின் செயற்பாடானது 2020 மார்ச்ச 20 இலிருந்து 2020 மே 11 வரையான காலப்பகுதியில் கொவிட்-19 தொற்று நோயின் பரவலை கட்டுபடுத்தும் முகமாக நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருந்த முடக்க நிலை காரணமாக முழுமையாக மூடப்பட்டிருந்தது. செப்தெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் மீண்டும் அதிகரித்த தொற்றின் இரண்டாம் அலை காரணமாக, முன்னேற்றமடைந்து வந்த கொழும்பு பங்கு சந்தை வர்த்தகங்கள் வீழ்ச்சியடைந்துள்ளது.

**அட்டவணை 2.6 :** மூலதனச் சந்தை அசைவுகள்

ரூ. மில்லியன்

| குறிகாட்டிகள் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | செப் இறுதியில் 2019 | செப் இறுதியில் 2020 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனைத்து பங்கு விலைச்சுட்டெண் (1985 = 100) | 7,299 | 6,895 | 6,228 | 6,369 | 6,052 | 6,129 | 5,738 | 5,985 |
| மிலங்கா விலைச் சுட்டெண்/ S&P SL 20 குறிகாட்டி | 4,089 | 3,626 | 3,496 | 3,672 | 3,135 | 2,937 | 2,760 | 2,463 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ. பில்லியன்) | 3,105 | 2,938 | 2,745 | 2,899 | 2,840 | 2,851 | 2,709 | 2,596 |
| விற்பனை நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 294 | 294 | 295 | 296 | 297 | 289 | 290 | 285 |
| வருடாந்த புரள்வு (ரூ. பில்லியன்) | 341 | 253 | 176 | 221 | 200 | 171 | 118 | 218 |
| வெளிநாட்டு விற்பனைகள் (ரூ. மில்லியன்) | 83,554 | 89,793 | 74,275 | 94,627 | 100,315 | 68,272 | 48,721 | 87,027 |
| வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | 104,771 | 84,421 | 74,625 | 112,285 | 77,067 | 56,537 | 46,127 | 46,905 |
| தேறிய கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | 21,217 | -5,372 | 350 | 17,658 | -23,248 | -11,735 | -2,594 | -40,122 |

மூலங்கள் : கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

## 2.5 வெளியக துறை முன்னேற்றங்கள்

வெளியக துறை முன்னேற்றமானது 2020 இன் முதல் எட்டு மாதங்களில் இரண்டு கட்டங்களாக காட்டப்பட்டுள்ளது. 2020 இன் முதல் ஆறு மாதங்களில் வர்த்தகம், சுற்றுலா மற்றும் நிதி பாய்ச்சல் கொவிட்-19 இன் தாக்கத்தினால் நலிவடைந்திருந்தது. நாட்டின் மீள ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார செயற்பாடுகளினால் 2020 மே இன் இரண்டாம் கிழமையிலிருந்து வெளியக துறை முன்னேற்றங்களை கொண்டிருந்தது. பெற்றோலிய இறக்குமதிகளின் விலை குறைவுடன், அத்தியவசியமற்ற பொருட்களின் இறக்குமதிகள் மற்றும் குறிப்பிட்ட மூலதன வெளிப்பாய்ச்சலின் மீதான கட்டுப்பாடுகளினால் குறைவடைந்த இறக்குமதி செலவினம் அதிகரித்த ஏற்றுமதிகள், அதிகரித்த வெளிநாட்டு பணவனுப்பல்கள், குறைவடைந்த வர்த்தக மீதிக்கான பற்றாக்குறைகள் என்பனவற்றுடன் யூன், யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் மீள் எழுச்சி அவதானிக்கப்பட்டது.

2019 இன் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட வர்த்தக மீதியின் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 4,855 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதிக்கான கூட்டிணைக்கப்பட்ட வர்த்தக மீதி பற்றாக்குறையானது ஐ.அ.டொலர் 1,043 மில்லியனால் குறைவடைந்து ஐ.அ.டொலர் 3,812 மில்லியனாக காணப்பட்டது. 2019 இன் முதல் எட்டு மாதங்களில் ஏற்றுமதி வருமானமான ஐ.அ.டொலர் 8,030 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் ஏற்றுமதி வருமானமானது 19.7 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொலர் 6,445 மில்லியனாக காணப்பட்டது. கைத்தொழிற்சாலை கட்டுமானம், விவசாயம், கனியவளம் போன்ற ஏற்றுமதிகள் 22.5 சதவீதம், 9.1 சதவீதம், 33.1 சதவீதம் என்பனவற்றால் குறைவடைந்து முறையே ஐ.அ.டொலர் 4,905.5 மில்லியன். ஐ.அ.டொலர் 1,516.0 மில்லியன், ஐ.அ.டொலர் 14.3 மில்லியன் ஆக காணப்பட்டமை இதற்கு பிரதான காரணமாகும். இதேவேளை, 2019 இன் முதல் எட்டு மாதங்களில் இறக்குமதிகளின் பெறுமதி ஐ.அ.டொலர் 12,885.5 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில், இறக்குமதிகளின் பெறுமதி 20.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 10,257.4 மில்லியனாக காணப்பட்டது. எரிபொருட்களின் இறக்குமதி பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் மற்றும் அத்தியவசியமற்ற பொருட்களின் இறக்குமதி மீதான அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளே இதற்கான பிரதான காரணங்களாகும்.

மார்ச் 2020 தொடக்கம், சர்வதேச சுற்றுலா பயணிகள் இந்நாட்டிற்கு வருவது உலகளாவிய செயற்பாடுகளிற்கு சமாந்தரமாக தடை செய்யப்பட்டது. அரசாங்கத்தின் பங்கு பிணைய சந்தையின் வெளிப்பாய்ச்சல் என்பன உலகளாவிய நிச்சயமற்ற நிலைக்கான சான்றுகளாகும். அந்நிய செலாவணியின் வெளிப்பாய்ச்சலை கட்டுப்படுத்துதல் உள்ளடங்கலாக அரசாங்கமானது எடுத்த பல்வேறு நடவடிக்கைகளால் அந்நிய செலாவணி விகிதமானது 2020 ஆகஸ்ட் இறுதியில் இருந்து நிலையாக பேணப்பட்டது. அரசாங்கமானது கடன் சேவை பொறுப்புகளை பொருத்தமான முறையில் பூர்த்தி செய்துள்ளது. குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால கட்டங்களில் முதலீட்டாளர் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு உதவம் முகமாக அரசாங்கமானது வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்வதற்கு உறுதிபூண்டுள்ளது.

**அட்டவணை 2.7 :** வெளிநாட்டு வர்த்தகம்

ஐ.அ.டொலர். மில்லியன்

| வகை | 2017 | 2018 | 2019 | ஜன - ஆகஸ் 2019 | ஜன - ஆகஸ் 2020 (அ) |
|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதி** | **11,361** | **11,890** | **11,940** | **8,030** | **6,445** |
| **விவசாய ஏற்றுமதிகள்** | **2,767** | **2,580** | **2,462** | **1,667** | **1,516** |
| தேயிலை | 1,530 | 1,429 | 1,346 | 915 | 806 |
| பிற விவசாய உற்பத்திகள் | 1,237 | 1,151 | 1,116 | 752 | 710 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **8,542** | **9,258** | **9,427** | **6,330** | **4,906** |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 5,032 | 5,318 | 5,597 | 3,737 | 2,853 |
| உணவு, குடிபானம், புகையிலை | 393 | 462 | 447 | 304 | 303 |
| இறப்பர் உற்பத்திகள் | 835 | 875 | 866 | 591 | 489 |
| இயந்திர மற்றும் உபகரணற்கள் | 371 | 435 | 400 | 275 | 210 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 434 | 622 | 521 | 328 | 268 |
| **ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **1,477** | **1,546** | **1,596** | **1,096** | **783** |
| கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 35 | 34 | 34 | 21 | 14 |

**அட்டவணை 2.7 :** வெளிநாட்டு வர்த்தகம்

ஐ.அ.டொலர். மில்லியன்

| வகை | 2017 | 2018 | 2019 | ஜன - ஆகஸ் 2019 | ஜன - ஆகஸ் 2020 (அ) |
|---|---|---|---|---|---|
| வகுக்கப்படாதவை | 17 | 18 | 18 | 11 | 9 |
| **இறக்குமதிகள்** | **20,980** | **22,233** | **19,937** | **12,886** | **10,258** |
| **நுகர்வுப் பொருட்கள்** | **4,503** | **4,980** | **3,957** | **2,499** | **2,301** |
| உணவும் குடிபானமும் | 1,841 | 1,606 | 1,427 | 917 | 1,024 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 2,662 | 3,374 | 2,530 | 1,582 | 1,277 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **11,436** | **12,488** | **11,369** | **7,380** | **5,693** |
| பெற்றோலியம் | 3,428 | 4,152 | 3,892 | 2,577 | 1,691 |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 2,724 | 2,859 | 2,909 | 1,877 | 1,457 |
| கோதுமை மற்றும் சோளம் | 357 | 374 | 346 | 203 | 229 |
| ஏனையவை | 4,927 | 5,104 | 4,222 | 2,723 | 2,315 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,895** | **4,690** | **4,603** | **3,002** | **2,253** |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 2,621 | 2,492 | 2,490 | 1,610 | 1,325 |
| கட்டிடப் பொருட்கள் | 1,591 | 1,525 | 1,509 | 1,007 | 671 |
| போக்குவரத்து உபகரணம் | 675 | 668 | 597 | 380 | 255 |
| ஏனையவை | 8 | 6 | 8 | 5 | 2 |
| வகுக்கப்படாதவை | 147 | 75 | 8 | 5 | 11 |
| **வர்த்தகப் பற்றாக்குறை** | **-9,620** | **-10,343** | **-7,997** | **-4,855** | **-3,812** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ தற்காலிகமானது.

**வரைபு 2.10 :** வர்த்தக மீதி, நாணய மாற்று வீத அசைவு




மூலம் : இலங்கை மத்திய வங்கி




மூலம் : இலங்கை மத்திய வங்கி

## ஏற்றுமதிகள்

கொவிட்-19 தொற்றின் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான தாக்கத்தினால் 2019 இன் முதல் எட்டு மாத காலத்திலான ஏற்றுமதி மூலம் கிடைக்கப்பெற்ற வருமானமான ஐ.அ.டொலர் 8,030.2 மில்லியன், 2020 இல் இதே காலப்பகுதியில் 19.7 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொலர் 6,445.0 மில்லியனாக காணப்பட்டது. 2019 இன் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 6,330.2 மில்லியனாக காணப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகள் 2020 இல் இக்காலப்பகுதியில் 22.5 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொலர் 4,905.5 மில்லியனாக காணப்பட்டது. ஆடைக் கைத்தொழில் ஏற்றுமதி 23.6 சதவீதத்தினாலும், இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதி 48.7 சதவீதத்தினாலும், போக்குவரத்து சாதனங்கள் 61.6 சதவீதத்தினாலும், அடிப்படை உலோகம் மற்றும் பொருட்களில் 37.2 சதவீதத்தினாலும், தோற்பொருட்கள், பயணப் பொருட்கள், காலணிகள் 48.5 சதவீதத்தினாலும் இறப்பர் பொருட்கள் 17.3 சதவீதத்தினாலும் போன்ற

ஏற்றுமதி பொருட்கள் 2020 இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் குறைவடைந்துள்ளன.

இருப்பினும், கொவிட்-19 நோய் தொற்றின் பரவலின் காரணமாக முகக்கவசம், சத்திர சிகிச்சைக்காக பாவிக்கப்படும் கையுறை, சுகாதார பாதுகாப்பு கவசங்கள் போன்ற தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களிற்கு கேள்வி ஏற்பட்டிருந்தது. இதில், சுகாதார பாதுகாப்பு கவசம் ஆடைக் கைத்தொழில் பிரிவிலும், கையுறைகள் இறப்பர் பொருட்கள் கைத்தொழில் பிரிவிலும் மற்றையவை தைத்த ஆடை சார்ந்த பொருட்கள் எனும் பிரிவிலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் தைத்த ஆடை சார்ந்த பொருட்கள் 2019 இன் முதல் எட்டு மாத ஏற்றுமதி வருமானம் ஐ.அ.டொலர் 70.5 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இல் முதல் எட்டு மாதத்தில் ஏற்றுமதி வருமானமானது 141 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொலர் 170.1 மில்லியனாக காணப்பட்டது. மேலும், உணவு, குடிபானங்கள், புகையிலை, போக்குவரத்து சாதனங்கள், பிளாஸ்டிக் மற்றும் பொருட்கள் போன்ற கைத்தொழில் உபபிரிவுகளின் ஏற்றுமதி வருமானமானது 2020 ஆகஸ்ட் இல் அதிகரித்திருந்தன. இலங்கை ஏற்றுமதிகளை பிரதானமாக பெற்றுக்கொள்ளும் நாடுகளான ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் போன்றவை கொவிட்-19 நோய் பரவலினால் பெரிதும் பாதிப்படைந்திருந்தமையினால் ஏற்றுமதி பொருட்களிற்கான கேள்வி பெருமளவு குறைவடைந்திருந்தன. இதேநேரம், தேயிலை,இறப்பர், தேங்காய், வாசனை திரவியங்கள், பதப்படுத்தப்படாத புகையிலை, கடலுணவுகள், காய்கறிகள் மற்றும் சிறிய விவசாய ஏற்றுமதி பொருட்கள் தவிர்ந்த விவசாய ஏற்றுமதிகளின் வருமானமானது, 2019 இல் முதல் எட்டு மாதத்தில் பெற்ற ஏற்றுமதி வருமானமான ஐ.அ.டொலர் 1,667.4 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இல் இதே காலப்பகுதியில் பெறப்பட்ட ஏற்றுமதி வருமானமானது 9.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 1,516.0 மில்லியனாக காணப்பட்டது. இருப்பினும், விவசாய ஏற்றுமதி வருமானமானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2020 யூன் இல் 12 சதவீதத்தால் அதிகரித்து ஐ.அ.டொலர் 229.1 மில்லியனாகவும், 2020 யூலை இல் 27.3 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொலர் 261.2 மில்லியனாகவும் காணப்பட்டன. மேலும், கொவிட்-19 இன் பாதகமான தன்மையின் பின்னர் 2020 ஆகஸ்ட் இல் ஏற்பட்டிருந்த சீரான உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகளில் தேங்காய், வாசணைதிரவியங்கள், காய்கறிகள், பதப்படுத்தப்படாத புகையிலை, சிறிய விவசாய பொருட்களின் ஏற்றுமதி வருமானமானது அதிகரிப்பை கொண்டிருந்தன. கனியவள ஏற்றுமதி 33.1 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொலர் 14.3 மில்லியனாக காணப்பட்டது.

**வரைபு 2.11 : ஏற்றுமதிகளின் வகுதி**




மூலம் : இலங்கை மத்திய வங்கி

### இறக்குமதிகள்

மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகள் மற்றும் அத்தியவசியமற்ற பொருட்கள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் விளைவாக 2019 இன் இறக்குமதிகளிற்காக செலவிடப்பட்ட தொகையான ஐ.அ.டொலர் 12,885.5 மில்லியனுடன் ஒப்பிடும் போது, 2020 இன் இதே காலப்பகுதியில் அத்தொகை 20.4 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொலர் 10,257.4 மில்லியனாக காணப்பட்டது. உணவு அல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி குறைவடைந்தமையினால் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி செலவினமானது மீளாய்வு காலத்தில் 8.0 சதவீதத்தால் குறைவடைந்து ஐ.அ.டொலர் 2,300.3 மில்லியனாக காணப்பட்டது. உணவு அல்லாத நுகர்வு பொருட்களின் இறக்குமதி செலவினமானது 2019 இல் இவ் மீளாய்வு காலத்தில் ஐ.அ.டொலர் 1,582.0 மில்லியனில் இருந்து 2020 இல் 19.3 சதவீதம் குறைவடைந்து ஐ.அ.டொலர் 1,276.7 மில்லியனாக காணப்பட்டது. தனிப்பட்ட வாகனங்களின் இறக்குமதி ஆடைகள் மற்றும் அவை சார்ந்த பொருட்கள், வீட்டு பாவனை பொருட்கள், வீட்டு தளபாட பொருட்கள் போன்றவற்றிற்காக இறக்குமதி செலவினம் குறைவடைந்தமையே இதற்கான பிரதான காரணங்களாகும். தனிப்பட்ட வாகனங்களிற்கான இறக்குமதி செலவினமானது 43.4 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொலர் 280.8 மில்லியனாக காணப்பட்டது.

**வரைபு 2.12 : இறக்குமதி வகுதி**




மூலம் : இலங்கை மத்திய வங்கி

காய்கறிகள், பாலுணவு பொருட்கள், சீனி, இனிப்பு பண்டங்கள் மற்றும் வாசனை திரவியங்கள் இறக்குமதிகள் அதிகரித்தமையினால், உணவு, குடிபானங்களின் மீதான இறக்குமதி செலவினமானது 2020 இன் முதல் எட்டு மாதங்களில் 11.6 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொலர் 1,023.7 மில்லியனாக காணப்பட்டது. எரிபொருட்களின் இறக்குமதி, வைரம் மற்றும் விலை மதிப்புள்ள கற்கள், உலோகங்கள் ஆடைகள் மற்றும் ஆடை சார்ந்த பொருட்கள், அடிப்படை உலோகம், கனியவள பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதி செலவினம் குறைவடைந்தமையின் விளைவால் இடைநிலை பொருட்களின் இறக்குமதி செலவினமானது ஐ.அ.டொலர் 7,379.8 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 5,692.4 மில்லியனாக வீழ்ச்சியடைந்திருந்தது. பொருளாதார செயற்பாடுகள் மந்தமடைந்தமையினால் உள்நாட்டில் எரிபொருட்களிற்கான கேள்வி குறைவடைந்தமையினால் குறைவடைந்த எரிபொருட்களின் இறக்குமதி அளவு மற்றும் சர்வதேச சந்தையில் எரிபொருட்களிற்கான விலைகள் மற்றும் கச்சா மசகு எண்ணெயின் விலைகளும் குறைவடைந்தமையினால் எரிபொருட்களிற்கான இறக்குமதி செலவினமானது 34.4 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொலர் 1,691.2 மில்லியனாக காணப்பட்டது. எதிர்வரும் குறுகிய காலங்களில் ஆடை ஏற்றுமதிகளிற்கான கேள்வி குறைவடையும் என எதிர்ப்பார்ப்பதாலும் உலகளாவிய வழங்கல் வலையமைப்பு பாதிப்படைந்துள்ளமையாலும் 2020 இன் மீளாய்வு காலத்தில், ஆடை மற்றும் ஆடைகள் சார்ந்த பொருட்களினது இறக்குமதி செலவினமானது 22.4 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொலர் 1,457.2 மில்லியனாக காணப்பட்டது.

2019 இன் முதல் எட்டு மாதங்களில் பதிவு செய்யப்பட்ட மூலதன பொருட்களிற்கான இறக்குமதி செலவு ஐ.அ.டொலர் 3,001.8 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் அது 24.9 சதவீதம் குறைவடைந்து ஐ.அ.டொலர் 2,253.2 மில்லியனாக காணப்பட்டது. இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், கட்டிட பொருட்கள், போக்குவரத்து சாதனங்கள் மற்றும் மூலதன பொருட்களிற்கான இறக்குமதி செலவினமானது முறையே 17.7 சதவீதம், 33.3 சதவீதம், 32.8 சதவீதம் மற்றும் 56.5 சதவீதமாக குறைவடைந்து காணப்பட்டன.

### உல்லாச பயணத்துறை மற்றும் வெளிநாட்டில் உள்ள ஊழியர்களின் பணவனுப்பல்

2019 இல் முதல் ஒன்பது மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த உல்லாச பிரயாணிகளின் எண்ணிக்கை 1,376,312 உடன் ஒப்பிடும் போது 2020 இன் இதே காலப்பகுதியில் 63.1 சதவீதத்தினால் குறைவடைந்து 507,311 உல்லாச பிரயாணிகளே வருகை தந்துள்ளனர். 2020 மார்ச் நடுப்பகுதியிலிருந்து எல்லா விமான மற்றும் கப்பல் பிரயாணிகள் நாட்டினுள் வருவது தடை செய்யப்பட்டமையே இதற்கான பிரதானமான காரணமாகும். இதனால் உல்லாச பயணதுறையினால் பெறப்பட்ட வருமானமானது 2019 இல் முதல் ஒன்பது மாத காலத்தில் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 2,594 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 இல் 63.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 956 மில்லியனாக காணப்பட்டது.

2019 இன் முதல் ஒன்பது மாதத்தில் பெறப்பட்ட வெளிநாட்டில் உள்ள ஊழியர்களின் பணவனுப்பல் ஐ.அ.டொலர் 4,930 மில்லியனுடன் ஒப்பிடும் போது அது 2020 இல் 2.4 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொலர் 5,049 மில்லியனாக காணப்பட்டது. இருப்பினும், 2020 இன் யூலை, ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் அவ்வருமானமானது முறையே 12.2 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொலர் 702 மில்லியனாகவும், 28.2 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொலர் 644 மில்லியனாகவும், 36.1 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொலர் 703 மில்லியனாகவும் காணப்பட்டன. 2020 ஆகஸ்ட் இறுதியில், தேறிய சட்ட பூர்வ ஒதுக்கு ஐ.அ.டொலர் 7.4 பில்லியனாகவும் காணப்பட்டது.

**கொவிட்-19 இன் விளைவினால் நாட்டிற்கு ஏற்பட்ட பொருளாதார, அரசிறை தாக்கங்கள்**













## 2.6 உலக பொருளாதார நோக்கு

கொவிட்-19 இன் பரவலினால் அபிவிருத்தியடைந்த நாடுகள், சீனா, இந்தியா மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார செயற்பாடுகளின் மந்த நிலை காரணமாக உலக பொருளாதார வளர்ச்சியானது 2019 ஆம் ஆண்டில் 2.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது 2020 இல் 4.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடையும் என சர்வதேச நாணய நிதியம் கணிப்பிட்டுள்ளது. 2020 இன் முதல் நான்கு மாதங்களும் கொவிட்-19 நோய் பரவலின் தாக்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட முடக்கல் நிலை மற்றும் பல்வேறு கட்டுபாடுகள் காரணமாக உலக பொருளாதார செயற்பாடுகள் பெருமளவு சரிவடைந்து போயுள்ளது. வர்த்தகம் மற்றும் நிதித் துறைகளின் சரிவினால் பல நாடுகளின் பொருளாதாரங்கள் பின்னடைவை சந்திக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. கிட்டதட்ட 80 சதவீதமான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சியை கொண்டிருக்கும் என சர்வதேச நாணய நிதியம் எதிர்வு கூறியுள்ளது. முக்கியமாக சுற்றுலாத்துறையில் தங்கியிருக்கும் நாடுகள், உலக பெறுமதி சேர் வலையமைப்பில் தங்கியுள்ளவை மற்றும் கைத்தொழில் பொருட்களை பெருமளவு ஏற்றுமதி செய்யும் நாடுகள் என்பனவே பெருமளவு இப்பாதிப்பை எதிர் கொள்ள வேண்டியிருக்கும். குறைந்த வருமானத்தை கொண்டிருக்கும் நாடுகள் இவ்வருமான இழப்பை பெருமளவு சந்திப்பதால் வறுமை நிலையை அடையும் ஆபத்தை கொண்டிருக்கின்றன. அந்நாடுகளின் சுகாதார துறையின் திறமை இப்பாரிய தொற்று நோய்களை கையாளுவதில் வரையறைகளை கொண்டுள்ளது. அதிகளவிலான அரசாங்க கடன்களினால் இந்நோய் பரவலை எதிர் கொள்வதற்கான குறைந்தளவான அரசிறை வெளியை பல நாடுகள் எதிர் கொண்டு இருக்கின்றன. இருப்பினும், முதலீடுகளும் வர்த்தக செயற்பாடுகளும் மீள ஆரம்பிப்பதுடன், 2021 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியானது 4.6 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், சுற்றுலாத்துறையில் தங்கியிருக்கும் நாடுகள் தம்மை மீளமைக்க மேலும் பல காலங்கள் எடுக்கும்.

வரிகள், பொது பயன்பாடுகள், வாடகை மற்றும் கடன் மீளளிப்பு சேவைகள் போன்றவற்றை இலகுமுறையில் செலுத்துதல் அல்லது பிந்தி செலுத்துதல் போன்ற அரசிறை நிவாரணங்களை நடைமுறைப்படுத்தும் அதேவேளை, குறுகிய காலத்தில் பொருளாதார மந்தநிலையை முகங்கொடுக்க இலகு நாணய கொள்கைக்கு மாறல் வேண்டும், நடுத்தர காலத்தில், பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு நாடுகள் தமது நாணய கொள்கையை மேலும் விரிவுப்படுத்தப்படல் வேண்டும்.

**அட்டவணை 2.8 :** உலக பொருளாதாரத்தின் பிரதான குறிகாட்டிகள் – 2019

| நாடு | மொ.உ.உ. வளர்ச்சி (வருடாந்த %) | பணவீக்கம் (%) | வேலையின்மை (%) | அரசிறை பற்றாக்குறை (மொ.உ.உ %) | தேறிய கடன் (மொ.உ.உ. %) |
|---|---|---|---|---|---|
| ஆர்ஜன்டீனா | -11.8 | - | 11.0 | -10.7 | 62.2 |
| அவுஸ்திரேலியா | -4.2 | 0.7 | 6.9 | -10.7 | 125.5 |
| பிரேசில் | -5.7 | 2.8 | 13.4 | -16.8 | 101.4 |
| கனடா | -7.1 | 0.6 | 9.7 | -19.9 | 114.6 |
| சிலி | -6.0 | 2.9 | 11.4 | -10.7 | 62.2 |
| சீனா | 1.9 | 2.9 | 3.8 | -11.9 | 61.7 |
| பிரான்ஸ் | -9.8 | 0.5 | 8.5 | -10.8 | 118.7 |
| ஜேர்மனி | -6.0 | 0.5 | 4.3 | -8.2 | 73.3 |
| கிரீஸ் | -9.5 | -0.6 | 19.9 | -6.2 | 48.8 |
| இந்தியா | -10.3 | 4.9 | த.இ | -13.1 | 89.3 |
| இந்தோனேசியா | -1.5 | 2.1 | 8.0 | -6.2 | 48.8 |
| இத்தாலி | -10.6 | 0.1 | 11.0 | -13.0 | 161.8 |
| ஜப்பான் | -5.3 | -0.1 | 3.3 | -14.2 | 266.2 |
| கொரியா | -1.9 | 0.5 | 4.1 | -10.7 | 125.5 |
| மலேசியா | -6.0 | -1.1 | 4.9 | -6.2 | 48.8 |
| மெக்சிகோ | -9.0 | 3.4 | 5.2 | -5.8 | 65.5 |
| ரஷ்யா | -4.1 | 3.2 | 5.6 | -5.3 | 18.9 |
| சிங்கப்பூர் | -6.0 | -0.4 | 3.0 | -10.7 | 63.7 |
| தென்னாபிரிக்கா | -8.0 | 3.3 | 37.0 | -14.0 | 78.8 |
| ஸ்பெயின் | -12.8 | -0.2 | 16.8 | -14.1 | 123.0 |
| இலங்கை | -1.7 | 5.3 | த.இ | -6.2 | 48.8 |
| தாய்லாந்து | -7.1 | -0.4 | 1.0 | -6.2 | 48.8 |
| ஐக்கிய இராச்சியம் | -9.8 | 0.8 | 5.4 | -16.5 | 108.0 |
| ஐக்கிய அமெரிக்கா | -4.3 | 1.5 | 8.9 | -18.7 | 131.2 |
| வியட்நாம் | 1.6 | 3.8 | 3.3 | -6.2 | 48.8 |

மூலங்கள் : உலக பொருளாதார பார்வை, சர்வதேச நாணய நிதியம், 2020 ஒக்தோபர் அரசிறை கண்காணிப்பு, சர்வதேச நாணய நிதியம், 2020 ஒக்தோபர், நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி

த.இ. - தகவல் இல்லை

# 03

# அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

## 3.1 மேன்நோக்கு

நடுத்தரக் காலத்தில் நிதியியல் ரீதியாக சுயாதீனமான முயற்சிகளாகவும் வர்த்தக ரீதியாக பூரணத்துவம்மிக்க நிறுவனங்களாகவும் அரசுடமைத் தொழில்முயற்சிகளை பரிணமிக்கச்செய்வதற்காக அவற்றின் முகாமைத்துவச் சபையில் தொழில்வல்லுநர்களை உள்வாங்கல், முறையான மூலோபாய வழிமுறைகள் மூலம் அவற்றினை இயக்குதல் மற்றும் அவற்றின் ஒவ்வொரு கட்டங்களையும் மிக உன்னிப்பக கண்காணித்தல் என்பனவற்றின் மூலம் அத்தகைய தொழில்முயற்சிகளின் வினைத்திறன் மட்டத்தினை மேம்படுத்துவதன் பால் அரசுடமைத் தொழில்முயற்சிகள் மீது அரசாங்கத்தின் கொள்கை வழிகாட்டல்கள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

அரசுடமைத் தொழில்முயற்சிகளில் தகுதிவாய்ந்த முகாமைத்துவ சபையின் முக்கியத்துவத்தினை அடையாளங்கண்டுள்ள அரசாங்கம், இத்தகைய சபைகளில் பணியாற்றுவதற்காக ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து முன்மொழிவுகளுக்கான கோரிக்கையை கோருகின்ற புதிய கொள்கையொன்றினைக் கடைபிடிக்கின்றது. இதன் விளைவாக, தகுதிவாய்ந்த தொழில் வல்லுநர்கள் மற்றும் வணிகப் பின்னணியுடன் கூடிய சிறந்த தொழில்முயற்சியாளர்கள் பலர் அரசுடமைத் தொழில்முயற்சிகளின் பணிப்பாளர் சபைகளில் நியமிக்கப்படுகின்றனர். கொவிட் -19 தொற்றுநோயத் தாக்கத்தின் மத்தியில் கடந்த சில மாதங்களின் போது இதுபோன்ற நியமனங்கள் அத்தகைய தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதனை சான்றுபகர்வதனை அவதானிக்கையில் இது மேலும் ஊக்கமளிக்கப்படுகிறது.

முக்கிய சேவைகளை வழங்குகின்ற அரசுடமைத் தொழில்முயற்சிகள் குறிப்பாக, லங்கா சதோச நிறுவனம், அரச மருந்தகக் கூட்டுத்தாபனம், அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பனவறின் சேவைகள் கொவிட் 19 நோய்த் தொற்றுக் காலப்பகுதியிலும் எதுவித இடையூறுமின்றி தொடர்ந்தும் பேணப்படுகின்றது என்பதனை உறுதிசெய்வதற்காக அத்தகைய தொழில்முயற்சிகளின் விரிவான வலையமைப்புக்கள், செயன்முறைகள் மற்றும் அமைப்புக்களை பயன்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு முடிந்துள்ளது. இதேவேளை, வினைத்திறனினை மேம்படுத்தல் மற்றும் பங்குதாரர்களின் பங்குப் பெறுமதியினை அதிகரித்தல் என்பனவற்றின் மீது கவனஞ்செலுத்தி, அரசுடமைத் தொழில்முயற்சிகளை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் ஆதனச் சொத்து விற்பனைகளை மேற்பார்வை செய்வதற்காக செலெண்டிவா இன்வெஸ்மெண்ட் லிமிடெட் நிறுவனம், மற்றும் அதி வேகப் பாதைகளை நிர்வகிப்பதற்காக மற்றுமொரு நிறுவனம் இதற்காக அரசாங்கத்துடன் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. அத்துடன், வலுவான கண்காணிப்பு முறைமையொன்றினைத் தாபித்து, அதற்கு இணையாக, முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகளை உள்ளடக்கி மூலோபாய வணிக திட்டங்களை சமர்ப்பிப்பதற்கும் அரசுடமைத் தொழில்முயற்சிகள் வழிகாட்டப்பட்டள்ளன. அவ்வாறே, தாபிக்கப்பட்ட முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகளை அடைவதற்கான பொருத்தப்பாட்டினை கண்டறிவதற்காக அரசுடமைத் தொழில்முயற்சிகளில் ஆட்சேர்ப்பு திட்டங்களை மீளாய்வுசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்கள் அவற்றின் செயற்பாடுகளை மேலும் தொடருவதற்காக அரசாங்கம் கடந்த சில மாதங்களின் போது திறைசேரி உத்தரவாதங்களை விநியோகித்தல் உள்ளடங்கலாக பல்வேறு ஒத்துழைப்புக்களையும் வழங்கியுள்ளது. இதேவேளை, திறைசேரியின் கண்காணிப்புப் பொறிமுறையினை மறுபரிசீலனை செய்த பின்னர், 2020.10.26 ஆம் திகதிய 02.˙.2020 ஆம் இலக்க சுற்றறிக்கை அரசுடமைத்தொழில் முயற்சிகளுக்கு தமது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் சிறந்த நெகிழசித்தன்மை மற்றும் சுயாட்சி என்பனவற்றினை வழங்கியுள்ளது.

கொவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்திய கடன் நிவாரண திட்டங்களை செயல்படுத்துவதில் அரச வங்கிகள் முக்கிய பங்கு வகித்துள்ளன. ‘சௌபாக்கிய' கொவிட் -19 மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், அரசுடமை வங்கிகள் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து சுமார் 27,553 வாடிக்கையாளர்களுக்கு ரூபா 46.7 பில்லியன் பெறுமதியான சலுகைக் கடன்களை வழங்கியுள்ளன. கொவிட் -19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்க முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில் லங்கா சதோச, அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் மற்றும் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் என்பன போன்ற தொழில் முயற்சிகளின் பங்களிப்பு அளப்பரியது.

## 3.2 அரசுடமைத் தொழில்முயற்சிகள் பற்றிய சுருக்கமான மீளாய்வு

### இலங்கை வங்கி

இணைய தள வங்கிச் சேவை மற்றும் செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவை என்பனவற்றின் மூலம் வங்கியிடல் சேவையில் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட வங்கிச் சேவையினைக் கொண்டுள்ள இலங்கை வங்கியானது, நாடு முடப்பட்டிருந்த நிலையிலும்

தனது வாடிக்கையாளர்களுக்கு எதுவித இடையூறுமின்றி வங்கிச் சேவைகளை தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. கொவிட்-19 நிவாரணப் பொதிகள் மூலம் இலங்கை வங்கியானது தனது 221,057 வாடிக்கையாளர்களுக்கு கடன் தவணைக் காலங்களையும் வழங்கியுள்ளது.

2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 2.4 திரிலியனாகக் காணப்பட்ட இலங்கை வங்கியின் சொத்துத் தளமானது, 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாத இறுதியில் ரூபா 2.8 திரிலியனுக்கு 15 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாத இறுதியளவில வங்கி வைப்புத் தளமானது, ரூபா 2.2 திரிலியனை அடைந்து, ரூபா 2 திரிலியன் என்ற மைற்கல்லினை கடந்து சென்ற முதலாவது உள்நாட்டு வங்கியாக என்ற பெயர் நாமத்தினையும் இலங்கை வங்கி பெற்றுள்ளது. 2020 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது இலங்கை வங்கியின் வரிக்கு முன்னைய இலாபம் ரூபா 12.9 பில்லியனாக காணப்பட்டதோடு, 2019 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் பதிவாக்கிய ரூபா 18.1 பில்லியன வரிக்கு முன்னைய இலாபத்துடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்கதொரு பின்னடைவாகும். இப்பின்னடைவிற்கு கொவிட்-19 காலகட்டத்தில் வழங்கப்பட்ட கடன் நிவாரணம் முதல் நாளிலேயே கணக்கில் வைப்புச் செய்யப்பட்டமை காரணமாக ஏற்பட்ட நட்டம் மற்றும் வைப்புக் கணக்குகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு இணையாக வட்டிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன பிரதான காரணங்களாக அமைந்தன.

## மக்கள் வங்கி

கொவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களைப் புத்துயிர்பெறச் செய்வதற்காக மக்கள் வங்கியானது, கடந்த ஆறு மாத காலப்பகுதியில் ரூபா 37 பில்லியன் பெறுமதியான கடன் நிவாரணத்தை சுமார் 20,213 வணிக வாடிக்கையாளர்களுக்கு வழங்கியுள்ளது. மேலும், உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் மற்றும் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்காக நிதி மற்றும் நிதியல்லா வசதிகளை வழங்கும் நோக்கில் வங்கியானது கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் கூட்டிணைந்து 'Made in Sri Lanka' என்ற கருப்பொருளின் கீழ் கடன் திட்டமொன்றினையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட கடன் வழங்கல் திட்டத்தின் ஊடாக கடன் பதிவினை விரிவுபடுத்தல் மற்றும் வங்கியின் 2 ஆம் படியடக்க வரிசை மூலதனத்தை வலுப்படுத்தல் என்ற இலக்குடன், 2020 யூலை மாதத்தில் ரூபா 20 பில்லியன் பெறுமதியான பட்டியலிடப்படாத, Basel III, அடுக்கு 2 இற்கு இணக்கமான, பட்டியலிடப்படாத, தரப்படுத்தப்பட்ட, பிணையற்ற, துணைநிலையான விடுவிக்கத்தக்க கடன் ஈட்டுக்களை மக்கள் வங்கி வெற்றிகரமாக வெளியிட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது மக்கள் வங்கியின் சொத்துத் தளமானது, ரூபா 2 திரிலியனைக் கடந்துசென்று, ரூபா 2 திரிலியனுக்கு மேற்பட்ட வைப்புத் தளத்தினைக் கொண்டுள்ள இந்நாட்டின் இரண்டாவது உரிமம் பெற்ற வணிக வங்கியாக மக்கள் வங்கி பரிணமித்துள்ளது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1.5 திரிலியனாக காணப்பட்ட மக்கள் வங்கியின் வைப்புத் தளமானது, 2020 ஆம் ஆண்டின் ஓகத்து மாத இறுதியில் ரூபா 1.7 திரிலியன் வரையில் 11.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது வங்கியின் கடன் பட்டியல் ரூபா 1.7 திரிலியன் வரையில் 22.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2019 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலத்தில் அறிக்கையிடப்பட்ட ரூபா13.3 பில்லியனாக காணப்பட்ட வரிக்கு முன்னைய இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டின் சனவரி முதல் ஓகத்து வரையான காலப் பகுதியினுள் மக்கள் வங்கியின் வரிக்கு முன்னைய இலாபம் ரூபா 6.3 பில்லியனாக காணப்பட்டது. இதற்கு 89 சதவீதத்தினால் அறவிடமுடியாக் கடன் அதிகரித்தமையே பிரதான காரணமாக அமைந்தது.

## தேசிய சேமிப்பு வங்கி

நாட்டின் மிகப் பெரிய சேமிப்பு வங்கியான தேசிய சேமிப்பு வங்கியானது, 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாத இறுதியளவில் தனது கிளை வலையமைப்பினை 258 வரையில் 02 கிளைகள் மூலம் மேலும் விரிவுபடுத்தியுள்ளது. மேலும், நாடு முழுவதிலுமுள்ள 4,692 தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்களிலும் தொழிற்பாட்டு வலையமைப்பொன்றினை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

அரசாங்க பிணையங்களின் முதலீடுகள் மீது ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாத இறுதியில் ரூபா1.2 திரில்லியனாக காணப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் சொத்துத் தளமானது, 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாத இறுதியளவில் ரூபா 1.3 திரிலியன் வரையில் 8.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மொத்த சொத்து இறுப்புக்களில் வாடிக்கையாளர் வைப்பு 91.3 சதவீதத்தினால் அதிகிகரித்ததன் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,016 பில்லியனாக காணப்பட்ட வாடிக்கையாளர் வைப்பானது, 2020 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத இறுதியளவில் ரூபா 1,156 பில்லியனுக்கு 13.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 454 பில்லியனாக காணப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள், 2020 ஆம் ஆண்டின் முதல் எட்டு

மாதங்களின் போது ரூபா 466 பில்லியன் வரையில் 2.6 சதவீதத்தினால் சற்று வளர்ச்சியடைந்துள்ளது. கடந்த வருடத்தின் மீளாய்வுக் காலத்தில் அறிக்கையிடப்பட்ட ரூபா 6.1 பில்லியன் வரிக்கு முன்னைய இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது தேசிய சேமிப்பு வங்கியின் வரிக்கு முன்னைய இலாபமானது ரூபா 5.4 பில்லியன் வரையில் 13 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளதோடு, இதற்கு கொவிட் 19 காரணமாக அறவிடமுடியாக் கடன் மற்றும் அதிகரித்த வட்டி வருமான இழப்பு என்பன பிரதான காரணமாக அமைந்தன.

### இலங்கை மின்சார சபை

இலங்கை மின்சார சபையின் 2020 ஓகத்து மாத இறுதியளவில் கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 162,033 மில்லியன் வருமானமானது 2.3 சதவீதத்தினால் ரூபா 158,295 மில்லியன் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு நாடு முடக்கப்பட்ட காலப் பகுதியினுள் கைத்தொழில், பொதுத் தேவைப்பாடுகள் மற்றும் ஹோட்டல் துறையில் மின்சாரத்திற்கான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. மீளாய்வுக் காலப் பகுதியினுள் நேரடி மின்னுற்பத்திச் செலவினம், 2019 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலத்தில் அறிக்கையிடப்பட்ட ரூபா 162,089 மில்லியனோடு ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 125,334 மில்லியனுக்கு 22.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அதன் பிரகாரம், நீர்:அனல் (எரிபொருள்): அனல் (நிலக்கரி): பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் காற்றாலை மின்னுற்பத்திக் கலவையானது, 2019 ஆம் ஆண்டில் பதிவாகிய 17:37:38:9 என்ற விகிதத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 22:28:41:9 வரையில் சாதகமாக மாற்றமடைந்ததன் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட கிலோ வோட் மணித்தியாலமொன்றுக்கான ரூபா 23.61 அலகொன்றிற்கான செலவினத்துடன் ஒப்பிடுகையில், 2020 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் கிலோ வோட் மணித்தியாலமொன்றுக்காக ரூபா 20.63 இற்கு அலகொன்றிற்கான செலவினம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் விளைவாக, 2019 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலத்தில் அறிக்கையிடப்பட்ட ரூபா 63,755 மில்லியனோடு ஒப்பிடுகையில் மீளாய்வுக் காலகட்டத்தில் இலங்கை மின்சார சபையின் தொழிற்பாட்டு நட்டமானது ரூபா 31,724 மில்லியனுக்கு மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப் பகுதியின் போது 50.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

**அட்டவணை 3.1 :** மின்னுற்பத்திக் கொள்ளளவு வகுதி

| | 2020 சனவரி - ஓகத்து (தற்காலிகமானது) | | |
|---|---|---|---|
| | நிறுவப்பட்டுள்ள கொள்திறன் | மின்னுற்பத்தி | |
| | | மொத்த மின்னுற்பத்தி | கி.வோ.மணி |
| | மெ.வோ | | |
| நீர் மின்னுற்பததி | 1,399 | 22% | 2,334 |
| அனல் மின்னுற்பத்தி இ.மி.ச. எரிபொருள் | 654 | 10% | 1,069 |
| அனல் மின்னுற்பத்தி ஐ.பி.பி எரிபொருள் | 704 | 18% | 1,962 |
| அனல் மின்னுற்பத்தி – நிலக்கரி | 900 | 41% | 4,381 |
| என்.சி.ஆர்.இ மற்றும் காற்று | 659 | 9% | 1,060 |
| **மொத்தம்** | **4,316** | **100%** | **10,806** |

மூலம்: இலங்கை மின்சார சபை மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

எரிபொருள் விலை நிலைப்படுத்தல் நிதியத்தின் மூலம் இலங்கை மின்சார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதி ஒத்துழைப்பு (ரூபா 48 பில்லியன்) காரணமாக 2019 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மீளாய்வுக் காலப் பகுதியில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய சுயாதீன மின்னுற்பத்தியாளர்களுக்கு இலங்கை மின்சார சபையினால் செலுத்தப்பட்ட கொடுப்பனவானது 41.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. ஆயினும், இக்காலப் பகுதியினுள் மின் பட்டியலினைத் திரட்டும் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்களவில் தாமதமடைந்ததன் காரணமாக 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாத இறுதியளவில் அரச வங்கிகளுக்கு செலுத்த வேண்டியிருந்த நிலுவைக் கடப்பாடானது 2019 ஆண்டு திசெம்பர் மாத இறுதியளவில் பதிவாக்கிய ரூபா 89,420 மில்லியன் (கருத்திட்டக் கடன்கள் நீங்கலாக) நிலுவைத் தொகையுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டின் முதல் 08 மாதங்களின் இறுதியில் அது ரூபா 103,792 மில்லியன் வரையில் மேலும் அதிகரித்துள்ளது.

## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

இலங்கைப் பெற்றொலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை அளவான 2019 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலப்பகுதியில் பதிவாக்கிய 4,211 மில்லியன் லீற்றருடன் ஒப்பிடுகையில், 2020 முதல் எட்டு மாதங்களில் 3,367 மில்லியன் லீற்றர்களுக்கு 20 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. அவ்வாறே, கூட்டுத்தாபனத்தின் மீளாய்வுக் காலத்தின் போதான வருமானம் ரூபா 96 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்துள்ளதோடு, 2019 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் பதிவாக்கிய ரூபா 397.6 பில்லியனோடு ஒப்பிடுகையில் விற்பனைச் செலவினமானது, ரூபா 311 பில்லியனுக்கு 22 சதவீதத்தினால் 2020 ஆம் ஆண்டின் முதல் 08 மாதங்களின் போது வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மீளாய்வுக் காலத்தின் போது தொழிற்பாட்டு இலாபமொன்றினைப் பதிவுசெய்வதற்கு முடிந்துள்ள போதிலும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகையும் அந்நியச் செலாவணி விகித மாற்றத்துடன் வலுவான தொடர்பினைக் கொண்டுள்ளதன் காரணமாக 2020 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த நட்டம் ரூபா 4.4 பில்லியனாகக் காணப்பட்டது. மசகு எண்ணெய்ப் பீப்பாய் ஒன்றிற்கான சராசரி விலை ஐ.அ.டொ.43 இற்கு குறைவாக இருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டின் முதல் 08 மாதங்களின் போது இலங்கை பெற்றொலியக் கூட்டுத்தாபனத்தின மொத்த இறக்குமதிச் செலவினம் அண்ணளவாக ஐ.அ.டொ. 1,126 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. அரசாங்கம் எரிபொருள் விலை நிலைப்படுத்தல் நிதியத்தினை தாபித்ததன் காரணமாக உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலியப் பொருட்களுக்காக நிலையான விலையயொன்றினைப் பேணுவதற்காக உலக சந்தையில் எதிர்கால ஏற்படமுடியுமான எரிபொருள் விலை ஏற்ற இறக்கங்கள் இந்த நிதியத்தின் மூலம் உள்ளீர்க்கப்படுவதற்கும் எதர்பார்க்கப்படுகிறது.

ஆயினும், நீண்ட காலமாக செலவின மீட்பு விலையிடல் பொறிமுறையொன்று இல்லாமை காரணமாக, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் திரட்டிய இழப்பானது 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாத இறுதியில் ரூபா 341.6 பில்லியன் வரையில் அதிகரித்து, நிறுவனத்தின் தொழிற்பாடு மற்றும் ஐந்தொகை என்பனவற்றில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாத இறுதியில் வர்த்தக ரீதியாக கிடைக்பெற வேண்டியவைகள் ரூபா 159 பில்லியனாக காணப்பட்டது. எவ்வாறாயினும், எரிபொருள் விலை நிலைப்படுத்தல் நிதியத்தின் மூலம் நிதி மாற்றல் செய்யப்பட்டதன் காரணமாக அரச வங்கிகளுக்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாத இறுதியில் செலுத்துவதற்கு காணப்பட்ட ரூபா 566 பில்லியன் நிலுவைக் கடனானது 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் இறுதியின் போது ரூபா 519 பில்லியன் வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபை

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது, 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் மொத்த குழாய் நீர் உள்ளடக்கம், பாதுகாப்பான குடிநீர் வழங்கல் உள்ளடக்கம் மற்றும் குழாய் மூலமான கழிவுநீர் அகற்றலின் உள்ளடக்கம் என்பனவற்றினை அடையப்பெற இலக்காகக் கொண்ட முறையே 52.1 சதவீதம், 92.2 சதவீதம் மற்றும் 2.07 சதவீதம் என்பன இற்றை வரையில் முறையே 60 சதவீதம்,91.7 சதவீதம் மற்றும் 3.3 சதவீதம் என்ற அளவில் பதிவுசெய்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் முன்னைய வருடத்தின் முதல் 08 மாதங்களின் போது அறிக்கையிடப்பட்ட ரூபா 16,084 மில்லியன் வருமானத்திற்கு எதிராக 2020 ஆம் ஆண்டின் முதல் 08 மாதங்களின் போது ரூபா 16,824 மில்லியனினை சபையானது அதன் வருமானமாக அறிக்கையிட்டுள்ளது. விற்பனைச் செலவினத்தினத்தில் ஏற்பட்ட அண்ணளவான வீழ்ச்சி காரணமாக ரூபா 7,693 மில்லியனினை மொத்த இலாபமாக பதிவுசெய்வதற்கு சபைக்கு முடிந்துள்ளது. முன்னைய வருடத்தின் இதே காலப்பகுதியுடன் இதனை ஒப்பிடுகையில் இது 10.8 சதவீத அதிகரிப்பொன்றினைப் பிரதிபலிக்கின்றது. 2019 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியின் போது ஏற்பட்ட ரூபா 512 மில்லியன் தொழிற்பாட்டு நட்டத்துடன ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டின் முதல் 08 மாதங்களின் போது ரூபா 179 மில்லியனினை தொழிற்பாட்டு இலாபமொன்றினை சபைக்கு பதிவுசெய்வதற்கு முடிந்துள்ளது.

2020 ஆம் ஆண்டின் முதல் 07 மாதங்களின் போது சபையினால் வழங்கப்பட்ட நீர் இணைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 4 சதவீதத்தினால் அதிகரித்து, 2.48 மில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், குறித்த 07 மாதங்களின் போது வருமானமல்லாத நீர் 0.7 சதவீத வளர்ச்சியொன்றுடன் 24.91 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது.

மேலும், நகர்புற நீர் வழங்கல் கருத்திட்டங்களை 50 சதவீதமும், கிராமிய நீர் வழங்கல் கருத்திட்டங்களை 75 சதவீதமும் சிறுநீரக நோய் தணிப்புக் கருத்திட்டங்களை 100 சதவீதமும் உள்ளடக்குவதற்கா உடன்பட்ட கடன் சேவை கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக இற்றை வரையில் பொதுத் திறைசேரியானது ரூபா 2,027 மில்லியன் பங்களிப்பொன்றினை வழங்கியுள்ளது.

**அட்டவணை 3.2 :** பிரதான 52 அரசுடமைத் தொழில்முயற்சிகளின் இலாபமீட்டல் தன்மை

ரூபா மில்.

| நிறுவனம் | இலாபம்/ (நட்டங்கள்) | | இலாபம்/ (நட்டங்கள்) |
|---|---|---|---|
| | 2018 | 2019** | 2020.08.31 அன்றுள்ளவாறு |
| இலங்கை வங்கி | 33,416 | 29,685 | 12,881 |
| மக்கள் வங்கி | 24,406 | 19,666 | 6,343 |
| தேசிய சேமிப்பு வங்கி | 7,941 | 10,462 | 5,449 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 480 | 465 | 189.2 |
| வீடு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | 629 | 774 | -788 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 2,103 | 1,344 | -575 |
| ஊழியர்கள் நம்பிக்கை நிதிய சபை | 18,292 | 20,570 | 21,344 |
| இலங்கைக் காப்புறுதிக் கூட்டத்தாபனம் | 13,399 | 18,976 | 3,601 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 3,289 | 3,009 | 6,203.70 |
| இலங்கை ஏற்றுமதி கடன் காப்பறுதிக் கூட்டுத்தாபனம் | 419 | 277 | 167.4 |
| விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதிச் சபை | 612 | 411 | -158 |
| இலங்கை மின்சார சபை | -30,458 | -85,411 | -31,724 |
| இலங்கைப் பெற்றொலியக் கூட்டுத்தாபனம் | -106,143 | -11,835 | -4,417 |
| இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை | 7,534 | 15,777 | 7,483 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | -517 | -1,177 | 179 |
| விமான நிலையம் மற்றும் விமான நிலையச் சேவைகள் (இலங்கை) லிமிட்டெட் | 10,458 | 15,222 | -688 |
| சிறிலங்கன் எயார்லைன்ஸ் | -17,214 | -44,023 | -36,387 |
| இலங்கைப் போக்குவரத்துச் சபை | 1,295 | 1,556 | -1,175 |
| அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | -1,337 | -954 | -598.4 |
| மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம் | 531 | 340 | -93.4 |
| அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் | 18 | 11 | -264.1 |
| மில்கோ (தனியார்) லிமிட்டெட் | -606 | -619 | -55.7* |
| தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | -589 | -510 | -69* |
| இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம் | -76 | -239 | -112 |
| ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை | -320 | -452 | -250.2 |
| குருநாகல பெருந்தோட்ட கம்பனி | 211 | 120 | 161 |
| சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி | -35 | 89 | 178 |
| களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை | -7 | -53 | -0.6 |
| இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் | 18 | 43 | -17.8* |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கனிய மணல்கள் கம்பனி | 621 | 2,271 | -296 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை லங்கா பொஸ்பேற் கம்பனி | 16 | 28 | 29.2 |
| வரையறுக்கப்பட்ட கஹடகஹ கிறபைற் லங்கா நிறுவனம் | 24 | 31 | -1.03 |

**அட்டவணை 3.2 :** பிரதான 52 அரசுடமைத் தொழில்முயற்சிகளின் இலாபமீட்டல் தன்மை

ரூபா மில்.

| நிறுவனம் | இலாபம்/ (நட்டங்கள்) | | இலாபம்/ (நட்டங்கள்) |
|---|---|---|---|
| | 2018 | 2019** | 2020.08.31 அன்றுள்ளவாறு |
| அபிவிருத்தி லொத்தர் சபை | 2,735 | 2,897 | 1,711 |
| தேசிய லொத்தர்கள் சபை | 1,038 | 1,323 | 866 |
| அரச மருந்தாக்கல்கள்உற்பத்திக் கூட்டுத்தாபனம் | 360 | 592 | 838 |
| இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் | 33 | 3.1 | -4.8 |
| அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம் | 1,685 | 2,176 | 675 |
| சிறி ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை | 123 | -94 | 54 |
| வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் | -622 | -597 | -420 |
| இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | 190 | -467 | -330 |
| இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | -20 | -29 | -12 |
| இலங்கை கைப்பணிப்பொருட்கள் சபை | 22 | 123 | -68 |
| அரச மரக் கூட்டுத்தாபனம் | 422 | 317 | -119 |
| அரச வியாபார கூட்டுத்தாபன பொது வர்த்தக கம்பனி | 88 | -29 | -34 |
| லங்கா சதோச நிறுவனம் | -2,250 | -1,781 | -1,021 |
| அரச அச்சு கூட்டுத்தாபனம் (ஆ) | -406 | -169 | -82 |
| இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | 17 | -28 | -40* |
| இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம் | 3 | 20 | -65.1* |
| வரையறுக்கப்பட்டஇலங்கை உரக் கம்பனி | 39 | 120 | 31 |
| வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் பேர்டிலைஸர் கம்பனி | 290 | 306 | 44 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல் டெவலபர்ஸ் பீ.எல்.சி. | -126 | -361 | -15 |
| இலங்கை சீனி கம்பனி | 144 | -1,308 | 1,007 |
| **மொத்தம்** | **-27,825** | **-1,132** | **-10,446.60** |

மூலம்: அரசுடமை வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

* 2020.07.31 அன்றுள்ளவாறான இலாபமீட்டல் தன்மை

** தற்காலிகமானது

**அட்டவணை 3.3 :** அரசுடமைத் தொழில்முயற்சிகளின் அறவீடுகள் / பங்கிலாபம்

ரூபா.மில்

| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020. 08.31 இல் |
|---|---|---|---|---|---|
| **அறவீடு** | **92,338** | **50,447** | **37,230** | **22,833** | **5,081** |
| தேசிய சேமிப்பு வங்கி | 12,026 | 3,865 | 500 | 2,000 | 1,000 |
| இலங்கை வங்கி | 18,000 | 12,000 | 4,500 | - | - |
| மக்கள் வங்கி | 8,000 | 5,000 | 3,200 | 2,200 | 1,500 |
| தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 28,000 | 22,800 | 21,850 | 8,950 | |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 10,000 | - | - | - | - |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 10 | 25 | - | - | - |
| பிராந்திய அபிவிருத்தி வங்கி | 88 | - | - | 169 | - |
| அரச மரக் கூட்டுத்தாபனம் | 175 | 100 | 100 | 50 | - |
| அரச மருந்தாக்கல்கள் உற்பத்தி கூட்டுததாபனம் | 65 | 45 | 50 | - | - |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 2,500 | 2,100 | 2,750 | 3,268 | 500 |
| புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் | 900 | 1,500 | 1,700 | 2,300 | |
| தேசிய இரத்திக்கற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபை | 175 | 100 | 25 | 25 | - |
| இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | - | - | | | - |
| இலங்கை மின்சார சபை | 8,000 | - | - | - | - |
| முதலீட்டுச் சபை | 115 | 220 | 250 | 250 | - |
| தேசிய லொத்தர் சபை | 550 | - | - | - | - |
| பிணையங்கள் மற்றும் பரிவர்தனை ஆணைக்குழு | - | - | - | 53 | - |
| இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 25 | - | 15 | 15 | - |
| மத்திய பொறியியல் மதியுரைப் பணியகம் | 25 | 25 | 25 | 25 | - |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணியகம் | 1,500 | 1,000 | 1,000 | 500 | - |
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை | 768 | 800 | 800 | 800 | - |
| அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | 216 | 222 | - | - | - |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையம் | 200 | 160 | 165 | 200 | - |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 1,000 | 185 | 200 | 650 | - |
| தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | - | 300 | 100 | 50 | - |
| இலங்கை சுற்றுளா அபிவிருத்தி அதிகார சபை | - | - | - | 200 | - |
| இலங்கை நில மீட்பு மற்றும் மேம்பாட்டு ஆணைக்குழு | - | - | - | 200 | - |
| இலங்கை துறைமுக அதிகார சபை | - | - | - | 900 | - |
| தேசிய மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகார சபை | - | - | - | 29 | 81 |
| **பங்கிலாபங்களள** | **15,821** | **3,550** | **4,598** | **5,024** | **2,407** |
| தேசிய சேமிப்பு வங்கி | 60 | 60 | 60 | 60 | 60 |

**அட்டவணை 3.3 :** அரசுடமைத் தொழில்முயற்சிகளின் அறவீடுகள் / பங்கிலாபம்

ரூபா.மில்

| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020. 08.31 இல் |
|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | 346 | 346 | 346 | 346 | 346 |
| மக்கள் வங்கி | 316 | 316 | 316 | 316 | 316 |
| லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | 36 | 41 | 41 | - | - |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 2 | 2 | 1 | 0.8 | 1 |
| இலங்கை சேமிப்பு வங்கி | - | - | 86 | - | - |
| இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 11,857 | 503 | 1,856 | 1,720 | 695 |
| விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகள் | 1,500 | 850 | 300 | 500 | - |
| இலங்கை கனிப்பொருள் மணல்கள் | - | - | 35 | 130 | - |
| இலங்கை பொஸ்பேற் லிமிடட் | - | 8 | 5 | 7 | - |
| சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | - | 10 | 12 | - | - |
| லங்கா லேலேன்ட் லிமிடட் | 34 | 35 | 45 | 13 | 2 |
| றக்னா ஆரக்'க லங்கா லிமிடட் | - | - | 40 | 37 | - |
| லங்கா பேர்டிலைஸர் | 116 | 90 | 21 | 15 | - |
| வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் பேர்டிலைஸர் கம்பனி | 25 | 12 | 20 | 10 | - |
| பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி | - | 8 | 11 | - | 10 |
| எஸ்.ரி.சி ஜெனரல் ட்ரேடிங்கம்பனி | 5 | - | - | - | - |
| இலங்கை டெலிகொம் பீ.எல்.சீ | 795 | 795 | 795 | 947 | 947 |
| டீ லா றூ லிமிடெட் | 62 | 79 | 106 | 133 | - |
| இலங்கை மின்சார தனியார் கம்பனி | 152 | 218 | 305 | 500 | - |
| இலங்கை கைத்தொழில் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | 47 | 55 | 78 | 82 | - |
| திறன்கள் அபிவிருத்தி நிதியம் | - | - | - | - | - |
| சிலோன் எக்றோ இன்டஸ்றீஸ் | 12 | 12 | 19 | 23 | 30 |
| லங்கா லொஜிஸ்ரிக் லிமிட்டெட் | 5 | - | 1 | - | - |
| இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் | 438 | - | - | - | - |
| பெருந்தோட்டக் கம்பனிகள் | 10 | 103 | 95 | 172 | - |
| ஏனையவை | 3 | 7 | 4 | 12 | - |
| **மொத்தம்** | **108,159** | **53,997** | **41,828** | **27,857** | **7,488** |

மூலம்: அரசுடமை வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

# 04

# 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான அடிப்படைகள்

## 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான அடிப்படைகள்

2020-21 ஆம் ஆண்டிற்குரிய வரவுசெலவுத் திட்டத்தில் உள்ள பேரண்டப் பொருளாதார மற்றும் அரசிறை மதிப்பீடுகள் வரவுசெலவு திட்டம் தயாரிக்கும் நேரத்தில் காணப்பட்ட அனுமானங்கள், பகுப்பாய்வு மற்றும் பணியாட் தொகுதியின் தற்றுணிபுகள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இது மொத்த உள்நாட்டு உற்பத்தி, பணவீக்கம், வெளித் துறை முன்னேற்றங்கள் மற்றும் வேலையின்மை போன்ற மதிப்பீடுகளுக்குப் பயன்படுத்தப்படும் பேரண்டப் பொருளாதார குறிகாட்டிகளின் விவரங்களையும், மதிப்பீடுகளின் உணர்திறனை வழங்கும் அதே சமயம் வருவாய் மற்றும் செலவினங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அனுமானங்களையும் வழங்குகிறது.

## மொத்த உள்நாட்டு உற்பத்தி

உலகப் பொருளாதாரத்தில் முன்னரில்லாத சுருக்கம் மற்றும் உள்நாட்டு பொருளாதாரத்தில் அதன் கசிவு விளைவுகள் ஆகியவை, பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகளில் கொவிட்-19 தொற்றுநோயின் தாக்கத்துடன் இணைந்து 2020 ஆம் ஆண்டில் இலங்கை பொருளாதாரத்தின் மந்தநிலைக்கு அழுத்தங்களை திணிக்கிறது. உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 2021 ஆம் ஆண்டில் 5.0 சதவீதம் வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2020 ஆம் ஆண்டில் வளர்ச்சியில் மந்தநிலை காணப்பட்ட போதிலும், நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையுடன் கூடிய பேரண்டப் பொருளாதார அடிப்படைகள் ஒரு விரிதிறனை வெளிப்படுத்துகின்றமையால் 2021 ஆம் ஆண்டில் பொருளாதாரம் மீண்டெழும் என எதிர்பார்க்கப்படுகிறது. வரி முறைமையை எளிமைப்படுத்துவதோடு 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அரசிறை மற்றும் நாணயக் கொள்கை தூண்டுதலும் 2021 ஆம் ஆண்டில் 5.0 சதவீத பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும். இதற்கு அரசிறை திரட்டல் வழிமுறை ஒத்துழைப்பதுடன் நுகர்வோர் விலை பணவீக்கம் 2020-21 ஆம் ஆண்டில் இலக்கு எல்லைகளுக்குள் காணப்படும். கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை கைத்தொழில் வலய திட்டம் மற்றும் எறாவூர் துணிப் பூங்கா மற்றும் பிற பாரிய செயற்திட்டங்களுக்காக 2021 ஆம் ஆண்டு முதல் அதிகரிக்கவுள்ள வெளிநாட்டு நேரடி முதலீடுகள் இலங்கை பொருளாதாரத்தில் உலகளாவிய நம்பிக்கைக்கு புத்துயிரளிக்கச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2020-21 ஆண்டிலிருந்து தூரநோக்குடைய கொள்கை மறுசீரமைப்புக்களின் நடைமுறைப்படுத்தலோடு கொள்கை உறுதிப்பாடுகள் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையின் பின்னணியில் தெற்காசியா மற்றும் ஆசிய பிராந்தியத்தில் இலங்கை மீண்டும் ஒரு முக்கிய பாத்திரமாக தோற்றமளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கேள்விப் பகுதியைப் பொறுத்தவரையில் தனியார் மற்றும் அரசாங்கத்தின் இறுதி நுகர்வு செலவினங்கள், தேறிய ஏற்றுமதிகள் மற்றும் மொத்த நிலையான மூலதன உருவாக்கம் ஆகியவை 2021 ஆம் ஆண்டின் வளர்ச்சிக்கு உந்துததலாக விளங்கும் எனவும் எதிர்வுகூறப்படுகிறது.

உகந்த காலநிலை நிலைமைகளின் பரவலுடன், தெளிவான வழிகாட்டப்பட்ட கொள்கை முன்னுரிமைகள் இணைந்து விவசாய உற்பத்தி∴ ஏற்றுமதிகளை மீட்டெடுப்பதன் ஊடாக விவசாயத் துறை அதன் வளர்ச்சி வேகத்தை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிற முக்கிய துறைகளுக்கிடையில், தயாரிப்புக் கைத்தொழில் மற்றும் கட்டுமானத் துறை ஆகியவற்றின் சாத்தியமான வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில், கைத்தொழில் துறையானது விரைவில் ஒரு புதிய பாதையில் நடுத்தர காலத்திற்கு நிலைபெறக்கூடும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகப்பெரிய பங்களிப்பு செய்யும் சேவைத் துறையானது தகவல் தொடர்பு தொழில்நுட்பம், போக்குவரத்து, நிதி சேவைகள் மற்றும் நிலைச் சொத்து (ஆதன விற்பனை) ஆகிய துறைகளின் நேர்மறையான பங்களிப்புடன் மேலும் விரிவடைய உள்ளது. சேவைத் துறையின் விரிவாக்கத்திற்கு நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகள் வினையூக்கிகளாக விளங்குகின்றன.

## நுகர்வோர் விலைகள்

பொருட்களின் கிடைப்பனவு மற்றும் மிதமான விலைகளை உறுதிப்படுத்துவதற்காக சந்தைப்படுத்துவோரை ஒழுங்குபடுத்தும் அதே நேரத்தில் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தல், இறக்குமதி தீர்வை, விசேட வியாபார பண்ட அறவீடு, குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச விலை உச்சவரம்புகள், உத்தரவாத விலைகள், இறக்குமதி கட்டுப்பாடுகள் உள்ளிட்ட வியாபார மற்றும் அரசிறைக் கருவிகள் ஊடாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை உறுதிப்படுத்த அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நடுத்தர காலத்திற்கு நிலையான பெட்ரோலிய விலைகளுக்கு உதவுவதற்காக எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது. நாணயக் கொள்கை நடவடிக்கைகளுடனான இத்தகைய முன்னேற்றங்களுடன், பணவீக்கமானது 2021 ஆம் ஆண்டில் சுமார் 4-6 சதவிகிதம் வரை நடு-ஒற்றை இலக்கங்களில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடுத்தர காலப்பகுதியில் மேம்படுத்தப்பட்ட அரசிறை இடைவெளி, அதிகரித்த உள்நாட்டு வழங்கல் மற்றும் விநியோக வலையமைப்பு மற்றும் நாணயக்

கொள்கை நடவடிக்கைகள் என்பன குறிக்கப்பட்ட பணவீக எல்லைக்குள் நிலைநிருத்த எதிர்பார்க்க படுகின்றது.

### வேலைவாய்ப்பும் வேலையின்மையும்

கல்வி மற்றும் வேலைவாய்ப்பு மட்டத்திற்கு இடையிலான பொருந்தாத தன்மையைக் குறைக்கும் அதே சந்தர்ப்பத்தில் பெண்கள், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் அதிகரிப்பதன் ஊடாக 2021 ஆம் ஆண்டில் வேலையின்மை 4.0 சதவீதத்திற்கு கட்டுப்படுத்தப்படவுள்ளது. எனவே, திறனற்ற தொழிலாளர் இடம்பெயர்வைக் குறைப்பதோடு சிறந்த வேலைவாய்ப்புக்காக கல்வி முறைமையை மாற்றுவதற்கும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கைப்பற்றவும் மற்றும் திறன்வாய்ந்த இடம்பெயர்வை மேம்படுத்தவும் 2021 முதல் 2030 வரையான காலப்பகுதியை “திறன் மேம்பாட்டு தசாப்தமாக” அரசாங்கம் அறிவித்துள்ளது. கொவிட்-19 பரவலானது ஒன்லைன் தளங்களை பயன்படுத்துவதற்காக நாட்டை நிர்ப்பந்தித்துள்ளமை எதிர்கால கல்வி மற்றும் வேலைவாய்ப்பு விரிவாக்கத்திற்கான மூலதனமாக்கலாக கருதப்படுகிறது. இயங்குதிறனுள்ள தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றலை அதிகரிப்பதானது பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய உந்துதலாக இருக்கின்றமையால் பிற வசதிகள் மத்தியில் குழந்தை பராமரிப்பு மற்றும் தொழில்பயிற்சிகள் உட்பட மலிவு வசதிகளுக்கான வேலைக்கான அணுகல் போன்றவை விருத்தி செய்யப்படும்.

### வெளியகத் துறை

இறக்குமதிகளை இயல்பாக்குகின்ற அதே நேரத்தில் ஏற்றுமதிகளின் அதிகரிப்புடன் 2021 ஆம் ஆண்டில் இலங்கையின் வெளித் துறை மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக வர்த்தக பற்றாக்குறையிலும் மேம்பாட்டினை எதிர்பார்க்க முடியும். போக்குவரத்து சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம்.்.வணிகச் செயல்முறை புறச் செய்விப்பு செயற்பாடுகள் போன்றன 2021 ஆம் ஆண்டில் விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதார நடவடிக்கைகளை இயல்புநிலைக்கு கொண்டுவருவதன் ஊடாக சுற்றுலா மற்றும் தொழிலாளர்களின் பணம் அனுப்புகைகளில் முன்னேற்றம் ஏற்படும். எனவே, வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை நடுத்தர காலத்திற்கு மேம்படும் எனக் கருதப்படுகிறது. பெரிய அளவிலான செயற்திட்டங்கள் தொடங்கப்படுவதனால் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் மீளுருவாக்கப்படுவதுடன் 2020-21 ஆண்டு காலப்பகுதியில் நிலையான பரிமாற்ற வீதமும் எதிர்பார்க்கப்படுகிறது.

### நாணய திரட்சி

2021 ஆம் ஆண்டில் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சியுடன் இணங்கும் ஒரு மட்டத்தை பணம் வழங்கல் பேணும் என கருதப்படுகிறது. அரசுடைமை தொழில் முயற்சிகளின் செயலாற்றுகை மேம்பாட்டுடன் சேர்ந்து அரசிறை திரட்சியும் சந்தையில் அதிக வளங்களை உட்செலுத்தவுள்ளன. இது 2021 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்படும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு தனியார் துறை முதலீட்டிற்குப் பயன்பட முடியும்.

### வருமானம்

வருமான மதிப்பீடுகளை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட ஊகங்கள் பின்னிணைப்பு III இல் தரப்பட்டுள்ளன.

### செலவினம்

செலவின மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான அடிப்படைகள் பின்வருமாறு:

- ஊழியர்களின் வருடாந்த சம்பள அதிகரிப்புக்கள் காரணமாக சம்பளங்களின் சாதாரண வருடாந்த அதிகரிப்பினை அனுமதிக்கும் அதே நேரத்தில் சம்பளம் மற்றும் ஊதியங்களுக்கான செலவு மதிப்பீடுகள் அரச துறையில் சுமார் 1.3 மில்லியன் ஊழியர்கள் இருப்பர் என்ற அனுமானத்தின் அடிப்படையில் அமைந்திருக்கின்றன,

- 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே கிட்டத்தட்ட 25,000 மற்றும் 28,000 ஓய்வு பெறவுள்ளோரது பகுதியளவு தாக்கத்துடன் ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கான செலவினங்களை மதிப்பிடுவதில் ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை 659,000 என அனுமானிக்கப்பட்டுள்ளது.

- பணவீக்கத்தில் எதிர்பார்க்கப்படும் வீழ்ச்சியின் விளைவாக 2020 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் குறைந்த உள்நாட்டு வட்டி விகிதங்களின் மூலம் வட்டி கொடுப்பனவுகளில் குறைந்த அதிகரிப்பு காணப்படும்.

- நடுத்தர கால அரசிறை இலக்குகளை பூர்த்தி செய்வதற்காக பொது வசதிகள் சேவை மற்றும் வழங்கல்கள் முதலியவை மீதான செலவினங்கள் கண்டிப்பாக முகாமை செய்யப்படுவதன் மூலம் கட்டுப்படுத்தப்படும்.

- கொவிட்-19 தொற்றுநோயால் சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு வழங்கப்படும் பண மானியத்திற்கு மேலதிகமாக பாடசாலை

சிறார்கள் மற்றும் ஊனமுற்ற படைவீரர்களுக்கான உதவித் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் குடும்பங்களுக்கு மாற்றல்கள் மற்றும் உதவு தொகைகளின் வழங்கல் தொடரப்படும். விவசாய உதவி திட்டங்களுடன், விசேட தேவையுடைய மக்களுக்கான சமூக பாதுகாப்பு மற்றும் இலவச மருந்து, வறுமை ஒழிப்பு திட்டங்கள் போன்ற நலன்புரி திட்டங்கள் போன்றவையும் தொடரும்.

- அனைத்து துறைகளுக்கும் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

- அரசாங்க நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கான இடமாற்றங்கள் அவற்றின் செயலாற்றுகையில் வலுவான முன்னேற்றத்தின் எதிர்பார்ப்புடன், சாத்தியமான மட்டத்தில் பராமரிக்கப்படும்.

- பொருளாதார செயற்பாடுகளில் தனியார் துறையை ஊக்குவிக்கும் அதே நேரத்தில் போக்குவரத்து, நீர், கல்வி, சுகாதாரம் மற்றும் தொழிற்பயிற்சி முதலிய பொருளாதார மற்றும் சமூக உள்கட்டமைப்புகளில் அரசாங்க முதலீடு நடுத்தர காலத்திற்கு மேல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4-6 சதவீதத்தில் பேணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- அரசாங்க செலவினத்தில் தர மேம்பாட்டினை அதிகரிப்பதற்கும் வினைத் திறனற்ற செலவினங்களைக் குறைப்பதற்குமான முயற்சிகள் வலுப்படுத்தப்படும்.

- அபிவிருத்திச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது நகலாக்கத்தினைத் தவிர்ப்பதற்கும், வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் பயன்பாட்டினை சுமுகமாக செயற்படுத்துவதற்கும், நிரல் அமைச்சுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட முகவர் நிறுவனங்களுடன் நெருங்கிய ஒத்துழைப்பும் கண்காணிப்புப் பொறிமுறையும் பிரயோகிக்கப்படுகிறது.

- அரசிறை மற்றும் காசுப் பாய்ச்சல் முகாமைக்காக அர்ப்பணிக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைமைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

- செயலாக்கம், சேவை வழங்கல் மற்றும் சட்ட விதி ஆகிய நியதிகளின் அடிப்படையில் நிறுவன ரீதியான அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

## பெறுகைகள்

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விகிதத்திற்கான அரசாங்கத்தின் கடன் 2020 ஆம் ஆண்டிற்குள் 95.1. சதவீதம் வரை அதிகரிக்கவுள்ளதோடு அது 2021 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 96.3 சதவீதமாக விரிவடையும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விகிதத்திற்கான அரசாங்கத்தின் படுகடன் தொடர்ந்து வீழ்ச்சியடைவதினை உறுதி செய்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன்களின் சரியான கலவையொன்று பராமரிக்கப்படும். படுகடனைக் குறைப்பது என்பது அரசாங்க வருவாயை குறிப்பாக விரிவாக்க வரி வருவாயை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதமாக அதிகரிப்பதன் மூலமாகவும், வரவுசெலவு திட்ட செலவினங்களை கட்டுப்படுத்துவதன் மூலமாகவும், வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதன் மூலமாகவும் இருத்தல் வேண்டும். அரசாங்கத்தின் நிதித் தேவைகள் மிகக் குறைந்த செலவில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டு படுகடன் முகாமை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

## மதிப்பீடுகளுக்கான உணர்திறன்கள்

பொருளாதார எதிர்வுகள் பின்வரும் சவால்களுக்கு உணர்திறன் கொண்டதாக இருக்கலாம்:

